கதாரஞ்சினி மலர் 6.

வஸந்த சமுத்திரம்

ஓர்

இனிய துப்பறியும் தமிழ் நவீனம்.

இது

கோவை.—ஸ்ரீ.—இராமராவால்

வரையப்பட்டு,

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU • INDIA

திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீ வாணிவிலாச புஸ்தக சாலையாரால்

பிரசுரிக்கப்பட்டது.

1923.

[காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 12.]

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY UNCLE

—S. C. RAMASWAMY IYER AVERGAL—

District Munsiff.

"Far off thou art, but ever nigh
I have thee still and I rejoice
I prosper, circled with thy voice
I shall not lose thee, tho' I die!"

—LORD TENNYSON.

நூலாசிரியரின் குறிப்பு.

...சகர்களே!

...ன்றைப் பெரும்பான்மை தழுவியும் சிறு ...ழுவாமலும் வரையப்பட்டிருக்கும் "வசந்தசமுத்திரம்" ...ம் இந்த நவீனம் வெளிவருமுன், நாம் பல சஞ்சிகைகளில் பல ...வல்கள் வரைந்திருப்பதை வாசகர்கள் அறிவார்கள்.

...த நவீனத்தின் கதாநாயகராகிய ஸிம்ஹளநாதர் எனும் பெரிய துப்பறியும் சிங்கம், தாம் முன்னரே காதலித்திருந்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப்பதையறிந்து யோசித்துக்கொண்டிருக்கிறார். சில நாட்களுக்கு பிறகு ஜயஸிங் எனும் பரதேசி வருதலும், அவன் காதலும், 'திலகசமுத்திரம் என்பவள் தோன்றி, சில விஷயங்களை உரைத்தலும், பின்பு ஸிம்ஹளநாதர் அவளைக் காணும்படியாக நாகைக்குப் போதலும், அங்கு இறந்தவள் தோன்றுவதும், அவள் பின்னர் போய்விடுவதும், வசந்தமாலையினிமித்தம் துப்பறிபவர் இலங்கைத்தீவு செல்வதும், வைரக்கோட்டையின் ரகசியத்தை யறிதலும், மர்ம விஷயங்கள் வெளியாவதும் நாவலின்கண் விசாலமாக வரையப்பட்டிருக்கிறது.

இந்நாவலின்கண் காணப்படும் குற்றங்களைக் களைந்து, குணத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளும்படியாய் வேண்டுகிறோம்.

இன்னம் ஓரிரண்டு மாதங்களுக்குள் எம்மால் இப்பொழுது வரையப்பட்டிருக்கும் பெரிய இரண்டு நாவல்கள், "வாசவதத்தை அல்லது காதலால் விளைந்த கஷ்டம்"—(1) "குமுததளன் அல்லது இராஜமாளிகைச் சிமாட்டி"—(2) வெளிவரும்.

இதை வெளிக்கொணர்ந்த திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ வாணிவிலாச புஸ்தக சாலையாருக்கு எமது வந்தனம் மறத்தற்பாலது.

எமது நாவல்களையும் நாடகங்களையும் சஞ்சிகைகளின் மூலியமாய்த் தெரிந்து வாசிக்கும் நண்பர்கள் இந்த நாவலை நீட்டிய கரங்களுடன் வரவேற்று வாசிப்பார்கள் என்றே நாம் நினைக்கிறோம்.

நாவல் ஹவுஸ்,
கோயம்புத்தூர்
8—11—1922

கோ. ஸ்ரீ. இராமன்.

உள்ளுறை.

வசந்த சமுத்திரம்

அல்லது

இரண்டு ஜெகன்மோகினிகள்.

—— :o: ——

உ

[illegible]யசந்த-சமுத்திரம்

அல்லது

இரண்டு ஜெகன் மோஹினிகள்.

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல்.

அதிகாரம். 1.

பஞ்சத்தாண்டியோ?—பரம்பரையாண்டியோ?

அலைகடல் சூழ்ந்த அவனியின் கண்ணே கடல் ராசியின் பாதுகாப்பிலே மிகவும் கம்பீரமாய்ச் சிறந்து விளங்குவது இந்திய தேசம். பொன் விளையும் புனித பூமி யெனவும் கற்பக நாடெனவும் புகழ்ந்துரைக்கப்படுகின்ற பரத கண்டத்தினுள் பல சிறந்த நகரங்கள் உண்டு. அப்பேர்ப்பட்டவைகளுள் பாண்டியர்களுடைய நாடு மிகவும் உன்னத நிலைமையிலிருந்த காலத்தில், மதுரைமா நகரத்திலே நமது கதை நிகழ்ந்தது.

ஒரு நாள் மாலை சுமார் தீபம் வைக்கும் நேரத்தில் ஆனைக்கல் வீதியிலே யிருந்த ஒரு ஹோட்டலில் இரண்டு

மனிதர் அன்று மாலை வெளியான தினசரியைப் படித்துக் கொண்டும், பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் தாம் இருந்த அறையிலிருந்த பலகணியின் வழியாய் வீதியை பார்த்துக்கொண்டுமிருந்தார்கள். அழகிய தோற்றத்தைக் கொண்ட அவ்விருவருக்குஞ் சுமார் முப்பது வருஷங்கள் ளாகவே யிருக்கலாகும். அவர்கள் யாரெனில் ஒருவர் சென்னைப் பட்டணத்தில் வக்கீல் வேலைப்பார்த்து வரும் சித்திராஞ்சர். அவருடைய கீர்த்தியும் சீர்த்தியும் மிகவும் பிரபலமானது. அவர் தமது நண்பருடைய இஷ்டப்பிரகாரம் மதுரைக்கு வந்திருந்தார். அவருடைய நண்பர் துப்பறியும் உத்தியோகத்தைச் சென்னை கவர்னரிடமிருந்து பெற்று, தமது தொழிலை மிகவும் இரகசியமாக நடத்தி, போலீஸார் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லிக் கைநழுகவிட்ட பலகுற்றவாளிகளை மிகவும்சிரமத்தின்பேரில் கண்டு பிடித்துக் கொடுப்பதில் மிகவும்சாமர்த்தியம் வாய்ந்தவர். தமதுசுற்றத்தார் நடத்திவரும் "கமலவிலாஸ்" எனும் ஹோட்டலில் அவர் சில தினங்களாகத் தங்கியிருந்தார். அப்பொழுது சென்னையிலிருந்த தமது நண்பரையும் வரும்படி கூறியிருந்தார்.

அவர்கள் பேசியது பின் வருமாறு:—

ஸிம்ஹளநாதர்—நண்பரே! கடைசியில் இலங்கை இறைவருடைய பிரதான நியாயமந்திரியார் ஒரு பெரிய வஞ்சகக் கள்வன் என்பது வெளியாகி விட்டது. பல ஏழை மனிதர்களுடைய பணத்தை யெல்லாம் வாங்கிக் கொண்டு ஏமாற்றிவிட்டார். அதுவுமல்லாது அவர் அரசாங்க பொக்கிஷத்திலிருந்த ஒருகோடிரூபாய்க்கு மேலான பெருத்ததொகையையும் வாயில்போட்டுக்கொண்டுவிட்டார்

...ஞ்சத்தாண்டியோ-பரம்பரையாண்டியோ

சித்திரரஞ்சர் —நண்பா! இம்மாதிரியான மந்திரிகளை வைத்... ...ல் ராஜ்யம் பாழ்த்துப்போகும்

...யத்தில்வேலைக்காரன் ஒருவன் உட்பிரவேசித்து ...வருக்கும் மரியாதையாக வந்தனம் செய்துவிட்டு யாரோ சிங்களபாஷை பேசும் பரதேசி ஒருவன் ஹோட்டலுக்கு வந்திருப்பதாகவும் அவனுக்குத் தமிழ்ப் பாஷை பேசத் தெரியவில்லை யென்பதாகவும், ஆதலால் ஹோட்டலின் சொந்தக்காரர் சிங்களபாஷை பேசத்தெரிந்த ஸிம்ஹளநாதரை அழைத்துக்கொண்டு வரும்படிசொன்னதாகவும் சொல்ல, ஸிம்ஹளநாதர் தம் நண்பரைப் பார்த்து "நீங்களும் வருகின்றீரா?" எனக் கேட்க அவர் "அப்பா! நான் தினசரியை இன்னம் படித்து முடிக்கவில்லையாதலால் வரமுடியாது," என்றார்.

உடனே ஸிம்ஹளநாதர் வேலைக்காரனுடன் மெத்தையினின்று மிறங்கி பரதேசி தங்கியிருக்க விடப்பட்ட அறையினுட் சென்றார். வேலைக்காரன் பரதேசி அவ்வறையினுள் போடப்பட்ட நாற்காலியின்மீதமர்ந்திருப்பதைச் சொல்லி விட்டகன்றான்.

'பஞ்சத்தாண்டியோ? பரம்பரையாண்டியோ?' என்று சந்தேகிக்கத்தக்க அச்சிங்களப்பரதேசி, ஸிம்ஹளநாதரை கண்டு, அவரைநோக்கி "எனக்குத் தமிழ்பேசத்தெரியாது" என்று சிங்கள பாஷையிற் கூறினர்.

ஸிம்ஹளநாதர் —ஐயா! எனக்குச் சிங்களம் நன்றாய்ப் பேசத் தெரியுமாதலால், நான் உம்முடன் அந்தப் பாஷை

யிலேயே பேசுகிறேன். முதன் முறையாகத் தாங்கள் மதுரைக்கு வருவது இதுதானோ? தங்களுடைய பெயர் என்ன?

அப்பரதேசி:—என்னுடையபெயர் ஜயசிங் என்[illegible] பல வருஷங்களுக்கு முன்னே நான் இந்நகரத்திற்கு வந்திருக்கின்றேன்.

ஸிம்ஹளநாதர்—யாத்திரை காரியமாகவோ தாங்கள் இவ்வூருக்கு எழுந்தருளியது?

ஜயசிங்.—இல்லை, இல்லை. இந்தியாவை ஒரு முறை சுற்றிப்போகலா மென்றே யான் வந்தது.

ஸிம்ஹளநாதர் —ஓஹோ! அப்படியா? இலங்கையில் மாதம் மும்மாரி மழை பெய்கின்றதா?

ஜயசிங்.—ஏதோ பெய்கின்றது.

ஸிம்ஹளநாதர்.—அப்படியா?—சரி. இலங்கைத்தீவின் நியாயமந்திரி அமலாதித்தியர்—

ஜயசிங்—ஐயோ! அச்சண்டாளனைப்பற்றிப் பேசாதீர். அவன் என் பணத்தை யபகரித்ததல்லாமல், எனக்கு விரோதியாகவும் திரும்பிவிட்டான். அவன் பேச்செதற்கு?—தங்களுடைய பெயர் என்னவோ?

ஸிம்ஹளநாதர் தம்முடைய பெயரைக் கூறியதே,—உண்மைப் பெயரைக் கூறியதே—ஜயசிங் அதிக ஆச்சரிய மடைந்தார்.

பஞ்சத்தாண்டியோ-பரம்பரையாண்டியோ,

பின்னர் இருவரும் இலங்கையின் வளப்பங்களைப் பற்றிப் பேசியிருந்தனர்.

ஜயசிங் எனும் பரதேசி தன்னுடைய ஆகாரத்தைத் தன்னுடைய அறையிலேயே உட்கொண்டார்.

அன்றிரவு நடுநிசிக்குமேல் ஷிம்ஹளநாதருடைய அறையின் கதவு ஒரு வேலைக்காரனால் தட்டப்பட்டதும், ஷிம்ஹளநாதர் கதவைத்திறந்து, வேலைக்காரன் தட்டிய தன் காரணத்தைக் கேட்க, அவன் "ஐயா! இலங்கையி லிருந்து நேற்று மாலை வந்த ஜயசிங்கர் ஏதோ வியாதியால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறாராதலால், உம்மை அழைத்துப்போக வந்தேன்." என்றான். ஷிம்ஹளநாதர் தமது ஆடையைச் சரிபடுத்திக்கொண்டு பரதேசியார் இருந்த அறைக்குள் நுழைந்தார்.

மஞ்சத்தில் படுத்துக்கொண்டு, பார்ப்போர் பரிதபிக் கும் வண்ணமிருந்த ஜயசிங் மெல்லிய குரலில் தனது நண் பரை வரும்படிக் கூறினார்.

ஷிம்ஹளநாதர்—ஜயசிங்! தங்களுக்கென்ன உடம்பு? டாக்டர் ஒருவரை அழைத்து வரட்டுமா?

ஜயசிங்—அழைத்துவாரும்—என்று மிகுந்த வேதனைப் பட்டவராய்க் கைகளைப் பிசைந்தார்.

ஷிம்ஹளநாதருடைய நண்பர் ஒருவர் டாக்டர். அவ ரை அழைத்து வரும்படி வேலைக்காரனை ஷிம்ஹளநாதர் அனுப்ப, பத்து நிமிஷ நேரத்திற்குள் டாக்டரும் வந்து சேர்ந்தார்.

டாக்டர் நோயாளியைப் பரீக்ஷை செய்த பிறகு, அவர் ஸிம்ஹளநாதரைப் பார்த்து "நண்பரே! இவர் பல தடவை இந்நோயால் தாக்கப் பட்டிருக்கிறார். மிகவும் ஆபத்தான வியாதி அபினி அதிகமாய் இவர் சாப்பிட்டு வந்திருத்தல் வேண்டும் நோய் குணமடையாது என்று இவரிடம் சொல்லிவிடுங்கள்" என்றார்.

ஸிம்ஹளநாதர் — டாக்டர்! உண்மையை இவரிடம் உரைத்தால், இவர் தாம் பிழைக்கக் கூடுமென்று கொண்டிருக்கும் எண்ணமானது சிதறிப்போகும்.

டாக்டர்.—நண்பரே! யான் உண்மையையே உரைக்கும்படி சொல்லுகின்றேன். இவர் அதிக அபினி சாப்பிடும் வழக்கத்தைக் கையாடிய படியினால், இவருக்கு இவ்வித—ஆபத்தான நோய்—வந்துவிட்டது. காரியம் மிஞ்சி விட்டபடியால். இவர் தமது முடிவை அறிந்து கொள்வதே நலம்.

டாக்டருடைய வார்த்தைகளைக் கேட்டிருந்த சிம்ஹள நாதருடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அப் பரதேசி விசனமும் சிரிப்பும் ஒன்று சேர்ந்த குரலில் "ஆம்! நான் இறந்து போவேன் என்பதில் ஐயமேயில்லை நான் அவர்களிடமிருந்து தப்பிவிட்டேன்! நண்பரே! நீங்கள் என் விஷயத்தை அறிந்தால்,—அக்கொடிய, பயங்கர, நெஞ்சு திடுக்கிடக்கூடிய ரகசியத்தை அறிந்தால், எனது நற்குணத்தை அறியலாகும். என்னை இகழ்ந்துரைக்கும் பேதையரது வார்த்தைகளுக்கு செவி கொடுக்கமாட்டீர்!" என்று சிங்கள பாஷையில் கூறினார்.

ஸிங்ஹளநாதர்—இரகசியத்தை என்னிடம் கூறுங்கள்—என்றுரைத்து, நோயாளியை நோக்கினர்.

ஜயசிங்.—முடியாது! என்னுடையது பெரிய ஒரு ரகசியம்!—அவளுடைய ரகசியம்—இந்நாள்வரைக் காப்பாற்றி வந்த ரகசியம்—ஒருவரும் அறியக்கூடாத ரகசியம்!—என்றார்,

அச்சமயத்தில் டாக்டர் தமது நண்பரிடம், "இவர் இன்று மாலைக்குள் இறந்துவிடுவாராகையால், மருந்து கொடுக்கவேண்டிய அவசியமேயில்லை ஆதலால் நான் போய் வருகின்றேன்" என்ன, சிங்களநாதரும் அவரைப் போய்வரும்படி கூறினர் டாக்டர் சென்ற சிலவிநாடிகளாகியதும், சித்திராஞ்சர் அவ்வறையினுள் வந்து, சிங்களநாதரை நோக்கி "இவருக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று கேட்க, துப்பறிபவர் டாக்டர் கூறியதைக் கூறினர். பின்னர் வக்கீலும் துயிலச் சென்னர்.

அந்நோயாளி இறந்துவிடுவார் என்று டாக்டர் கூறியபடியால், சிங்களநாதர் அப்பரதேசி சிறிதுநேரத்திற்குமுன் கூறிய விஷயத்தை அறிய ஆவல் கொண்டவராய், நோயாளிக்கருகே தட்டு நாற்கலியை இழுத்துப்போட்டுட்கார்ந்து கொண்டு, நோயாளியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்நோயாளி அடிக்கடி மெல்லியகுரலில் ஏதோமனம் வெறுத்துக் கூறிக்கொண்டதைக் கேட்ட சிங்களநாதர் தம் மனத்தினுள் அப்பரதேசி தன்னுடைய விரோதிகளைக் கடவுள் தண்டிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டதாய் எண்ணினர்.

பஞ்சத்தாண்டியோ-பரம்பரையாண்டியோ.

காலை ஐந்துமணி சமயத்தில், கிழக்கில் வெள்ளி முளைக்கும்போது அந்நோயாளி, சிம்களநாதரைப் பார்த்து "அந்நியனாகிய என்னை இத்தனை அன்புடன் சேவைசெய்வதைப் பற்றி யான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன்" என்றார்.

ஸிம்ஹளநாதர்.—நான் அந்நியதேச மொன்றிலே வியாதி வாய்ப்பட்டுவிட்டால் எனக்கு அத்தேசத்தார் உதவி செய்யமாட்டார்களா? இதென்ன பிரமாத உதவி!

ஜயசிங்.—சாகுந்தருணத்திலே நல்ல ஸ்நேகம் ஏற்படுகிறதன்றோ?

ஸிம்ஹளநாதர்.—எப்படி?

ஜயசிங்.—எப்படியா? என் விஷயத்தை எடுத்துச் சிந்தியும்—எனக்கூறிச் சிறித்தார்.

சிம்களநாதர்.—உமது விஷயத்தையா?

ஜயசிங்.—ஆம். நான் யார் என்பதும் இன்னதொழிலான் என்பதும் உமக்குத் தெரியுமோ?

சிம்களநாதர்.—உம்முடைய பெயரை மட்டுமே யான் அறிவேன்.

ஜயசிங்—இவ்விடத்தில் யான் மாற்றிக் கொண்ட பெயரைமட்டுமே அறிவீர்கள். என்னுடைய உண்மைப் பெயரைத் தாங்கள் அறியீர்.

சிம்களநாதர்—ஆம். தங்களுடைய உண்மைப்பெயரை உரையும்.

பஞ்சத்தாண்டியோ-பரம்பரையாண்டியோ.

ஜயஸிங்—உரைக்கமுடியாது. முடியாததற்கு முக்கியமான காரணம் பல இருக்கின்றன. நான் இறந்த பிறகு, ஒருகால் என்னைப்பற்றி யறிந்துகொண்டால்,..................அறிந்து கொள்ளமாட்டீர்.

யாரோ ஒரு ஸ்திரீயினுடைய இரகசியம் அப்பரதேசியிடம் சிக்கியிருக்கிறது அவள் யார்? என்றெண்ணினார் சிங்களநாதர்

ஏழெட்டு நிமிஷங்களுக்குப் பிறகு அந்நோயாளி, சிங்களநாதரை நோக்கி "இச் சென்னைராஜதானியுள் தாங்கள் ஒருவரே எனக்கு நண்பர்—அதோ இருக்கும் தோல்பையில் பணம் இருக்கிறது. அதைக்கொண்டு வாரும்" என்றதே. சிங்களநாதர் அந்நோயாளி சுட்டிக்காட்டிய தோல்பையை எடுத்துவந்து நோயாளியிடம் கொடுக்க, ஜயசிங் அப்பையைத்திறந்து பத்து ஆயிர ரூபாய் நோட்டுகளையெடுத்து, தமது புது நண்பரிடம் கொடுத்தார்.

ஜயசிங்—தாங்கள் இதனைப்பரிசாக எடுத்துக்கொள்ள வேண்டியது—சரி—இன்னம் என்னிடம் ஐம்பதினாயிர ரூபாய் நோட்டுகள் இருக்கின்றன. யாராவது யான் இறந்த ஒரு வருஷத்திற்குள்ளாக உங்களிடம் வந்து பணத்தைக் கேட்டால், நீங்கள் பூராத் தொகையையும் கொடுங்கள். இல்லாவிட்டால், தாங்கள் தங்களுக்குப்பிரியப்பட்ட தொகையை ஏதாவது ஒரு ஆஸ்பத்திரிக்குக் கொடுத்து விடுங்கள்.—என்று கூறிவிட்டுச் சிறிதே சிந்தித்தார்.—சரி இப்பையினுள் சில தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. இவைகளை நீங்கள் இலங்கையிலுள்ள பாங்கி யொன்றில் காண்பித்து,

எனக்கு வரவேண்டிய பெருத்த தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சிம்களநாதர்.—நண்பரே! ஆண்டியைப் போற் காணப் படும்.........................

ஜயசிங்.—(இடைமறித்து) நான் ஆண்டியல்ல.

சிம்களநாதர்.—நானும் அப்படித்தான் நினைத்தேன்—சரி—தங்களுடைய சுற்றத்தார்................

ஜயசிங்.—சுற்றத்தார்! அப்பா! யாரவர்கள்? நாயினுங் கீழான முட்டாள்கள்!—ஆம்!—எனக்கும் இருக்கிறார்கள்!—என்று கோபத்தோடும் வெறுப்போடும் உறைத்தார்.

சிம்களநாதர்.—அவர்கள் இருக்கும் இடம் உங்களுக்குத் தெரியாதா?

ஜயசிங்.—தெரியாது! அவர்களை யான் அறியேன், தாங்கள் என்னுடைய நண்பராய் இருக்கும் பட்சத்தில்! யான் மரித்த பிறகு என்னைப்பற்றிச் சொல்லப்படும் அநியாய விஷயங்களைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டீர் என்று நான் நினைக்கிறேன்.—உண்மையில் என்னுடைய பெயர் ஜயசிங் அல்ல என்பதைத் தெரிவித்து விடுகிறேன், நான் உம்மிடம் பணம் அளித்தது ஒருவரும் அறியாமல் இருக்கட்டும்.—என்று கூறிவிட்டு, சிம்களநாதரை உற்று நோக்கினன். ஹா! அதில் அச்சமும் திகிலும் பயமும் அதைரியமும் காணப்பட்டன!

அன்று மாலை ஆறுமணி சமயம் ஸிம்ஹளநாதர் மறுபடியும் நோயாளியின் அறைக்குச்செல்ல, அப்பரதேசி அவ

ரைத் தனதருகே இருந்த ஒரு நாற்காலியில் உட்காரும்படி சொன்னார்.

ஜயஸிங்:—தாங்கள் தயவுசெய்து ஒருவேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்.

ஸிம்ஹளநாதர்:—ஆகட்டும்.

உடனே அந்நோயாளி தமது தலையணையைத் தூக்கி, அதன் அடியிலிருந்த ஒரு காயித அட்டையை எடுத்தார்.

அவ்வட்டை நான்கு அங்குல சதுரமுள்ளதாய் பட்டுக்கயிற்றால் கட்டப்பட்டதாய் நான்கைந்து அரக்கு முத்திரைகளுடன் கூடியிருந்தது.

ஜயஸிங்:—தாங்கள் இவ்வட்டையினுள் இருக்கும் பத்திரங்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். இது இலங்கையிலுள்ள சில நெருங்கிய பந்துக்களுக்கு உபயோகமாகும். நான் இறந்து மூன்றுவருஷங்களாகியதும், தாங்கள் இதை இலங்கை ராஜதூதரிடம் கொடுக்க வேண்டியது. தாங்கள் என்னுடைய நண்பராகயிருப்பது பற்றியும் யான் இன்னம் கொஞ்சநேரத்தில் இறந்துபோவதுபற்றியும் இதை யான் தங்களிடம் ஒப்புவிக்கின்றேன். என்று கூறிக்கொண்டே அதை ஸிம்ஹளநாதரிடம் அளித்தார். அளித்ததை வாங்கிக்கொண்ட ஸிம்ஹளநாதர் அந்தப் பத்திரங்களடங்கிய அட்டைப்பெட்டியைத் தமது சேபியிலே போட்டுக்கொண்டார்.

அப்பொழுது ஜயசிங் தாம் போர்த்திக்கொண்டிருந்த சால்வையால் தமது முகத்தை மூடிக்கொண்டார். இர

ண்டு நிமிஷங்களாகியதும், அவர் ஹா! அவருடைய ரகசியம் என்னிடமே யிருக்கிறது!........ஹா! யார் இது? ஐயோ! ஐயோ! என்று உளறிக்கொண்டே, பிராணனை விட்டுவிட்டார்.

ஸிம்ஹளநாதர் அதிக துக்கத்துடன் யோசித்துக் கொண்டிருக்கையில் அவருடைய நண்பராகிய டாக்டர் மறுபடியும் அவ்விடம் வந்தார்.

ஸிம்ஹளநாதர்:—ஏன்? பாரும், இவர் இறந்துவிட்டார்!

உடனே டாக்டர் தம்முடைய எழில்வழிந்த கரத்தால் நோயாளி சாகும்போது தன் முகத்தை மூடிக்கொண்டிருந்த சால்வையைநீக்கி, ஊக்கிய மனதுடன் பரதேசியின் முகத்தையும் இருதயத்தையும் தொட்டுப் பரிசோதித்தார்

டாக்டர்.—நண்பரே! நான் நேற்றிரவு கூறியபடியே யாவும் நடந்தேறிவிட்டது. இவர் பிழைக்கமாட்டார் எனும் எண்ணமே என் மனதிற் பதிந்துவிட்டது.

ஸிம்ஹளநாதர்.—ஆம். நீர் கூறியது உண்மையாகிவிட்டது.

டாக்டர்.—சரி, இவர் ஏதாவது கூறினரா?

ஸிம்ஹளநாதர்.—ஏதோ கொஞ்ச முரைத்தார்., இவர் தமது மெய்யுருவையும் பெயரையும் மறைத்துக்கொள்வதற்கு காரணம் இருக்கிறதென்று சொன்னர்.

பஞ்சத்தாண்டியோ-பரம்பரையாண்டியோ.

டாக்டர்.—ஓஹோ! அப்படியோ?—சரி. நாம் இவருடைய பெட்டியைச் சோதித்தால் விஷயம் வெளிப்படுகிறது.

சிம்களநாதர்.—ஆம். நாளையதினம் சோதிக்கலாம்

உண்மையில் பரதேசி இறந்துவிட்டாரா என்று மற்றொருதடவை எழுந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு சிம்களநாதருடைய நண்பர்—டாக்டர்— களேபரத்தை ஒரு தடவை கூர்ந்து நோக்கினர்.—அஸ்தமிக்கும் ஆதித்தனது செங்கிரணங்கள் பொன்போல் அவ்வறையிற் காணப்பட்டன

பின்பு டாக்டரும் சிம்களநாதரும் அச்சாவறையினின்று அகன்று, பரதேசி யிறந்து போனதை ஹோட்டல் காரருக்குத் தெரிவித்தார்கள்.

ஒரு ஹோட்டலில் ஒருவர் சீக்காயிருந்து இறந்து போனல் அவ்வோட்டலுக்கு வருவோர் அங்கிருக்கப் பயப்பட்டுச் செல்வார்களாதலால், ஹோட்டல்காரருக்கு வரும்படி குறைந்துபோகும் என்பதை நன்கறிந்திருந்த கமலவிலாஸ் ஹோட்டல்காரர் இவ்விஷயத்தை இரகசியமாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், பிணத்தை அன்றிரவுக்கடுத்த யிரவிலேயாவது புதைக்க வேண்டுமென்றும் கூறினர்.

அதே சமயம் வக்கீல் சித்திராஞ்சரும் வரவே, சிம்களநாதர் இறந்தோன் கூறியவைகளை ரகசியமாய் உரைத்தார். உரைத்ததைக்கேட்ட சித்திராஞ்சர் ஆச்சரியமடைந்தார்.

சித்திராஞ்சர்.—ஹா! அப்பரதேசியார் இறந்து விட்டாரா? அவரைச்சூழ்ந்து பெரிய மர்மம் இருப்பதாய்க் காணப்பட்டது. அவர் இறந்தா போனார் பிணத்தை அப்புறப்படுத்துவ தெப்போ?

சிங்களநாதர்:—நாளையிரவு.

மறுநாட்சாயங்காலம் பகலவன் மேற்கடலினுள் குளிக்கச் செல்லுகையில் ஹோட்டல்காரர், சிங்களநாதருடைய அறைக்கு ஒரு ஸ்திரீயை அழைத்துக்கொண்டுவிட்டார்.

ஹோட்டல்காரர் அழைத்துக்கொண்டு வந்த ஸ்திரீ எழிலும் வண்ணமும் பொலியப் பெற்றவள். நீலோற்பல மலரைப்போன்றிருந்த அவளது நீலநிறக் கண்கள் துக்கங் கொண்டிருந்தன. நடுத்தரமான உயரத்தையும் தோற்றத்தையுங்கொண்டிருந்த அவளது திருமேனி பைம்பொன்னோ தந்தமோ என்றய்யுறும் வண்ணமிருந்தது.

ஈரேழுலகங்களிலேயுள்ள அழகைத்தேடிச்சொணர்ந்த பிரம்மதேவன் சகல லக்ஷணங்களையும் சாமுத்திரிகா விதியின்படியே திரட்டி, அவளை அழகுவல்லியாகச் செய்தான் போலும் என்று சொல்லும்படியாய் விளங்கினாள்.

"பொன்னொழுகு பூவிலுறை பூவையெழில் பூவைப்
பின்னெழில் கொள்வாளிணை பிறழ்ந்தொளிர முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவதென்ன
கானின் உயர்கற்பகம் உயிர்த்த கதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின் மொழியுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்று மயில் வந்ததென வந்த,"

எனும்படி அவள் வானுலகத்திலிருந்து குதித்தனளோ என்றெண்ணும்படியாக யிருந்தது.

அழகும் அற்புதமும் மிகவும் கொண்டொளிர்ந்த அவளது அவயவங்கள் அச்சில் வார்த்துக் கடைந்தெடுத்தன போலிருந்தன.

நீலநிற ஆகாயத்திலே பௌர்ணமி தினத்தன்று பிரகாசிக்கும் சந்திரனைப் போன்றிருந்த அம்மடமகளின் வதனம்,

"கொண்டலின் குழவியாம்பல் குனிசிலை வள்ளைகொற்றக்
கெண்டை ஒண் தரளமென்றிக் கேண்மையைக் கிடந்த திங்கள்
மண்டல வதனமென்று வைத்தனன் விதியே நீயப்
புண்டரீ கத்தையுற்ற பொழுதது பொருந்தித் தேர்வாய்."

என்று கவிவாணர் வருணிக்கத் தக்கதாயிருந்தது.

வதனத்தின் எழிலை எடுத்துக் காட்டிய அவளது சிரத்தின் கேசமோ வெனில்,

"காரினைக் கழித்துக் கட்டிக் கள்ளினோ டாவி காட்டிப்
பேரிருட் பிழம்பு தோய்ந்து நெறிவுறீ இப்பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதிச் சூழல் சும்மை செய்தனைய தம்மா!
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம்."

என்று லக்ஷணப்படி சோலை போன்று பார்ப்போர்மனதைச் சந்தோஷிப்பித்தது. கார்முகிலைப் பழித்த அவளது கேசத்தில் வாசனை தரும் புஷ்பங்கள் காணப்படவில்லை. அவளது பரந்த நெற்றி சூனியமாய் இருந்தது. செவியில் வைரக் கம்மல் சுடர்விட்டெரிந்தது. அவள் உடுத்தியிருந்த தர்மாவரப்பட்டுச் சேலையின் மீது பொன்மேகலை காணப்பட்டது

பஞ்சதந்தாண்டியோ-பரம்பரையாண்டியோ.

பெண்களுக்குரிய அரிய பெரிய மகடூக் குணங்கள் யாவும் அம்மங்கையர்க் கரசியிடம் இருந்தன.

சிம்களநாதர் அவளைப் பார்க்க, அவள் அதிக தைரியத்துடன் "நான் தங்களைக் கண்டுபோக வந்தேன். பரதேசி வேஷத்துடன்வந்த ஜயசிங்கரை நாடியே யான்ஓடிவந்தேன்" என்றாள்.

(ஹோட்டல்காரர் சென்று விட்டார்)

சிம்களநாதர்.—அம்மா! நீ இவ்விடம் வருவதற்குக் காரணம் என்ன?

அந்தஸ்திரீ.—ஐயா! யான் உண்மையை ஒப்புக் கொண்டு விஷயத்தைச் சொல்லுகின்றேன் நான் ஒரு பெரிய ஆபத்தானநிலைமையில் சிக்கியுள்ளேன்! திக்கற்றிருக்கின்றேன்! நான் அநுராஜபுரியிலிருந்து வருகின்றேன்! எதற்காக? ஜயசிங் என்று பெயரிட்டுக் கொண்டவனை நாடியே வந்தது.—எப்படியும் யான் அவனைக்கண்டே தீரவேண்டும்!—அவன் மட்டும் உண்மையைக் கூறினால், யான் காப்பாற்றப் படலாகும்! இல்லாவிட்டால் யான் இறந்த மாதிரியே!—அவனைக் கண்டு பிடிப்பதற்குத் தாங்கள் என் பொருட்டு உதவி செய்வீரா?—அவன் எங்கே போனான் என்பதைத் தாங்கள் அறிந்திருக்கக்கூடும். யான் உங்களுடைய காலிலாவது விழுகிறேன். என் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள—இல்லை, ஏன் என் உயிரை வைத்திருக்கவாவது,-தாங்கள் எனக்கு உதவி புரிய வேண்டும்.

சிம்களநாதர் அதிக ஆச்சரியத்தினால், கல்லாய்ச் சமைக்கப்பட்டவர்போல் உட்கார்ந்து, திடீரெனத் தோன்றிய அப்பூங்கோதையைப் பார்த்துக் கொண்டே, என்ன சொல்வது என்பதாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அதிகாரம். 2.

பிரதமநியாயமந்திரி அமலாதித்யர்.

அழகே உருவாய் வந்தவதரித்ததோ வென்று அய்யுறத்தக்க அந்த அழகிய ரூபாவதி—ஜகன் மோகினி—சிம்களநாதர் ஒன்று முரையாமல் வாளாவிருப் பதைப் பார்த்து, மனக்கிலேசமும் துயரும் அடைந்தாள்.

அவள். —தாங்கள் மௌனமாயிருக்கின்றீரே! எனக்கு இச்சமயத்தில் உதவிசெய்ய மறுக்கின்றீரா? திக்கற்ற என்னைத் தாங்கள் கைவிடாமல், காப்பாற்றவேண்டும். தாங்கள் அம்மனிதனோடு பேசியிருக்கின்றீர். அம்மனிதன் எங்கே?

சிம்களநாதர் —சரி. வாரும்.—என்று கூறியதே அவ் வழகிய வனிதையை அழைத்துக்கொண்டு, அவர் பரதேசி யார் இறந்த அறைக்கு இட்டுச் சென்றார்.

அவ்வழகிய நங்கை இறந்தபரதேசியாரின் களேபாரத் தைக்கண்ணுற்றதே, "ஐயோ! தெய்வமே! இறந்தாபோனாய்" என்றுரைத்து வருத்தங்கொண்டாள்.

இரண்டொரு நிமிஷகாலம் கல்லாய்ச் சமைந்துபோன வளாய்க் காணப்பட்ட அவ்வழகிய பெண்மணி பரதேசிக் கடுத்தாற்போல் வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் டிரங்கை ஜிவ் வென்று எடுக்கப்போனதைக் கண்ட, சிம்களநாதர் அவளை யடைந்து "பெட்டியினுள் இருப்பதைப்பார்க்கும்படி நான் உத்தரவு கொடேன்" என்றார்.

அவள்.—நீர் உத்தரவு கொடுக்கமாட்டீரா! தயவு செய்து தாங்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்!–

இக்கடிதங்களைப் பார்ப்பதற்கு எனக்குமிருந்த சுதந்தரம் இருப்பதை நீர் அறியீர் போலும்—என்று கூறிக் கொண்டே, அவள் அப்பெட்டியில் இருந்த துணிமணிகளையும், காகிதங்களையும் தரையில் கொட்டினாள்.

உடனே அவள் காகிதங்களைப் பார்த்தாள். அவள் தேடி நாடிவந்த காகிதம் அங்கு காணப்படாமையால், மிகவும் வருத்த மடைந்தாள்.

அவள்.—(சவத்தை நோக்கி) முட்டாளே! ஒரு பத்திரத்தையும் எனக்கென்று நீ வைத்துச் செல்லவில்லையே? நான் பரிசுத்தமானவள் என்பதை நீ அறிந்திருந்தும், என்னை நீ அக்கஷ்டத்திலிருந்தும் நீக்க முயற்சிக்கவில்லையே!–என்று கோபத்துடன் கூறினாள்.

சிம்களநாதர்.—அம்மா! இறந்தவனை நீ வைவதில் எனக்கு இஷ்டமேயில்லை.

அவள்.—ஐயோ! இவன் தான் இறந்த பிறகு நான் திக்கற்றுத் தெருவில் நின்று சீரழிந்து போவேன் என்று நினைத்துக்கொண்டனன் போலும்! இவன் ஒரு கோடீஸ்வரனாய் இருந்தும், இவன் கதி கடைசியில் இவ்விடம் தன் உயிருக்கஞ்சி ஓடிவரத் தான் செய்தது! நான் இவனைக் கண்டு பிடிக்க மாட்டேன் என்றெண்ணினான் போலும். எனக்கா தெரியாது! என்மேல் நீ வேண்டுமென்றே சுமத்திய குற்றத்தை......................

பிரதமநியாயமந்திரி அமலாதித்தியர்,

சிங்களநாதர்—இவர் என்ன குற்றத்தை உன்மீது சாட்டினார்?—என்று உண்மையை அறிய வெண்ணிக் கேட்டார்.

அவள்—ஐயோ! ஐயோ! என்ன சொல்வது? ஒரு ஸ்திரீயின்மீது சுமத்தக்கூடிய குற்றமா?—இவன் என்மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டிலிருந்து என்னை வெகு தாராளமாய் விடுதலை செய்திருக்கலாகும்.—ஆனல்!—மறுத்து விட்டானே இக்கொடியோன்!—என்னுடைய தந்தையையும் என்னையும் இப்படிச் செய்துவிட்டானே!

சிங்களநாதர்.—ஏன் அப்படிச் செய்தார்?

அவள்.—நம்மிருவரையும் விடுவித்திருந்தால், நாம் இப்போது மனச் சாந்தியுள்ளவர்களாகவன்றே யிருப்போம்—ஏழெட்டு தினங்களுக்கு முன் யான் இவனுடைய அரண்மனையை யடைந்து, எப்படியாவது என்மீது சுமத்தப்பட்ட குற்றத்தைத் தள்ளிவிடும்படிக் கேட்டும், சண்டித்தனம் நிறைந்த இவன் என் முகத்திற்கெதிரில் சிரித்துக்கொண்டே முடியாது என்று முடிவான வார்த்தை கூறிவிட்டான்!—இரண்டு தினங்களுக்கு முன்பு இலங்கை யரசாங்கத்தார் இவனைக் கைது செய்யும்படி உத்தரவிட்டனர்.

சிங்களநாதர்.—அப்படியா? உன் பெயர் என்ன?

அவள்.—திலக சமுத்திரம் என்று அழைப்பார்கள். உங்களுடைய பெயர்?—

சிங்களநாதர்.— ஸிம்ஹளநாதன்.

பிரதம நியாயமந்திரி அமலாதித்தியர்.

திலகம்.—ஐயா! நான் இவன் இறந்த பிறகு என்ன செய்வது?

சிம்களர்.—நீ அப்படிக் கூறக்கூடாது—உன்மீது சாட்டப்பட்ட குற்றம் அற்பமானதே!

திலகம்.—ஆனால் எனக்கு விரோதிகள் இருக்கின்றனரே!

சிம்களர்.—சரி.—நீ அநுராஜபுரியிலிருந்து தனியாகவா பிரயாணம் செய்து வந்தாய்?

திலகம்.—இல்லை. என் கூட்டாளியுடன் வந்தேன்.

சிம்களநாதர்.—சரி.—நீ அநுராஜபுரியிலே தான் வசிக்கிறாயோ?

திலகம்.—சாதாரணமாய் நான் வசிப்பது மதாராவிலே தான்.

சிம்களர்.—ஓஹோ! தென்னிலங்கையின் கோடியில் உள்ள மதாரா துறைமுகப் பட்டணம்!—சரி—இது கிடக்கட்டும்—ஜயசிங் என்பது இவருடைய உண்மைப்பெயரல்லவே?

திலகம்.—ஆம்.—ஆனால் இவன் யார் என்று சொல்லுவதற்கு என்னிடம் சுதந்தரமில்லை. இலங்கையில் மிகவும் செல்வாக்குடையவன்—இவனைப்பற்றி நீங்கள் தினசரிகளில் அறிந்திருப்பீர்கள். இவ்வளவே என்னால் உரைக்க முடியும்.

பிரதம நியாயமந்திரி அமலாதித்தியர்.

சிம்களநாதர்.—ஹா! எல்லாம் இரகசியமாய் இருக்கிறதே!—இவர் எதற்காக இங்கு வரவேண்டும்?

திலகம்.—இவ்விடத்திலே மாறுவேஷத்துடன் ஒருவரும் அறியாதவாறுமறைத்து இனிது வசிக்கலாமென்றும், நான் இவனைக் கண்டுபிடிக்க முடியாதென்றும் நினைத்தான் போலும்.

சிம்களநாதர்.—அம்மா! நீ சொற்பநேரத்திற்கு முன் இம்மனிதர் கைது செய்யப்படவேண்டியவர் என்றுயல்லவா? என்ன அது?

திலகம்.—ஆம், அச்சங்கொண்ட இவர் கைது செய்யப்படுவோம் என்பதை அறிந்து அந்த மானங்கெட்ட வழிக்குத் தான் ஆளாகாமல் இருக்க வேண்டுமென்பதை நன்றாய் யோசித்து, கடைசியில் ஸ்வதேசத்தைவிட்டு வேறு ராஜ்யம் செல்வதே நலமென்றெண்ணி ஓட்டம் பிடித்தார். என்னையும் என் தந்தையும் எமது விரோதிகள் தமது வலையிற் சிக்க வைத்ததுபோல் இவனுடைய விரோதிகள் இவனையும் சிக்கவைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சிம்களநாதர்.—சரி,—இவர் ஏன் உனக்கு உன் சுதந்தரத்தைக் கொடுக்கவில்லை? நன்னடத்தையுள்ள உன்னை இப்படியா மோசம் செய்வது!

திலகம்.—சிம்களநாதரே! இம்மனிதனுடைய குணாகுணங்களை நீர் அறியீர். இவனைப்போன்ற கொடியோன் இலங்கையில் காணப்படான் இவன் சேர்த்த ஒவ்வொரு ரூபாயிலும் ஏழைமனிதர் கண்ணீரும் புண்ணீரும் காணப்

படும், பல பேர்களுக்கு தன் பணத்தை அகாதவட்டிக்குக் கொடுத்துக் கடைசியில் அவர்களுடைய சிரங்களைமொட்டையடித்து விடுவான்.

சிம்களநாதர்.—ஓ! இவன் ஒரு சாவகாரி என்கிறாயோ?

திலகம்—சிம்களநாதரே! தாங்கள் யான் சொல்வதை அறிந்துகொள்ளவில்லை. இதர ஜனங்களைக் கெடுப்பதற்கென்றே இவன் அவர்களுக்கு பணம் உதவிவந்தனன். பல பேர்கள் தற்கொலை செய்து கொண்டனர். எதற்காக தெரியுமா? அவர்களுடைய நற்பணத்தை இவன் அபகரித்துக் கொண்டதற்காக.

சிம்களநாதர் —ஐயோ! சண்டாளா!

திலகம்.—சிம்களநாதரே! இவனைப்போன்ற கொடியர் இவ்வுலகத்திலேயே யிரார். இவன் செய்த கொடுமை பலவற்றிற்கு என்னுடையசுதந்தரத்தையாவது கொடுத்திருக்கலாகும். அவனுக்கு இது அலட்சியம். எனக்கே லட்சியம் அநற்தம்.

சிம்களநாதர் திலகசமுத்திரத்தின் கவலையையும் நிலைமையையும் கண்டு பரிதாபமடைந்தார்.

சிம்களர்—திலகம்! நீ விஷயத்தை விளக்கமாய்ச்சொல்லிவிட்டால், யான் உன்னை எவ்விதத்திலாவது காப்பாற்றுவேன்.

திலகம்.—ஆ! உங்களால் அது முடியவே முடியாது. ஏனெனில் அது இச்சண்டாளன் ஒருவனாலேயே இது

முடியக் கூடுமோனது.—ஆனால் ஐயோ! சாவு இவனை ரட்சித்து விட்டது.—என்றதே, அவனுடைய கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று

சிம்களநாதர்.—ஆமாம்.

திலகம்.—இவன் மட்டும் உயிருடன் இருப்பானேயாகில், உண்மை எப்படியும் வெளிப்பட்டு, தன் வாழ்நாளை ஒரு சிறைச்சாலையில் கழிக்கும்படியாகச் செய்திருக்கும்.—ஆனால்—இவன் இறந்துவிட்டான்! ஆ! பெரிய இரகசியம்! அற்புத ரகசியம்! வெளிவராது நின்று விட்டது!—சிம்களரே! நாம் ஏன் இவ்வறையில் இருக்கவேண்டும்? இங்கிருந்தாலும் நமக்குப் பாவம்நேரும்.—உம்முடைய அறைக்குப்போவோம்

சிம்களநாதர்.—ஓ! போகலாம்—என்று கூறிவிட்டுச் சாவறையிலிருந்து மறுபடியும் மெத்தையில்உள்ள அறைக்குச் சென்றார். அவரைத் தொடர்ந்து திலகசமுத்திரமும் சென்றாள்.

அவ்வறையில் வக்கீல் சித்திராஞ்சர் காணப்படவில்லை. அவர் எங்கோ வெளியே உலாவச் சென்றிருந்தார்.

இருவரும் இரண்டு சொகுசான சோபாக்களில் ஒருவரை யொருவர் நோக்கிக் கொண்டமர்ந்ததும், சிம்களநாதர் அவ்வனிதா சிரோமணியை நோக்கி, "ஜயசிங் என்மீது அன்புடையவனாகவே காணப்பட்டான்" என்றார்.

திலகம்.—தெய்வாதீனமாய்த் தப்பிப் பிழைத்தீரே.—என்றாச்சரியத்தோடு கூறினாள்.

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU - INDIA

பிரதமநியாயமந்திரி அமலாதித்தியர்,

துப்பறிபவர் அதிக ஆச்சரிய மடைந்தார்.

சிங்களநாதர்—என்ன தப்பினேனா? விளக்கமாய்ச் சொல். நீ சொல்வதை ஆராய்ந்தால் ஜயசிங் என் மீது ஏதோ துர் எண்ணத்துடன் வந்தனன் என்பதைக் காண்பிக்கின்றது.

திலகம்.—மூன்று வருஷங்களுக்கு முன்னே தாங்கள் காலி (Galle) க்கு வந்து அரண்மனை ஹோட்டலில் தங்கியிருக்க வில்லையா?

சிங்களநாதர் அதிக ஆச்சரியமடைந்தவராய் தமக்குள்ளாய், "ஹா! என் பூர்வ கதையை இவள் எப்படி அறிந்தாள்?" என்றெண்ணிக்கொண்டு பின்பு அவளைக் கூர்ந்து நோக்கினர்.

பின்பு ஏதோ நினைத்துக்கொண்டார். அவர் அவளை நோக்கி, "அதைப்பற்றி என்ன?" என்று உண்மையை மறைத்துக் கேட்டார்.

அவள் சொற்பநேரம் சும்மா யிருந்தாள்.

திலகம்.—அவ்விடம் ஒரு விசேஷ சம்பவம் நடக்கவில்லையா?

சிங்களநாதர் அதைக்கேட்டதே பயமடைந்தார். உடனே அவ்விடத்தில் முன்பு நடந்தசெய்தியைப்பற்றிக்கேட்க திலகசமுத்திரம் அதை ஒருவாறு சொல்ல, துப்பறிபவர், அவ்வரண்மனை ஹோட்டலில் தாம் தப்பியதை நினைந்து சந்தோஷ மடைந்தார்.

பிரதம நியாயமந்திரி அமலாதித்தியர்.

சிம்மளநாதர்,—நீ சொல்கிறபடி ஜயசிங் நம்மிருவருக்கும் விரோதியா?

திலகம்—ஆம். அப்படித்தான் நினைக்கவேண்டும் எப்படியும் தாங்கள் தப்பிப் பிழைத்தீர்களே, அதுவே போதுமானது.

சிம்களநாதர்.—என்னமோ எல்லாம் விதியின்படி நடக்கின்றது!—சரி—அச்சண்டாளன் உன்மீது வேண்டுமென்றே சாட்டப்பட்ட குற்றத்தை நீ செய்யவில்லை என்றால், அதனால் அவனுக்கு நன்மைதானே?

திலகம்.—ஆம். ஆனால் அவன் இறந்து விட்டான் சிம்களநாதர். இறந்துபோன ஜயசிங் கொடுத்தபணத்தைப் பற்றியும் பத்திரங்களைப் பற்றியும் சொல்லலாமா வென்று யோசித்தார்: ஆனால் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்று கண்டார். பின்பு அவளைப்பற்றிக் கேட்க, அவள் தனது தந்தை வசிக்கும் நாகப்பட்டணத்திற்குச் சென்று, அவருடன் யோசிக்கவேண்டுமென்றும் தனக்குஒரு அத்தை இருக்கிறாளென்றும் கூறினாள்.

சிம்களநாதர்.—சந்தோஷம்.

திலகம்.—(சிறிது யோசித்து) சிம்களநாதரே! தாங்கள் கங்கைநாச்சியார் எனும் பெயரைக்கொண்ட ஸ்திரீயை அறிவீரென்றே நினைக்கின்றேன்.

சிம்களநாதர் அதிக ஆச்சரியமடைந்து, தம்முடைய பூர்வ விருத்தாந்தத்தை திலக சமுத்திரம் எப்படி அறிந்து கொண்டாள் என்றெண்ணினார்.

சிம்களநாதர்.—ஆம். சொற்பகாலமாய் அவளை அறிவேன். அவளைப்பற்றிய இவ்விஷயத்தில் சம்பந்தமொன்றுமில்லையே. ... ...

திலகம்.—அவள் தங்களுடைய நண்பர் அல்ல, அவளைக் கண்டு எத்தனை தினங்களாயின?

சிம்களநாதர்—இரண்டு வாரங்களுக்கு முன்பு யான் பீமவிலாசத்தில் சிற்றுண்டி எடுத்துக் கொண்டிருக்கையில் யான் அவளை அவ்விடத்திற் சந்தித்தேன். அவள் என்னை சாப்பிடவரும்படி கூறியிருந்தாள். ஆனல் அவளுடைய வேண்டுகோளை யான் மறுத்துவிட்டேன் அவள் எனக்கு கந்த ஸ்நேகிதை அல்ல என்பதை யறிந்துகொண்டேன்.

திலகம்.—நல்லவேளையாய் தாங்கள் அவளுடைய அறிமுகத்தை நீக்கினீரே! அவள் ஒரு நாடோடிக் குலத்தைச் சேர்ந்தவள்.

சிம்களநாதர்.—ஆம்.

பின்னர் நங்கை நாச்சியாரைப்பற்றி இருவரும் பேசவில்லை. கடைசியில் திலகசமுத்திரம் தன் விதியை நொந்துகொண்டு, போய்வருவதாகச் சொல்லிவிட்டு, ஜிவ்வென்று மறைந்து விட்டாள்.

சந்திரன் மறைந்துபோனது போலிருந்த அவளுடைய செல்லுகை சிம்களநாதருக்கு அதிக ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டபடியால், அவர் மூன்று வருஷங்களுக்குமுன்பு நடந்ததை யெல்லாம் யோசிக்கலானர்.

பிரதம நியாயமந்திரி அமலாதித்தியர்,

அதேசமயம் அவ்விடம் தோன்றிய வக்கீல் சித்திரரஞ்சர் சிம்களநாதருடைய தோளைத் தொட, அவர் எழுந்திருந்தார்.

சித்திரரஞ்சர்:—சிம்களநாதரே! நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்?

சிம்களநாதர்:-இப்போது வெளிச்சென்ற மடந்தையுடன் பேசியிருந்தேன்.

சித்திரர்.-பேசியிருந்தீரா?

சிம்களநாதர்:-ஆம்

சித்திரர்:— ஐயோ! அப்பாதகியுடன்.........

சிம்களநாதர்:-என்ன? யார்?

சித்திரர்:-இப்போதுவந்து சென்றவள்-பாதகி-திலக சமுத்திரத்தையே கூறுகிறேன்.

சிம்களநாதர்:-நீ சொல்வது எனக்கு அதிக ஆச்சரியத்தை யளிக்கின்றதே.

சித்திரர்:-ஆம்.

சிம்களநாதர்:—காரணம் என்ன?

சித்திரர்:-சொல்கிறேன்.

சிம்களநாதர்:—சித்திர ரஞ்சரே! அப்பெண்பாலுக்கு விரோதமாய் நீர் சொல்லவேண்டியவைகளை, நீர் உரைத்துவிடும்.

ஸித்திரர்:—நண்பரே! எனக்கு ஒரு ஸ்திரியின்மீது வேண்டுமென்றே பொல்லாதனவற்றைச் சொல்லவேண்டும் என்னும் எண்ணமே கிடையாது. இப்பொழுது சொற்ப நேரத்திற்கு முன்பு சென்ற ஸ்திரீ ஒரு பாதகி என்றே யான் கூறுவேன். கூறுவதற்கு காரணமும் உண்டு. அவள் உம்மை வந்து கண்டுபோகக் காரணம் என்ன?

சிம்களநாதர்:—அவள் என்னை கண்டு பேசிப்போக வரவில்லை, பரதேசியைக் காணவந்தாள்—அவள் அவனுக்குச் சிநேகிதை.

வக்கீல் துப்பறிபவரைக் கூர்ந்து பார்த்தார்.

ஸித்திரர்.—ஜயஸிங்கருடைய ஸ்நேகிதை! யார் உனக்கு அப்படிச் சொன்னது?

சிம்களநாதர்.—அவளே தான்,

ஸித்திரர்.—அவள் முக்கியமாய் உன்னைக் கண்டுபோக வந்தாளேயன்றி, அம்மர்ம மனிதனைக் கண்டு போகவில்லை.

சிம்களநாதர்.—அவள் இந்த ஹோட்டல்காரரிடம் ஜயஸிங்கைப்பற்றிக் கேட்க, அவர், அவளை என்னிடத்து அழைத்து விட்டுவிட்டுப் போய்விட்டார். நான் அவளை அப்பிணம் இருக்கும் அறைக்கு இட்டுச் சென்றேன். அக்காட்சியைக் கண்டதே அவள் அகோரரூபிணி ஆயினள். உண்மையில் அவள் அப்பரதேசியினுடைய விரோதியென்றே சொல்லவேண்டும்.

ஸித்திரர்.—ஜயஸிங் இங்கு வந்தது அவளுக்கு எப்படித்தெரியும்?

சிம்களநாதர்.—அது எனக்குத் தெரியாவிட்டாலும் பரதேசியைத் தொடர்ந்து வந்து கண்டிருக்கலாகும்.

ஸித்திரர்.—ஜயஸிங் இவ்விடம் ஏன் வந்தான் என்பதற்கு காரணம் கூறினளோ?

சிம்களநாதர்.—ஆம் அவள் யான் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விடும்படி பல உண்மைகளைத் தெரிவித்தாள், நங்கை [illegible]ராச்சியாரும் இந்த சிங்களப் பரதேசியும் ஒன்று சேர்ந்து என்னுடைய உயிரை உடலிலிருந்து பிரிக்க எண்ணியிருந்தார்களாம்,

ஸித்திரர்:—என்ன? உம்முடைய உயிரையா? துப்பறிவதில் கீர்த்திபெற்ற உங்களையா? இதையும் ஒரு உண்மை என்று கேட்டுக் கொண்டிருந்தீரே! ஏன்? ஜயஸிங்கரை இவ்விரண்டு நாளாகத் தானே அறிவீர்?

சிம்களநாதர்:—ஆமாம். ஆனல் அவள் கூறியதில் [illegible]களும் காணப்பட்டன.

ஸித்திரர்:-எப்படி?

சிம்களநாதர்:—அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. காசியில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு விஷயம் நடந்தேறியது. அது மிகவும் ரகசியமானது, அவ்விஷயத்தை ஜயஸிங் அறிவான். திலக சமுத்திரமும் ஒருவாறு தெய்வாதீனமாய்—சொற்பம் தெரிந்து கொண்டிருக்கிறாள். அவ்விரகசியம் ஒருவரும் அறியமாட்டார்கள். நீங்களும் அறியீர்.

வித்திரர்:—அவள் உம்முடைய ரகசியமொன்றில் சொற்பத்தை அறிந்திருக்கிறாள் அல்லவா? அதைக்கொண்டே உம்மிடத்தில் தன் சாமர்த்தியத்தைச் செலுத்தலாம் என்றெண்ணி விட்டாள் என்பதை நீர் அறிந்துகொள்ளும். நீர் துப்பறிவதில் மிகுந்த சாமர்த்தியமும் தைரியமும் கொண்டிருந்தாலும், திலக சமுத்திரத்தைப் பற்றி நீர் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஜயவலிங்கரை அவள் அறிந்திருக்கலாகும். எம் முகாந்திரம் முன்னிட்டோ அவள் உம்மையே பார்க்க வந்தாள் என்பதை ஞாபகத்தில் வையும்.

உடனே சிம்களநாதர் தமது நண்பர் தம்மீது கொண்டிருந்த எண்ணத்தை விலக்க எண்ணி, தமக்கும் அவளுக்கும் நடந்த சம்பாஷணை முழுவதையும் சவிஸ்தாரமாய் எடுத்துரைத்தார்.

வித்திரர்:—சந்தோஷம். நான் அவள்மீது கொண்டிருக்கும் துர் அபிப்பிராயத்திற்கு காரணம் சொல்லுகிறேன். மூன்று வருஷங்களுக்கு முன்னே திலக சமுத்திரமும் அவளுடைய தந்தை மதிவாணரும் இரத்தின புரத்திலேயுள்ள ஒரு பெரிய ராஜ மாளிகையில் வசித்திருந்தார்கள். ஒரு நாடகாசிரியர் என்னை மதிவாணருக்கு அறிமுகமாக்கி வைத்தார். மதிவாணர் என்னை அடிக்கடி சாப்பிடும்படியாய்க் கேட்பார். நானும் அவருடைய ஸ்நேகிதர்களுடன் சேர்ந்து சாப்பிடுவேன். ஒருநாள் அவருடைய வேலையாளை யான் மதிவாணருக்கு அத்தகைய சம்பத்து எங்கிருந்து வந்தது என்று கேட்க, அவன் அது அநியாய வழியில் வருவதாகச் சொன்னான்:—அப்பொழுது திலக சமுத்திரம் அழகில் ரதி தேவியைப் போன்றிருந்தாள்.

ஒரு நாள் ஒரு விருந்து சாப்பிட்டானதும், சீட்டாட்டம் ஆட முற்பட்டனர். நானும் அவர்களுடன் சேர்ந்து விளையாடுகையில், மதிவாணர் ஏதோ தந்திரம் செய்வதைக் கண்டு, யான் கோபங்கொண்டு என்னை அறியாமல், மதிவாணரை நெஞ்சாரத் தூஷித்தேன். அநியாயமாய் எங்கிருந்தோ பொருள் சம்பாதிப்பதாகக் கூறிவிட்டேன். இதை எல்லாம் என் ஸ்நேகிதர் ஒருவரிடம்கூற அவர் "ஓ! மதிவாணன் ஒரு பெரிய திருடன் அவன்கூட இருப்பவர்களும் கைகாரப்பேர்வழிகளே" என்றார். அப்படிப்பட்ட திருடர்களா?" என்று நான் கேட்க, அவர் "ஆம். உன் மீது அவர்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக்கூடும். ஆதலால் நீ அவர்களைப் பற்றி அதிக ஜாக்கிறதையாக இருக்கவேண்டும்" என்றார். ஆதலால் திருடர்களின் மத்தியிலே வளர்க்கப்பட்ட அந்த ஸ்திரியைப்பற்றி நீர் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இரண்டு மாதங்களுக்குப் பிறகு, என்னுடன் பள்ளியில் படித்தவரும் இரத்தினகிரி ஜெமீன்தாருடைய பிரதம பொக்கிஷ மந்திரியும் ஆகிய கமலகுமாரர் எனும் பெயரையுடைய – இருபத்தெட்டு வயதுள்ள – அழகிய உத்தியோகஸ்தர் பணவிஷயமாக இலங்கைக்கு வர, அவனை நான் என் ஹோட்டலில் தங்கும்படி செய்தேன். மறுநாட்காலை கமலகுமாரரை யான் பார்த்துக்கேட்டதாவது. கமலகுமாரா! நீ இவ்விடம் வரவேண்டிய விஷயம் என்ன?" அதற்கு அவன். மித்திரரஞ்சரே! நான் இரத்தினகிரி ஜமீன்தாருடைய காரியமாய் இவ்விடம் வந்தேன். நீங்கள் ஒரு கேஸின் நிமித்தமாய் இவ்விடம் வந்திருப்பதாய்க் கேள்விப்பட, உம்மைப் பார்த்துப் போகலாம் என்று

வந்தேன் இன்னம் இரண்டு தினங்களாயதே நான் அநுராஜபுரம் சென்று, அவ்விடத்தில் உள்ள முல்லைத்தீவு ஜமீன்தாரிடமிருந்து இரத்தினகிரி ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய இரண்டரைக்கோடி ரூபாயை வாங்கிச் செல்லவேண்டும். அதன் பொருட்டே யான் வந்தது" என்ருன். பின்பு அவன் முல்லைத்தீவின் அதிகாரி வசிக்கும் அரண்மனைக்குப்போய் பணத்தைப் பெற்றுக் கொண்டு, பதினைந்து நாட்களுக்குப் பிறகு இரத்தினபுரத்திற்கு வந்தான். அன்று சாயுங்காலம் அவன் என்னை அழைத்துக்கொண்டு ஒரு ஒரு ஹோட்டலுக்குச் செல்ல, அங்கு நாம் இருவரும் சந்தோஷமாய்ச் சாப்பிட்டோம். உடனே என் நண்பன் "நான் இன்றிரவு முதல் இவ்விடத்திலேயே தங்கியிருந்து ஒரு வாரத்திற்குபின்பு இந்தியாவுக்குப் போவேன். இந்த ஹோட்டல் எனக்குப் பிடித்தமாயிருக்கிறது" என்ருன். எனக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்றென்றாலும், அதனை அடக்கிக் கொண்டு, அவன் இஷ்டப்படியே ஆகட்டுமென்றேன்:—மூன்று தினங்களாயின. ஒருநாள் நான் அந்திப் பொழுதாவதற்கு முன்பு மதிவாணருடைய மாளிகையை அடுத்திருந்த தோட்டத்தின் வழியாகச் செல்லுகையில்— ஆ! யான் அடைந்த ஆச்சரியத்தை என்னவென்றுரைப்பேன்? யான் அடைந்தது ஆச்சரியம் அல்ல என்றுணர்ந்த யான் அதை ஒரு நயவஞ்சகம் என்றுணர்ந்தேன். ஏரிக்கரையருகில் இரண்டு உருவங்கள் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கக் கண்டேன். அவைகள் யார் தெரியுமா? மதிவாணருடைய புதல்வி திலகசமுத்திரமும் என்னுடைய நண்பனுமே. அவர்கள் இருவரும் காந்தர் என்பதையான்

அப்பொழுதே அறிந்தேன். அப்பொழுது என் மனம் பட்ட வேதனையைக் கடவுளே அறிந்திருப்பார்! மதிவாணருடைய மகள் பணயிச்சை கொண்டவள். ஆதலால் அவள் எதையும் செய்வாள் என்று என் நண்பனை எச்சரிக்கை செய்வதற்கு சமயமில்லாமற் போய்விட்டது:—அச்சமயத்தில் மதிவாணருடைய நண்பர்கள் சிலர் அவ்விடம் வந்து, அவ்விருகாதலரையும் பார்த்து, “காற்று ஆரோக்கியமாய் வீசுவதால், நாம் படகேறி சிறிது நேரத்தைச் சுகமாய்க் கழிக்கலாமா?” எனக் கேட்க, கமலகுமாரனும் ஒப்புக்கொண்டான். யாவரும் தம் தம் அங்கிகளைக் கழற்றி அவ்விடத்திற் காணப்பட்ட சேவகனிடமளித்து மாளிகையில் கொண்டுபோய் வைத்திருக்கும்படி சொல்ல, அவனும் சென்றான்.—அரைமணிநேரம் கழிந்த பிற்பாடு யாவரும் மாளிகைக்குச் செல்லலாயினர்.—மறுநாட்காலை யான் என் நண்பனுடைய ஹோட்டலுக்குச் சென்றபோது, ஜனங்கள் கும்பு கும்பாய்க் கூடியிருப்பதைக் கண்டதிசயித்து, அவர்களை விசாரித்தேன் ஐயா! அப்பொழுது யான் அடைந்த துக்கத்தை என்ன என்று உரைப்பேன்?—என் நண்பனுடைய இரண்டரைக் கோடி ரூபாய்களும் யாவராலோ அபகரிக்கப்பட்டதென்றும், அதனால் புத்திசபலித்தோ மனம் வெறுத்தோ கமல குமாரர் தன்னுடைய உயிரை ஒரு ரிவால்வரினால் போக்கிக்கொண்டார்!—நான் ஜீவ்வென்று சவம் இருந்த அறைக்குச் சென்று பார்க்கையில், என் நண்பனுடைய களேபரத்தைக் கண்டேன். கண்டதே ஓர் எண்ணம் எனக்குதித்தது. அதற்கு முந்திய நாள் சாயுங்காலம் மதிவாணருடைய நண்பர்களும் கமல குமாரனும்

ROJA MUTTIAH
KOTTAIYUR-623 106
TAMIL NADU

படகேறுவதற்கு முன்பு தந்தம் அங்கிகளைக் கழற்றி மாளிகைக்கு அனுப்பவில்லையா? கமலகுமாரனுடைய அங்கியின் சேபியில் அவனுடைய ஹோட்டல் அறையின் சாவி யிருந்தது. இரண்டரைக் கோடி ரூபாய் ஹோட்டலிலே யிருப்பதையும் மதிவாணரும் அவருடைய நண்பர்களும் அறிவார்கள். சட்டைப் பையில் இருந்த சாவியின் உதவியால் கமல குமாரன் ஏரியில் படகின்மீது சந்தோஷமாய் உட்கார்ந்து சாம்ராஜ்யம் கிட்டியதே போல் சம்பாஷணம் நடத்தியிருக்கும் பொழுது, மதிவாணருடைய ஆட்களோ மதிவாணரோ ஹோட்டலில் இருந்த பணத்தை அபகரித்து விட்டார்கள் — நல்ல துணிகரமான கொள்ளை! — நான் உடனே போலீஸ் அதிகாரி இருக்கும் இடத்திற்குச் சென்று, அவரிடம் மதிவாணரைப் பற்றியும் தற்கொலையைப் பற்றியும் சவிஸ்தாரமாகச் சொல்லி, விஷபத்தை இரகசியமாய் வைத்துக் கொள்ளும்படி செய்து, அவர் அனுப்ப உடன்பட்ட மூன்று துப்பறிபவர்களுடன் நேராய் மதிவாணர் மாளிகைக்குப் போய்ப் பார்க்க, மாளிகை பல தினங்களாய்ப் பூட்டப்பட்டது போலிருக்கக் கண்டு, அங்கிருந்த முதியோனொருவனையழைத்து, மதிவாணர் எங்கே என்று கேட்க, அவன் மதிவாணர் என்ற பெயருடையவரே இல்லையென்றும், அம்மாளிகை ஆறுமாத காலமாய் சாத்தப்பட்டிருக்கிறதென்றும் சொன்னான். எனக்குண்டான ஆச்சரியத்தை என்ன வென்றுரைப்பது? — துப்பறிபவர்கள் அம் முதியோன் வார்த்தையை நம்பியவர்களாய் என்னைப் பரியாசம் செய்தார்கள். — சொற்பநேரத்திற்கு முன்புதான் அப்பாதகியை யான் கண்டேனாதலால், இரகசியமாகப்

பிரதமநியாயமந்திரி அமலாதித்தியர்.

பூட்டிவைத்திருந்த விஷபத்தை அடக்க முடியாமல், உம்மிடம் சொன்னேன். நீர் எப்படியாவது மதிவாணனைக் கண்டுபிடித்து, தண்டனைக் குட்படுத்த வேண்டும்.—நான் இவ்வூரில் இன்னம் இரண்டு மாதங்கள் இருக்கப் போகிறேன்.

அந்த சரித்திரத்தைக் கேட்ட துப்பறியும் ஸிம்ஹளநாதர் அதிக ஆச்சரியமும் கோபமும் கொண்டு, எப்படியும் திருடனைக் கண்டுபிடிப்பதாய்க் கூறினர்.

அந்த வேளையில் இலங்கையில் பிரசுரமாகும் பிரபல தினசரியொன்றை சேவகன் ஒருவன் மேஜைமீதுவைத்து விட்டுப்போக, வக்கீல் அதனைப் பிரித்துப் படித்தார். அவர் படித்துக்கொண்டுபோகையில் பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருந்த ஒரு சிறு விஷயத்தை ஸிம்ஹளநாதரிடம் காண்பித்து, பின் வருமாறு வாசித்தார்.—"பிரதம நியாய மந்திரி அமலாதித்தியரைக் கைது செய்யும்படி இலங்கை இறைவர் உத்தரவிட்டு விட்டார். ஆனல் அநியாய மந்திரி அவரது அரண்மனையிற் காணப்படவில்லை"

சிம்களநாதர்:—பிரதான நியாயமந்திரி அமலாதித்தியர்! அவரைக்கைது செய்துவிடும்படி மன்னவரும் உத்தரவிட்டுவிட்டாரோ?

விஜித்திராஞ்சர்:—ஆமாம். ஜயஸிங்கரே ஏன் அந்த மந்திரியாய் இருக்கக்கூடாது?

சிம்களநாதர் இருக்கலாகும் என்று கூறிவிட்டு, நாளைய

காலை நாம் ஜயசிங்கனுடைய பத்திரங்களைச் சோதிக்க வேண்டுமாதலால், என்னுடைய ஸொலிஸிடரை அழைத்து வர ஆள் அனுப்ப வேண்டும்” என்றார்.

பின்பு இருவரும் தினசரியை வாசித்துக்கொண்டும் வார்த்தையாடிக் கொண்டுமிருந்தனர்.

அன்றிரவு ஜயசிங்கருடைய சவம் இரகசியமாய்ச் சுடலைக்குக் கொண்டு போகப்பட்டது.

அதிகாரம். 3.

ஆச்சரியகரமான விஷயங்கள்.

மறுநாட்காலை சுமார் ஒன்பது மணிக்குமேல், கமலவிலாசத்தின் எதிரில் ஒரு அழகிய மோட்டார்கள் வந்து நின்றது. மோட்டாரிலிருந்து ஐம்பது ஆண்டுகளைக் கடத்திய ஸொலிஸிடர் ஸ்ரீனிவாசய்யங்கார் மெல்ல இறங்கி, ஹோட்டலினுட் சென்று, வாசல்காப்பானிடம் அச்சடித்த ஒரு சிறு கார்டை நீட்டினார். சேவகன் அவரை ஒரு ஆசனத்தில் தான் திரும்பி வரும்வரையில் உட்கார்ந்திருக்கும்படி சொல்லிச் சென்றதே, அய்யங்கார் ஒரு நாட்காலியில் அமர்ந்தார். பெரிய தொந்தியும் தந்திபுத்தியும் வாய்க்கப் பெற்றிருந்த அவர் தமது மோட்டார் ஓட்டியை விளித்து, பிரகாசம்! நான் வருவதற்கு நேரமாகும். பதினொருமணி சுமா

ருக்கு வண்டியைக் கொண்டுவா" என்றார் ஐயங்கார் ஸ்வாமிகளின் இஷ்டப்படியே அவனும் கஷ்டமில்லாது வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான். இரண்டொரு விநாடிக்கெல்லாம் அச்சேவகன் திரும்பிவந்து ஸ்ரீனிவாசய்யங்காரை கமலவிலாஸத்தில் உள்ள அழகிய பெரிய அறையொன்றிலே அழைத்துச் சென்று, மேஜையருகிற் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லி, பின்பு அவரை நோக்கி, "ஐயா! சிம்களநாதரும் வக்கீலய்யாவும் மூன்று நிமிஷங்கழித்து இவ்வறைக்கு வருவார்கள்" என்று கூறிவிட்டுச் சென்றதும். அவ்வறையின் வேறொரு கதவு திறக்கப்பட்டதும், துப்பறிபவரும் வக்கீலும் அவ்விடம் தோன்றி, ஸொலிஸிடருடன் கைகுலுக்கி சிறிதுநேரம் வேடிக்கையாகப் பேசியிருந்தார்கள்.

பின்பு சிங்களநாதர் தமது பையிலிருந்து, சில கடிதக் கட்டுகளை எடுத்து வைத்துவிட்டு, ஜயவலிங் தம்மிடம் அதை அளித்ததையும் அவர் இறந்ததையும் சுருக்கமாய் ஸொலிசிடருக்குரைத்து, கடிதக் கட்டுகளை அவிழ்த்து, ஒவ்வொரு கடிதமாய் எடுக்க, எல்லாம் சிங்களபாஷையில் எழுதியிருப்பதைக் கண்ட துப்பறிபவர் அவைகளின் கருத்துகளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினர். பரதேசிக் கோலந்தாங்கி, கமலவிலாஸத்தில் இறந்துபோனது இலங்கை அரசருடைய மந்திரி பலருள் ஒருவரும் பிரதான நியாயமந்திரிப் பதவியை வகித்தவருமாகிய அமலாதித்தியர் என்பதை ஸொலிசிடரும் வக்கீலும் அறிந்துகொண்டதே, அவர்களுக்கு உண்டான ஆச்சரியத்தை யாரோ அளவிட

வல்லார்?—இலங்கை அரசாங்கத்தாருக்கு மிகவும் முக்கியமான பல பத்திரங்கள் இருப்பதை அறிந்த சிம்களநாதர் மிகவும் சந்தோஷமடைந்தார். சந்தோஷத்திற்கு மூலகாரணம் அக்கடிதங்களுள் இரண்டு அந்நியதேசத்து அரசர்களுடன் இலங்கை இறைவர் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதாய் இருந்தது.

ஏழைமக்கள் எழுதிவிடுத்த—பரிதாபகரமான—கடிதங்களை சிம்களநாதர் தமது நண்பரிருவருக்கும் வாசித்துக் காண்பித்த பொழுது, அவருடைய கண்களில் இருந்த நீர் வடியலாயிற்று. மந்திரியாரிடம் அதிகவட்டிக்குப் பணம் பெற்றுக் கொண்ட பிரபுக்கள் சிலர் தமது கஷ்டஸ்திதியையும் குடும்ப கவலைகளையும் விவரித்தெழுதி, பணத்தைச் சில மாதங்கழித்தே கொடுக்கலாகுமென்றும் அமலாதித்தியருக்கு எழுதியிருந்த கடிதங்களை சிம்களநாதர் ஒருபுறம் எடுத்துவைத்தார். அழகிய நங்கை நாச்சியாரைப் பற்றிக் கூறிய திலக சமுத்திரம் தேடிவந்த கடிதமொன்றை சிம்களநாதர் கண்டார். கண்டதும், அதை வாசித்தார். அக்கடிதத்தில் எழுதியிருந்த விஷயங்களை மற்ற இருவரும் அறிய வேண்டிய அவசியமில்லை என்றெண்ணுகையில், சிம்களநாதருடைய முகத்தில் தோன்றிய ஆச்சரியக் குறிகளால் உண்மையை அறிந்துகொண்ட வக்கீல் மித்திராஞ்சர் "என்ன கடிதம்?" எனக்கேட்டார்.

சிம்களநாதர்:—ஓ! ஒரு ஸ்திரீ எழுதியது.

மித்திரர்:—ஹோ! திலக சமுத்திரம் எழுதியது! சீக்கிரம் விஷயத்தைக் கூறுங்கள்.

ஆச்சரியகரமான விஷயங்கள்.

சிம்களநாதர்:—அல்ல நமக்கேன் அந்நியருடைய விஷயம்?

சித்திரர்:—நண்பரே! நீங்கள் திலக சமுத்திரத்தைப் பற்றி ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும்.

சிம்களநாதர்:—நீர் கூறியது என் இருதயத்தை விட்டகல வில்லை.

சித்திரர்:—சிம்களநாதரே! திலக சமுத்திரம் உமது இருதயத்தை இழுத்துக் கொண்டு விட்டாள்.

சிம்களநாதர்:—(சிரித்துக்கொண்டே) வெகு நன்ருய்ச் சொன்னீர்! அப்பெண்பாலுடன் பேசியதே தவறு என்று கூறுகின்றீரோ!

சித்திரர்:—சிம்களநாதரே! கமல குமாரன் விஷயத்தைப் பற்றியன்றோ நான் திலக சமுத்திரத்தைக் காணவும் வெறுப்படைகின்றேன். கமல குமாரனுடைய காதலியாக நடித்த அவள் கண்ணுக்கு ஒரு பாதகியே!

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் துப்பறியும் சிம்கள நாதருடைய கண்களிலிருந்து கண்ணீர் வடியலாயிற்று. உடனே அவருடைய உள்ளத்தின் கண் "ஹா! வசந்தமாலை நீ உயிருடனிருந்திருந்தால், நான் எத்தனை சுகமாயிருப்பேன்! சிறு வயதிலேயே இறக்க நேரிட்டதே! நான் உன்னை என்னுடைய முழு இருதயத்தோடும் காதலித்தேன்: நீயும் என்னையே சரணம் என்றெண்ணி யிருந்தாய்.—ஹா! யான் திலக சமுத்திரத்துடன் பேசியதற்கே, என்னுடைய நண்

பர் வேறுவிதமாய் நினைத்துக்கொள்ளுகிறுரே!" என்றுதித்தது. இரண்டொரு விநாடிகளுள் அவர் தம் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

ஸ்ரீனிவாசய்யங்கார் அக்கடிதத்தை வாசித்துக் காண்பிக்கும்படி வற்புறுத்த, சிம்களநாதர் சிங்களத்தில் எழுதப் பட்டிருந்த அக்கடிதத்தை பின் வருமாறு தமிழில் மொழி பெயர்த்து வாசித்தார்:—

"மாட்சிமை தங்கிய பிரதான நியாயமந்திரியார் அமலாதித்தியருக்கு.—என்மீது வேண்டுமென்றே சுமத்தப்பட்ட குற்றத்திலிருந்து விடுவித்து விடும்படி நியாய மந்திரியாராகிய தங்களை யான் கடைசிவேண்டுகோள் என்றெண்ணிக் கொண்டு கேட்கின்றேன். நான் நிரபராதி என்பதைத் தாங்கள் ஒருவரே அறியக்கூடுமாதலால், தாங்கள் பெரிய மனது பண்ணி, குற்றமற்ற என்னை —ஒரு அபலையை— குற்றத்திலிருந்து நீக்கவேண்டுமாய்க் கேட்கின்றேன் என்மீது—குற்றம் நடந்தபொழுது, நான் தங்களுடைய அரண்மனையாகிய "வைரக்கோட்டை"-யில் இருந்ததைத் தாங்கள் அறிவீர்களே: அப்படியிருக்க நான் எப்படி அநுராஜபுரத்தில் இருந்திருக்கக் கூடும்? எவ்வழியில் யான் எப்படி குற்றவாளி ஆதல் கூடும்? உண்மையை அறிந்த தாங்கள் குற்றம் நடந்த வேளையில் நான் தங்களுடைய அரண்மனையில் இருந்ததாகக் கூறிவிட்டால், யான் மறுபடியும் என்னுடைய எதிரிகளின் முன் சந்தோஷமாய் உலாவமுடியுமே. தாங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.—நான் தங்களுடைய அரண்மனையிற் போகவேண்டிய காரணம்

யாரென்று எவராவது சந்தேகிக்கக்கூடும் என்று பயப்படுகின்றீரா? நான் பரிசுத்தமானவள் என்பதைத் தாங்கள் அறிந்திருக்கின்றபடியால், தாங்கள் பயப்படவேண்டிய காரணமே இல்லை —"மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே" என்று ஆன்றோர் கூறியபடி, வேண்டுமென்றே குற்றவாளியாக்கப்பட்ட நான் இனி உயிருடன் இருந்து பயன் என்ன? சொல்லுங்கள் அபலையான என்னை நீங்களே காப்பாற்றக்கூடும். இரக்கமற்ற என்னுடைய விரோதிகளிடமிருந்து மட்டும் தாங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும். இக்காரியம் ஒன்றையே தாங்கள் செய்து முடிக்க வேண்டியது. என்னுடைய—ஒரு பெண்பாலினுடைய—வேண்டுகோளைத் தாங்கள் இம்முறையாவது கவனிக்க மாட்டீரா? நாளைக் காலையான் நேரில்வந்து தங்களைக் காணப்போகின்றேன். என் விஷயத்திலாவது தாங்கள் கருணைகாட்டாதிருக்கலாகுமோ?—எதற்கும் கடவுள் இருக்கிறார்—அவராவது என்னைக் காப்பார், சொல்லுங்கள்?—இலக சமுத்திரம்"

வக்கீலும் ஸொலிஸிடரும் அதிக ஆச்சரியத்தோடு சிங்களநாதரை உற்று நோக்கினார்கள். சிங்களநாதர் அவர்களிடம் "இதனால் உண்மை வெளிப்படவில்லையா? இலக் சமுத்திரம் நிரபராதி என்பதே என் முடிவான எண்ணம்," என்றார். அப்பொழுது அவருடைய கண்கள் காற்றினால் மேலே கிளம்பிய ஒரு மஞ்சட் காகிதத்தைக் கண்டு, அதைப்பற்றி மூனேக்குத் தெரிவிக்க, மூனே அதை எடுக்கும்படி லைக்கு உத்தரவிட, சிங்களநாதர் அதைத் தம்முடைய வலக்கரத்தால் எடுத்துப் பார்த்தார். அது ஒரு போலீஸ் ரிகார்ட் என்பதை அறிந்து கொண்ட சிங்களநாதர் அதை மறு

படியும் படித்துப் பார்த்தார். அது மதிவாணரைப்பற்றிக் கூறியது. உயர்ந்த உருவமும் அழகிய மேனியும் நீண்ட மூக்கும் சதா மூக்கண்ணாடி போட்டவரென்றும் சிங்களத்தில் வரையப்பட்டிருந்தது. நான்கு விதமான புகைப்படங்கள் அக்கடிதத்தின் பின்புறத்தே காணப்பட்டன. மதிவாணருடைய தேகக் கூறுபாட்டைப் பற்றிக்கூறிய அதே காகிதத்தில், "சென்னை ராஜதானியில் உள்ள நாகையில் பிறந்தவர்: எப்பொழுதும் அநுராஜபுரத்திலே வசிப்பவர். பல குற்றங்களில் பிடிபட்டுக் கடைசியில் விடுதலைபெற்றவர். ஒரு பாங்கிக் கொள்ளையில் சிறை செய்யப்பட்டு, முடிவில் அவர் குற்றவாளி அல்ல என்று சிறையிலிருந்து விடுதலைபாக்கப்பட்டவர். அவருக்கு திலக சமுத்திரம் என்று ஒரு பெண்மணி இருக்கிறாள்: அவள் மீது ஒன்றுமில்லை ஆனாலும் போலீஸ் அதிகாரிகள் விசாரித்த வரையில், மதிவாணருடைய வருவாய் அநியாய வழியிலிருந்தே வருகின்றது என்பது தெரியவந்தது. ஆதலால் மதிவாணவர் ஒரு அயோக்கியர். துஷ்டசகவாசம் மிகுந்தவர்: பணவாசை அமாவாசையைப் போலல்லாது, பௌர்ணமியைப் போன்றது அவரிடம் என்று அவருடைய நண்பர்கள் கூறுகிறார்கள்," என்று வரையப்பட்டிருந்தது.

இவ்வாச்சரியகரமான விஷயங்களைப்பற்றி மூவரும்பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீனிவாசய்யங்காருக்கு எதுவும் அதிசயமாய்த் தோன்றியது.

அச்சமயத்தில் வேலைபாள் ஒருவன் உட்பிரவேசித்து,

"ஸ்வாமிகளே! மோட்டார் வந்திருக்கிறது" என்று பெரிய வயிற்றைக் கொண்டிருந்த அய்யங்கார் ஸ்வாமிகளிடம் விண்ணப்பிக்க, அந்த ஸொலிஸிடரும் மற்ற இருவரிடமும் செலவு பெற்றுச் சென்றார்.

அதிகாரம். 4.

இறந்த வசந்தமாலையின் புகைப்படம்.

மறுநாட்காலை சிம்களநாதர் இலங்கை ராயபாரத்திற்கு ஒரு வண்டியிலேறிப் போனார் இலங்கை ராயபாரியின் கச்சேரி திருமலைநாயக்கர் மஹாலில் இருந்தது.

மஹாலின்வாயலில் போர்வீரன் ஒருவன் தன் கரத்தில் ஒரு துப்பாக்கியை ஏந்தியவண்ணம் அங்கு மிங்கும் உலவிக்கொண்டிருந்தான். சிம்களநாதர் அவனிடம் தம்முடைய பெயர் அச்சடிக்கப்பட்டிருந்த ஒரு கார்டைக்கொடுத்து, "இலங்கை ராஜதூதரை யான் பார்க்கவேண்டும்" என்றார்.

அப்போர்வீரன் யாதொன்று முரைக்காமல், அவரைத் தன்னுடன் கூடவரும்படி கூறினன். சிம்களநாதர் அவன் இஷ்டப்படியே, அவனைத் தொடர்ந்து ஒரு பெரிய—அலங்கரிக்கப்பட்டிருந்த—ஹாலை அடைந்தார்.

போர்வீரன்:—ஐயா! தங்களுடைய கார்டு மாட்சிமை

தங்கிய ராஜதூதருடைய உதவிக் காரியதரிசியிடம் கொடுக்கப்பட்டது. அவர் தங்களை இவ்விடத்திற் சந்திப்பார்"— எனக் கூறிப்போய் விட்டான்.

அவன் போய்விட்டதும், அந்த ஹாலின் வேறொரு கதவு திறக்கப்பட்டதும் சிரித்தவதனங் கொண்ட ஒருவர் உள்ளே தோன்றி, "ஓ! தாங்களா? மிகவும் சந்தோஷம். ராயபாரியார் இவ்விடம் இல்லை. எவ்விஷயத்தையும் தாங்கள் அச்சமின்றி என்னுடன் உரைக்கலாகும். உட்காருங்கள்" என்று கூறிக்கொண்டே சிங்களநாதரை அடைந்தார்.

சிங்களநாதர் அவ்வழகிய மனிதரை அறியாராதலால் அவருக்கு வந்தனம் செய்துவிட்டு, ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, "வாசுதேவராயரே! தங்களைக் கண்டு யான் சந்தோஷமடைந்தேன். தங்களுடைய அரசாங்கத்தைப் பற்றிய பத்திரங்கள் சில என்னிடம் இருக்கின்றபடியால், யான் அதைத் தாங்கள் எஜமானிடம் அளித்து விடலாம் என்றே வந்தேன்" என்றார்.

வாசுதேவராயர்:—(ஆச்சரியமடைந்து) எம்முடைய அரசாங்கத்தைச் சார்ந்த பத்திரங்களா? எப்படி அவைகள் தங்களுக்குக் கிடைத்தன? தயவு செய்து சொல்வீராக!

சிங்களநாதர்:—இலங்கை இறைவருடைய பிரதான நியாய மந்திரியார் அமலாதித்தியர் கமலவிலாஸ் எனும் பெயரைக் கொண்ட ஹோட்டலில் பரதேசியைப்போல் வேஷந்தரித்துவந்து, இரண்டு தினங்களுக்கு முன்புதான் இறந்துபோனார்.

இறந்த வசந்தமாலையின் புகைப்படம்.

வாசுதேவராயர்:—என்ன? பிரதான மந்திரியாரா? ஹா! தாங்கள் கூறுவது ஆச்சரியமுள்ளதாக இருக்கிறதே! அவரா இவைகளை எல்லாம் ஒப்புவித்தார்? அவரைக் கைது செய்து விடும்படி இலங்கை அரசாங்கத்தார் கட்டளைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் அவர் ஓடிவிட்டதை யும் தாங்கள் அறிந்திருப்பீரென்றே நான் நினைக்கின்றேன் அவரைத்தானா நீங்கள் குறிப்பிட்டது?

உடனே சிம்களநாதர் வாசுதேவராயரிடம் அமலாதித் தியர் பரதேசியைப்போல் வந்ததையும் அவர் சாகுமுன் தம்மிடம் பத்திரங்கள் ஒப்புவித்ததையும் சவிஸ்தாரமாகக் கூறினார். மஞ்சட்காகிதத்தைப் பற்றியாவது திலகசமுத் திரத்தின் கடிதத்தைப் பற்றியாவது அவர் ஒன்றும் கூறவி ல்லை. அவைகளைத் தாம் பத்திரமாக வைத்திருந்தார்.

வாசுதேவராயர் துப்பறிபவரளித்த எல்லாகடிதங்களை யும் பத்திரங்களையும் ஒவ்வொன்றாய்ப் படித்துவந்து முடி வில் சிம்களநாதரிடம் "ஹா! அரசாங்கத்துக்கு எவ்வளவு முக்கியமானது!" என்றார்.

பின்பு இருவரும் அரைமணிநேரம் வரை பேசிக்கொ ண்டிருந்து, உத்தரவு பெற்றுப் பிரிந்தார்கள்.

அன்று மாலை சிம்களநாதர் தாம் எப்படியாவது திலக சமுத்திரத்தின் கடிதத்தை சமுத்திரத்திற்கே கொடுத்து விட எண்ணினார். கமலகுமாரரது விஷயத்தையும் நன்றா கத்தெரிந்து கொள்ளலாம் என்றெண்ணினார். உடனே தம்முடைய நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு நாகப்ப ட்டணத்திற்கு பிரயாணப்பட்டார்.

இறந்த வசந்தமாலையின் புகைப்படம்.

நாகையில் உள்ள ஒரு ஹோட்டலில் சிம்களநாதர் தங்கினார். இவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கும் மதிவாணருடைய மாளிகைக்கும் சுமார் ஒரு மைல் தூரமிருக்கும்

சிம்களநாதர் ஒருவருடைய உதவியின்பேரில் மதிவாணரைப்பற்றியும் அவருடைய குடும்பத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டார். மதிவாணருடைய முன்னோர்களில் ஒருவர் மைசூர் மஹாராஜாவுக்கு திவானாயிருந்து அகண்டைஸ்வரியத்தை நல்ல வழியிலே சம்பாதித்தாரென்றும், பின்பு அவர் நாகையில் "இராஜமாளிகை" எனும் பெரிய வீட்டைக் கட்டினாரென்றும், அவர் இறந்தபிறகு அவருடைய ஐந்தாவது சந்ததியார்கள் பலரும் முதலியனவற்றை துர்நடத்தையிற் பிரவேசித்தபடியால் இழந்து விட்டார்களென்றும், ராஜமாளிகை ஒன்றே அவர்களுக்கு மிகுந்திருந்ததென்றும், அவர்கள் இறந்த பிறகு மதிவாணருடைய தந்தை அம்மாளிகைக்குச் சொந்தக்காரர் ஆயினாரென்றும், அவருக்கு மதிவாணர், திலக சமுத்திரதேவி என்று இரண்டு பேர் ஜனித்தார்களென்றும், மதிவாணருக்கு திலகசமுத்திரம் என்று ஓர் அழகிய பெண்மகள் இருப்பதாகவும், அவர்கள் எல்லாரும் நல்ல குணமுடையவர்களென்றும், மதிவாணர் அடிக்கடி இலங்கைத்தீவுக்குப் போய்வருவது வழக்கமென்றும், வருவாய் அவருக்கு எவ்வழியில் வருகிறது என்பதைத் தான் அறியானென்றும், மதிவாணருடைய மாளிகைக்குப் பலர் விருந்தாளிகளாக வருவார்களென்றும் அக்கிழவர் கூறினார். சிம்களநாதர் அக்கிழவர் தமக்குச் சொல்லிய விஷயத்திற்கு வந்தனம் செய்துவிட்டுத் தம்முடைய சேபியிலிருந்து இரண்டு ரூபாய்களை அவரிடம்

கொடுக்க, அக்கிழவர் மிகவும் மனச்சந்தோஷத்தினால், சிம்களநாதரை நல்லவரென்று புகழ்ந்துரைத்தார்.

சிம்களநாதர் உடனே தம்முடைய அறையையடைந்து சொகுசான சோபாவொன்றின்மீதமர்ந்து, சொற்பநேரம் யோசித்தார். எப்படியாவது மதிவாணருடைய புத்திரியைக் காணவேண்டும் எனும் எண்ணத்தினால் தாண்டப்பட்ட அவர் நல்ல ஸொகுசான உடைகளைத் தரித்துக்கொண்டு ஏதாவது ஒரு நிமித்தத்தை முன்னிட்டுக் கொண்டு திலக சமுத்திரத்தின் தந்தையுடனாவது அவளுடனாவது பேசவேண்டுமென மறுபடியும் எண்ணி ராஜமாளிகைக்குச் சென்றார்.

ராஜமாளிகையை அடைந்த சிம்களநாதர் தம்முடைய பெயர் அச்சிடப்பட்ட ஒரு அட்டைத்துண்டை வேலைக்காரியிடம் கொடுத்து, "நான் திலகசமுத்திர தேவியைக் காண வேண்டும்" எனக்கூறினர். வேலைக்காரி கார்டை எடுத்துச் சென்றதே, "ஹா! வரும்வழியில் நல்ல வேளையாய் சமுத்திரதேவி வியாதி வாய்ப்பட்டுச் சுமார் இரண்டுமாதகாலமாய்க் கஷ்டப்படுகிறார்களென்றும், யாராவது அம்மாளைப் பார்க்கச் சென்றால், அவளுடைய சகோதரர் மதிவாணரே வந்து பேசுவது வழக்கம் என்றும் சொன்னார். மதிவாணருடன் எப்படியாவது மிகவும் தந்திரத்துடன் பேசவேண்டும்." என்று கூறிக்கொண்டு, அவ்வறையை நோக்கினர். அப்பொழுது அவ்வறையின் கதவு திறக்கப்பட்டதும், மதிவாணரே உள்ளே தோன்றி, "என்னுடைய சகோதரி வியாதியாய்ப் பட்டிருக்கின்றமையினால், சிம்களநாதரே! தங்க

ளை நானே பார்க்க வந்தேன். என் பெயர் மதிவாணன்" என்றார்.

தம்மைத்தாமே தமக்கு அறிமுகம் செய்வித்துக்கொண்ட ராஜமாளிகையின் அதிபதியான மதிவாணனை சிங்களநாதர் ஆச்சரியங் கொண்டு கூர்ந்து நோக்கியதில், அவர் அவரைப்பற்றி போலீஸ் ரிகார்டில் படித்தது உண்மையே எனத் தெரிந்துகொண்டார். தாம் இரகசியங்கள் அவர் முன் நிற்பதை அறிந்து கொண்டார். அறிந்து கொண்டதும் அவருக்கு மனோதைரியம் பலப்படலாயிற்று.

மதிவாணர் அப்புதியவரை உட்காரச்சொல்லி, "தாங்கள் என்னுடைய சகோதரியின் தேகஸ்திதியை அறிந்து போக வந்தீர் போலும்" எனக்கேட்டார்

சிங்களநாதர் ஆம் என்று கூறிவிட்டு, "சகோதரியார் சௌகரியமாய்த் தானே யிருக்கின்றார்கள்?" எனக் கேட்டார்

மதிவாணர்:—ஓ! பரவாயில்லை

சிங்களநாதர்:—மிகவும் சந்தோஷம்!—ஹா! தங்களுடைய மாளிகையை என்ன ரமணீகரம் பெற்று விளங்குகிறது. இப்பேர்ப்பட்ட மாளிகைக்குரியவருடன் பேசுவதென்றால் எனக்கு அதிக சந்தோஷம்.

மதிவாணர்:—(மகிழ்ந்து) அப்படியா? எப்படி?

சிங்களநாதர்:—நான் எப்பொழுதும் ஓரே இடத்தில் இருந்தாலன்றோ? எப்பொழுதும் பல வூர்களுக்கும் தேச

ங்களுக்கும் யாத்திரை செய்வதற்கே நாம் பிறந்திருக்கின்ருேம்.

மதிவாணர்:—நானும் தங்களைப்போல் இலங்கை முதலிய இடங்களுக்குப் போய்வருகிறேன்.

சிம்களநாதர்:—அப்படியா? நம்மிருவரையும் தேசாந்திரிகள் என்றே சொல்லலாம்.

மதிவாணர்:—ஆம். என்னருமை மனைவி இறந்தகாலந்தொட்டு—இருபது வருஷகாலமாக—நான் பிரதிமாதத்திலும் இலங்கை முதலான பல இடங்களுக்கு இரண்டு மூன்று தடவையாவது போய்வராவிட்டால், நான் உயிருடன் இருக்கவே மாட்டேன் என்று என்னுடைய குடும்ப டாக்டர் சொல்லியிருக்கிருர். இவ்விடத்தில் அமைதியாய்க் காலங்கழிக்கலாமென்ருலே அது எனுல் முடியக்கூடாததாக விருக்கிறது.

சிம்களநாதர்:—இலங்கைக்கு யான் பலதடவை போய் வந்துள்ளேன். இலங்கைத்தீவைப்போன்ற தீவையான் இதுவரை பார்த்ததேயில்லை. பல அழகிய கட்டடங்களும் மாளிகைகளும்.........

மதிவாணர்:—(இடைமறித்து) தங்களுக்குப் படங்களைப் பார்ப்பதில் விருப்பம் ஏதேனும் உண்டோ?

சிம்களநாதர்:—ஆம் என்று கூறவும், மதிவாணர் அவரைத் தம்முடைய சித்திரமண்டபத்திற்கிட்டுச் சென்ருர்.

இறந்த வசந்தமாலையின் புகைப்படம்.

சுவநகரில அழகிய கட்டிடங்களின் புகைப்படங்களும் இலங்கையில் காணக்கூடிய கோவில்களின் படங்களும் சிம்களநாதருடைய மனதிற்கு மகிழ்வைத் தந்தன.

"வெகு அழகாய் இருக்கின்றன. இவைகளுக்கு அதிகபணம் செலவாயிருக்கும்" என்றார் சிம்களநாதர். அதற்கு ஆம் என்று சிரத்தை அசைத்த மதிவாணர் சில புகைப்படங்கள் இருக்குமிடத்திற்கு சிம்களநாதரை அழைத்துச்சென்று பல ஸ்திரீகளின் புகைப்படங்களைக்காட்டி இவள் எனக்கு இன்னவகையிற் சொந்தப்பட்டவள் என்றுரைத்தார். மதிவாணர், உடனே ஒரு அழகிய படத்தைக்காட்ட சிம்களநாதர் அப்படத்திலுள்ள பெண்ணரணங்கைத் தாம் பார்த்திருப்பதாகப் புகன்றார்.

மதிவாணர்:—இப்படத்தில் இருப்பவள் எனது அருமைப்புதல்வி. திலகசமுத்திரம் எனும் பெயரைக்கொண்டவள். தாங்கள் இவளை எவ்விடத்திற் பார்த்தீர்கள்?

சிம்களநாதர்:—எவ்விடத்திலோ கண்டிருப்பதாய்த் தெரிகிறது. இலங்கையில் உள்ள மதாராவில் தான் போல் இருக்கிறது?

மதிவாணர்:—ஓ! தாங்கள் மதாராவுக்குப் போய்வந்திருக்கின்றீரா?

சிம்களநாதர்:—ஆம் பலதடவை சென்று வந்திருக்கின்றேன். காளிங்கராயன் கோட்டை ஜெமீன்தார், வைர

புரி ஜெமீன்தார், திவான் சாமப்பா, ராவ்சாகிப் குப்புபாபு முதலியவர்கள் எல்லாரும் எனக்குத் தெரிந்த நண்பர்கள்.

மதிவாணர்:—சரி, சரி, தாங்கள் இவளை மதாராவில் தான் சந்திருக்கவேண்டும்.

சிம்களநாதர்:—ஆம். எங்கே உங்களுடைய புதல்வியைக் காணோம்?

மதிவாணர்:—அவள் மதுரையிலே யிருக்கிறாள். நாளை யதினம் இவ்விடம் வரப்போகிறாள்.

சிம்களநாதர்:—தாங்கள் இலங்கைக்கு எப்பொழுது போவீர்கள்?

மதிவாணர்:—நிச்சயமாய் ஒன்றும் சொல்வதற் இல்லை நான் எப்பொழுது புறப்படுவேன் என்பது எனக்கே தெரியாது அவசர விஷயங்கள் அதிகமானால் நான் போவேன்.

சிம்களநாதர்:—அதிக உஷ்ணமான இலங்கையில் இருப்பதற்கு இதைத் தான் சிலாக்கியம் என்பேன்.

மதிவாணர்:—ஆம் சந்தர்ப்பங்கள் என்னை அழைக்கின்றன. அவசர விஷயங்கள் தான்! என் புதல்வி என்னை இவ்விராஜமாளிகையிலே யிருக்கும்படி மிகவும் வற்புறுத்துகிறாள். ஆனால் இது எனக்குக் கஷ்டமான காரியம்.

சிம்களநாதர்:—கஷ்டமான காரியம்! எப்படி?

மதிவாணர்:—என் தேகத்திற்கு இலங்கை உகந்தது.

இறந்த வசந்தமாலையின் புகைப்படம்.

சரி—இன்னும் சில படங்கள் இருக்கின்றனவாதலால் தாங்கள் அவைகளைப் பார்வையிடுவீரோ?

சிம்களநாதர்:—மிகவும் சந்தோஷம்.

உடனே மதிவாணர் அவரை படங்கள் தொங்கவிடப் பட்டிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, இரண்டு படங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கையில் சிம்களநாதருடைய கண் ஒரு நங்கையின் படத்தைப் பார்த்ததே ஆச்சரியமும் திகிலும் கொண்டதை விளங்கிற்று.

என்?

அப்படத்தில் அழகே உருவாய்த்தோன்றிய வனிதை யார் என்று நீங்கள் கேட்டீர்கள். அது, இறந்த வசந்தமாலையின் புகைப்படம்! ஸிம்ஹளநாதருடைய பிராணகாந்தியினுடைய ஒளவியம்!

ஸிம்ஹளநாதர்.—இவள் யார்?

மதிவணர்:—இவள் என்னுடைய புதல்வியின் ஸ்நேகிதை. இவளை நீங்கள் கண்டிருக்கிறீரா?

ஸிம்ஹளநாதர்:—ஓ! இவள் இளங்கோவருடைய புதல்வி வசந்தமாலை.

மதிவாணர்:—ஆம். இத்தனைநாட்களாய் இவளுடைய ஞாபகமே எனக்கு இல்லை.

அச்சமயத்தில் வேலைக்காரன் ஒருவன் உட்பிரவேசி

த்து, "ஐயா! டாக்டர் வந்திருக்கிறார்" என்று மதிவாணரை நோக்கிப் புகன்றான்.

"வருகிறேன், நீ போ" என்று மதிவாணர் கூறியதே, அவ்வேலையாள் அவ்வறையை விட்டகன்றான்.

உடனே மதிவாணர் துப்பறிபவரைப் பார்த்து, "சிம்களநாதரே! என் சகோதரியைப் பார்த்துச் சொல்லும் டாக்டர் வந்திருக்கின்றபடியால், நான் போய்வருகிறேன்," என்று மரியாதையோடு கூறினார்.

ஸிம்ஹளநாதர் பின்பு தம்முடைய ஹோட்டலையடைந்து, ஸ்நானம் செய்து, ஆகாரம்புசித்து, தம்முடைய அறையில் உள்ள சோபாவிற் சாய்ந்து, இறந்த வசந்தமாலையைப்பற்றி யோசித்துக் கொள்ளலாயினார்.

அதிகாரம். 5.

பேயோ? பிசாசோ?

வசந்தமாலை எனும் யோகினியை ஸிம்ஹளநாதர் காதலித்திருந்தார் என்பதை நேயர்கள் அறிவார்கள். சிம்களநாதரை அவள் மிகவும் காதலுடனும் அன்புடனும் சேர்ந்த மெய்க்காதலோடு நேசித்திருந்தாள். ஆனால் ஒரு நாள் அவள் சிம்களநாதரிடம் தான் அந்நியன் ஒருவனை மணந்

பேயோ? பிசாசோ?

தே தீரவேண்டு மென்பதைக் கூறக்கேட்ட சிம்களநாதர் அதிக வருத்தமடைந்து ஒன்றும் சொல்லாமல் வாளாயிருந்துவிட்டார்.—அப்பொழுது—அதாவது நமது கதை நிகழுவதற்கு முன்னர்—மூன்று வருஷங்களுக்கு முன்னே—சிம்களநாதர் துப்பறியும் தொழிலைப்பற்றி ஆராய்ச்சிசெய்துகொண்டிருந்தார்.—வசந்தமாலை போய்விட்டாள். மறுநாட்காலையில் வெளியான "சுதேசமித்திரன்" தினசரியில் வசந்தமாலை வேறொருவனை மணம் செய்துகொள்ளப்போவதைப்பற்றி வரையப்பட்டிருந்ததைக் கண்ட துப்பறியும் சிம்களநாதருக் குண்டாகிய விசனத்தை யாரோ வரையவும் நவிலவும் வல்லார்?—இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஸிம்ஹளநாதர் ஒரு கொலைக்குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நிமித்தமாய் சைனா, ஜப்பான் தேசங்கள் செல்லநேரிட்டாலும், அவர் தம்முடைய பிராணகாதலியை மறக்கவேயில்லை, மறவாது அழுதழுது காலத்தைக் கடத்தியிருக்கையில், அவருடைய நண்பரொருவர் வசந்தமாலை விஷஜ்வரம்கண்டு, வாசியாகாமல், ஒரு ஹோட்டலில் இறந்து போய்விட்டதாக வரைந்து விடுத்தார். அதனை வாசித்துண்மையை உணர்ந்த சிம்களநாதருடைய துக்கத்தை யாரோ வரையமுற்படுவார்?—பூலோகமே முழுகிப்போய் விட்டதென்று எண்ணி ஏங்கினார். ஆனால் காலச்சக்கரம் அவருடைய துக்கத்தை ஆற்றிக்கொண்டேவந்தது. ஆனால் மதிவாணருடைய மாளிகையில் அவர் தம்முடைய காதலியின் திருவுருவந்தீட்டிய புகைப்படத்தைக் கண்டதும், துக்கம் வரா திருக்குமோ?—சோபாவில் சாய்ந்த வண்ணம் தாம் வசந்தமாலையைக் காதலித்த நாள்முதல் மதிவாணருடைய மாளி

கையில் அவளுடைய ஓவியத்தைக் கண்டதுவரையில் நடந்த செய்திகள் அனைத்தும் அவருடைய கண்களின் முன்னர் நாடகக் காட்சிகளாய்த் தோன்றி மெய்க் கண்களிலிருந்து கண்ணீர் வடியும்படி செய்தன.

"சே! சென்றதை யுன்னி யுன்னி கவலைப்படலாகுமோ? எப்படியும் அவள் எனக்கே சொந்தம்!" என்று கூறிக்கொண்டார் சிம்களநாதர். உடனே சோபாவை விட்டெழுந்து, வெளியிற் சென்றார்.

மறுநாட்காலை அவர் ரயில்வேஸ்டேஷனை அடைகையில், அப்பொழுது மதுரையிலிருந்து வந்த திலகசமுத்திரம் ரயில்வண்டியில்வந்து இறங்குவதைக் கண்டானந்தங்கொண்டார். வசந்தமாலையைப் பற்றியும் கடிதத்தைப்பற்றியும் சம்பாஷிக்க வேண்டுமென்று மனதிலே உறுதியான எண்ணங்கொண்டார். திலக சமுத்திரத்திற்கென்று காத்திருந்த மோட்டாரில் அவள் ஏறிக்கொண்டதே, மோட்டாரும் பின்னால் சாராயப்புகையை வாரிப்பறக்க வைத்துவிட்டு, ஜிவ்வென்று போய்விட்டது. சிம்களநாதர் தம்முடைய ஹோட்டலை யடைந்ததும், மதிவாணரைப்பற்றி உரைத்த கிழவரை அழைத்து "திலக சமுத்திரம் மதுரையிலிருந்து வந்துவிட்டாள் எனக் கேள்விப்பட்டேன் அவளைப்பற்றி நீர் அறிந்திருக்கிறதை யெல்லாம் சொல்லுங்கள், பார்ப்போம்" என்றார்.

அக்கிழவர்:—ஓ! திலகம் மிகவும் நல்லவள். அழகில் ரதிதேவி—ஏன்?—இலட்சுமியே! பிரதி வருஷத்திலும் அவள் ராஜமாளிகைக்கு மூன்று நான்கு தடவைதான்வருவது

வழக்கம். அவள் சதா தன் தந்தையுடனே வசிக்கிறாள் அவளுடைய விலாசம் ஒருவருக்கும் தெரியாது. தந்தையும் புதல்வியும் ராஜமாளிகையில் இருக்கும்போது, அடிக்கடி டாக்டர் ஜயவீலர் அவ்விடம் சென்று பேசி, சிற்சில சமயங்களில் சாப்பிடுவதும் உண்டு. மாளிகைக்கு எப்பொழுதாவது சிங்களச்சீமான்கள் விருந்தாளிகளாக வந்திருந்து போவது முண்டு.

சிம்களநாதர்.—நான் கேட்டதைவிட நீங்கள் அதிகமாய் உரைத்துவிட்டீர். வந்தனம்—என்று கூறிவிட்டுத் தம்முடைய அறைக்குப் போய்விட்டார்.

மறுநாட் சாயுங்காலம் சுமார் ஆறுமணி சமயத்தில் வயல்களின் ஓரத்தே சிம்களநாதர் சென்று கொண்டிருக்கையில், ஒரு பெரிய சோலை தென்பட, துப்பறியும் நிபுணர் அதனுட் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது காஞ்சீவரச்சேலையை யுடுத்தியிருந்த திலக சமுத்திரம் அச்சோலையின் வழியே போவதைக் கண்ட சிம்களநாதர் திடீரென்று அவளை அடைந்து, அவளுக்கு மாலைவந்தனம் செய்து நின்றார். அவள் அடைந்த ஆச்சரியம், திகில், நடுக்கம் முதலாயினவற்றை யாரே வரைவார்! மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலையாளியின் முகமென்ன அவளுடை வதனம் பொலிவிழந்தது. கண்கள் பயங்காட்டின. அதரங்களும் கைகால்களும் நருத்தனம் புரியலாயின. "நீங்கள் ......ஸிம்......நாதரே!......விஷயம் என்ன?" என்று அச்சத்தோடு வாய்க்குழறிக் கேட்டாள்.

பேயோ? பிசாசோ?

சிம்களநாதர்:—அம்மா! இலகம்! உன்னைக்கண்டு பேசவே யான் இச்சோலையை அடைந்தது. நீ காற்றுவாங்க இவ்வழியாக வருவாய் என்று எனக்குத் தெரியுமாதலால், இங்கிருக்கின்றேன்.

இலகம்:—என்னுடனா? ஆச்சரியம்!

சிம்களநாதர்:—மதுரையிலிருந்து உன்னைக் காணும் பொருட்டே யான் இவ்விடமடைந்தது. இவ்விடத்தில் ஒருவருமில்லை யாதலால் இங்கே பேசலாம்.—இறந்தானைப் பற்றிச் சொல்லவே வந்தது. நீ அப்பரதேசியின் உண்மைப் பெயரை சொல்ல மறுத்தாலும் பெயரை அறிந்துகொண்டேன். கடலவிலாஸ் ஹோட்டலில் இறந்துபோனது உண்மையில் ஜயவலிங்கனனும் பரதேசிப் பெயரை வைத்துக்கொண்ட பிரதான நியாய மந்திரி அபலாதித்தியரே யன்றி வேறொருவருமல்ல.

இலகம்:—தாங்கள் இதை எப்படி அறிந்தீர்கள்?

சிம்களர்:—நியாய மந்திரியாரின் காகிதங்களே எனக்குத் தெரிவித்தன நான் அவ்விஷயம் பற்றி உன்னுடன் வார்த்தை யாடுவதின் காரணம் என்னவென்றால், உனக்கு எவ்வகையிலாவது உதவி செய்வதற்கே.

இலகம்:—சந்தோஷம், சிம்களநாதரே! தாங்கள் செய்யும் எவ்வுதவியும் எனக்கு நன்மையைப் பயவாதே இதற்கென்ன செய்வது? அச்சண்டாளன் உயிருடன் இருந்திருந்தால் ... ...—என்று கூறுகையில் அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் மளமளவென்று சுரந்தது.

பேயோ? பிசாசோ?

சிம்களர்:—அம்மா! நீ இப்படி விசனப்பட்டால் ஆகுமா? உன்னை நீ காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?

திலகம்:—ஐயோ! என்ன செய்வது இனி? அவன் இறந்து விட்டபடியால் ... ...

சிம்களர்:—ஹா! நீ வருந்தாதே! உன்மீது சுமத்தப்பட்ட குற்றம் நடந்தபொழுது நீ அநுராஜபுரத்தில் இருக்கவில்லை வைரக் கொட்டகையில் இருந்தாய் இதை அவன் அறிவான். ஆனாலும் உண்மையை உரைப்பதற்கு பின்வாங்கிவிட்டான்

இவ்வார்த்தைகளைக் கேட்ட திலக சமுத்திரம் விசன சமுத்திரத்தில் மூழ்கி, செய்வது யாதென்பதறியாது, கல்லாய்ச் சமைந்து, கற்சிலைபோல் இரண்டு விநாடிவரை நின்றிருந்தாள்.

திலகம்:—ஆம். அவன் ஒரு பெரிய கோழையாயிருந்தபடியினால் உண்மையை உரைப்பதற்கு பின்வாங்கிவிட்டான். பாதகன்! சண்டாளன்!

சிம்களர்:—அதுவுமல்லாமல் அவன் ஒரு பெரிய திருடன்.

திலகம்:—ஆம். தினசரிகளால் அறிந்து கொண்டிருக்கலாகும் என்று நான் நினைக்கிறேன். துப்பறிபவர்கள் அச்சண்டாளனைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அவன் இறந்துபோய் புதைக்கப்பட்டாகிவிட்டது என்பதை அவர்கள் அறியார்கள்—சரி, அச்

சண்டாளன் வைத்துக் கொண்டிருந்த பத்திரங்களை என்ன செய்தீர்கள்?

சிங்களர்:—ஓ! அவைகளை யான் மதுரையிலிருக்கும் இலங்கை ராயபாரியிடமளித்து, இலங்கை அரசாங்கத்தாருக்கு அனுப்பும்படி சொல்லி விட்டேன். ஆனால் உன்னுடைய வேண்டுகோள் கடிதத்தை மட்டும் கொடுக்கவில்லை —என்றுரைத்துக் கொண்டே தம்முடைய சேபியிலிருந்து, திலக சமுத்திரத்தினுடை கடிதத்தை எடுத்துக் கொடுக்க, அவள் அதை ஆவலோடு வாங்கி, ஒரு முறை தனக்குள்ளாகவே விஷயத்தை உணர்ந்து, கோபமடைந்து, அதைக் கிழித்து, விர் விர் என்று வீசிக்கொண்டிருந்த காற்றில் எறிந்துவிட, சின்னாபின்னமாய்க் கிழிக்கப்பட்ட காயிதத் துண்டங்கள் இறக்கை உள்ள பறவைபோல் பறந்து ஆகாயத்தின்மேல் எழும்பிப் போயின.

சிங்களர்:—அம்மா! திலக சமுத்திரம்! உன்னுடைய விரோதிகள் யாவர்? அவர்கள் உன்மீது சுமத்திய அபாண்டமென்ன?

திலகம்:—அமலாதித்தியர் இறந்து போனபடியால், எனக்கு இனி விமோசனமில்லை. என் விரோதிகளுடைய கையில் யான் சிக்கியிருக்கிறேன்—என்று கூறியதும் அவள் கண்களில் துக்கம் காணப்பட்டது.

சிம்களர்:—அம்மா! நீ துக்கப்படுவதைப் பார்த்தால் எனக்கும் மனம் உருகிறது—நான் நேற்று—காலைவேளை—

பேயோ? பிசாசோ?

உன்னை எப்படியாவது காணவேண்டுமென்று எண்ணி, உன்னுடைய அத்தையைப் பார்க்கவேண்டுமென்று சொல்லியனுப்பினேன். உன்னுடைய தந்தையுடன் நான் வெகு நேரம் சம்பாஷித்தேன்.—நீ தயவு செய்து உன் அத்தையிடம் நான் அவரை வந்துபார்க்கவில்லையென்றும் திலக சமுத்திரத்தைக் காணவந்தே னென்றும் "தேவி" என்பதை மறந்து சேர்த்துச் சொல்லிவிட்டதாகவும் கூறி, என்னை மன்னிக்கும்படி கேள்.

திலகம்:—ஆகட்டும். நல்ல தந்திரம் செய்தீர்கள் சிம்களநாதரே! தாங்கள் அனுப்பிவைத்த கார்டைக்கண்டதும் அத்தையார் அதிக குழப்பமடைந்திருக்கலாகும். தங்களைப்பற்றி அவள் ஒன்றையுமறியாள்—தாங்கள் நாளைய தினம் ராஜமாளிகைக்கு வரவேண்டுமென்று கேட்கிறேன்.

சிம்களர்:—மிகவும் சந்தோஷமாய் வருகிறேன்.—சரி—மதிவாணருடன் சித்திர மண்டபத்தில் யான் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு அதிசயமான விஷயத்தைக் காணலானேன்.

திலகம்:—என்ன? அதிசயமான விஷயமா! தாங்கள் கூறுவதன் கருத்தென்ன?—என்று பயமும் திகிலும் ஒன்று சேர்ந்த குரலிற் கேட்டாள்.

சிம்களர்—வசந்தமாலையின் புகைப்படத்தை மதிவாணர் எனக்கு காண்பித்தார். அவள் உனக்கு ஸ்நேகிதையாம். நாமிருவரும் அவளை அறிந்திருப்பது எவ்வளவு நல்ல காரியம்!

பேயோ பிசாசோ.

தான் கொண்ட அச்சத்தை அறவே அகற்றிவிட்ட திலக சமுத்திரம் தெளிவான குரலில் "ஓ! வசந்தமாலையா? நீங்கள் அவளை அறிந்திருக்கின்றீரா?" எனக்கேட்டாள்.

சிம்களர்:—ஓ! அறிந்திருக்கிறேன். நீ எப்பொழுது அவளுடைய நட்பை விழைந்து கொண்டாய்?

திலகம்:—ஆ! அவள் நான் வாசித்த பள்ளியில் என்கூடவே ஒரே வகுப்பில் சேர்ந்து வாசித்தாள். அவள் என்னைக்கண்டால் மிகவும் சந்தோஷமடைவாள். அடிக்கடி ராஜமாளிகைக்கு என்கூட வந்திருந்து போவாள். அழகும் நற்குணமும் உருவாக அமைந்தவள்.

சிம்களர்:—என்ன? அவள் ராஜமாளிகைக்கும் வந்திருக்கிறாளா?

திலகம்:—பலதடவை வந்திருக்கிறாள். வசந்தமாலையினுடைய தந்தை எனது தந்தையின் நண்பர். அவர் பெங்களூரிலே முதன்முதலில் தமது புதல்வியுடன் வசித்துவந்தார். பிறகு நாங்கள் இலங்கை சென்றோமாதலால் அவர்களைப் பற்றிய விஷயங்கள் ஒன்றும் எனக்கு அறிவிக்கப்படவில்லை ஆனால் ... ...

சிம்களர்:—ஆனால் என்ன? நீ அவளைப்பற்றிய விஷயங்களை என்னிடம் உரைத்தே தீரவேண்டும். நாம் இரத்தினபுரத்தில் வசிக்கச் சென்றபொழுது, இளங்கோவருடைய தாயார் இறந்துபோனதாக அறிவிக்கப்பட்டோம். இளங்கோவர் தம்முடைய புதல்வியை மதுரையில் வசிக்

கும் தம்முடைய சகோதரியிடம் ஒப்புவித்துவிட்டு, காஸ்மீரதேசத்திற்கும் ரங்கூனுக்கும் போய்விட்டார். பெங்களூரிலிருக்கும் தமது மாளிகையை ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டார். மாசிவீதியில் வசந்தமாலை தன்னுடைய அத்தையோடு வசித்துவந்தாள் ஒருநாள் அவள் எனக்கு ஒரு சடிதம் வரைந்து விடுத்தாள். அவளுடைய அத்தையும் அவளுடைய தந்தையும் அவள் ஒரு பெரிய செல்வச்சீமானை மணம் புரியும்படி மிகவும் வற்புறுத்தினார்கள் என்றும், தான் ஒருவனை காதலனைக் கொண்டிருப்பதாகவும், அவனுடைய பெயரை எனக்கு சொல்லமுடியாதென்றும், தான் மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருப்பதாகவும், ஒரு நாள் இளங்கோவர் அவளை அவளுடைய முதற் காதலனிடம் சென்று தான் வேறொருவனை விவாகம் செய்து கொள்ளுவதைத் தெரிவிக்கவேண்டு மென்றும், அவள் அதன்படியே நடந்ததாகவும் எழுதியிருந்தாள்—பாவம்! வசந்த மாலையின் கதி அப்படி ஆயிற்று!

இதையெல்லாம் விசனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த சிம்களநாதருக்கு இல்லாத கண்ணீர் கண்களினின்றும் ஆறாய் வழிந்தோடியது திக்பிரமை கொண்டவர்போல் அவ்விடத்தே கல்லாய்ச் சமைத்து, அசையாது நின்றார்.

“நான் தான் வசந்தமாலையினுடைய முதற்காதலன்!” என்று கூறினார் ஸிம்ஹளநாதர்.

திலகம்:—(ஆச்சரியமடைந்து) நீங்களா?

சிம்களர்.—ஆம், அம்மா! நான் காதலால் வருந்தியது

பவித்த கஷ்டத்தை கடவுள் ஒருவரே அறியலாகும்! ஒரு காதலியை இழப்பதென்றால், ஸ்திரீகளின் மனதைவிட ஆடவர்களின் மனமே துன்பப்படுகிறது.

திலகம்:—ஆம், சிம்களநாதரே! நானும் அக்கஷ்டத்தை அநுபவித்திருக்கின்றேன். நான் காதலித்த மனிதனை......ஐயோ!.................—என்று மேலும் கூறமுடியாது, கண்ணீருகுத்தாள்.

சிம்களர்—விசனப்படவேண்டாம் அம்மா! — என் காதலி—வசந்தமாலை என்னை நேசித்தேயிருந்தாள்!

திலகம்.—ஆம்.

சிம்களர்.—வசந்தமாலை என்னை விரும்பாமல் அந்த செல்வச் சீமானை மணக்க எண்ணினாள் என்பது நான் கொண்ட அபிப்பிராயம். ஆனால் நீ கூறியபடி அவள் என்னை மறக்கவேயில்லை என்பது தெரிகிறது. சரி—அவள் அந்த அந்நியனை மணம்புரிய வற்புறுத்தப் பட்டாள்?

திலகம்.—அவள் கூறிய காரணத்தை தங்களிடம் கூறுவது மிகையாகாது. இளங்கோவர் தம்முடைய மாளிகை முதலியவற்றை அந்த செல்வச் சீமானான தனதாசருக்கு அடமானம் வைத்து பெருத்த தொகை பெற்றுக்கொண்டார். ஆனால் அவரால் அத்தொகை கொடுக்கப்படமுடியாமற் போயிற்று. வசந்தமாலையை தனக்கு விவாகம் செய்து கொடுத்தால் தாம் அடமான பத்திரத்தை விவாக தினத்தன்று கொடுத்து விடுவதாய் தனதாசர் சொன்னார்.

பேயோ? பிசாசோ?

சிம்களர்.—ஹா! தன் தந்தை தம்முடைய பெருந்த ராஜமாளிகையை இழக்காமலிருக்கட்டு மென்றெண்ணியன்றோ வசந்தமாலை தனதாசனை விவாகம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டனள்? ஹா! என்ன வாத்ஸல்யம்! புத்திரி என்றால் வசந்தமாலையைப் போலன்றோ யிருக்க வேண்டும்!

திலகம்.—ஆம் ஐயா! அவள் செய்த தங்கமான காரியத்திற்கு அவளை ஒருவரும் இகழ்ந்துரையாது. புகழ்ந்துரைப்பான் என்பதில் ஐயமுண்டோ? அவள் உங்களை மறக்கவே இல்லை தன் தந்தையின் பொருட்டு தம்மை விலக்கினாள்!

சிம்களர்.—ஹா! என் கண்மணி என்னை மிகவும் உருக்கமாய் நேசித்திருந்தாள் என்பது உன்னுடைய வார்த்தைகளினாலே யறிந்து மனம் சந்தோஷமடைகின்றது. தனதாசர் ஒரு பெரிய முட்டாள் என்றே நான் உரைப்பேன்! ஏனெனில் அவளை அவன் கட்டாயப்படுத்தலாமோ? தனதாசர் எப்படி யிருப்பார்? நீ அவரைக் கண்டு பேசியிருக்கிறாயா?

திலகம்.—வசந்தமாலையைக் காணுநிமித்தம் யான் ஒரு நாள் மாசிவீதிக்குச் சென்றேன். அப்பொழுது இளங்கோவருடைய வீட்டில் தனதாசர் இருப்பதைப் பார்த்தேன். வசந்தமாலை அவரிடம் என்னைப்பற்றி உரைத்தாள். நாமிருவரும் பின்பு சம்பாஷிக்கலானோம். அச்சமயத்தில் இளங்கோவர் அவ்விடம் வந்து என்னுடன் வேடிக்

கையாய்ப் பேசியிருக்கையில் தனதாசரை சுட்டிகாட்டி, இவர் தான் வசந்தமாலைக்கு புருஷனாக வரப்போகிறவர்" என்றார். அரைமணிநேரம் வரை எல்லாரும் வேடிக்கை யாகப் பேசியிருந்தோம். பின்பு தனதாசரும் இளங்கோ வரும் வெளியிற் புறப்பட, என்னிட வசந்தமாலை தான் தனதாசருக்கு இருதயத்தைக் கொடுக்கவில்லை யென்றும், தன் இருதயத்தை முன்பே ஒருவருக்கு கொடுக்கப்பட்டா யிற்றென்றும் கூறிக்கதறினாள். ஹா! அப்பொழுது என் னுடைய காதல் விஷயம்.

சிம்களர்— என்ன விஷயம்?

திலகம்.— சொல்லுகிறேன் (சிம்களநாதருடைய நண் பர் கமலகுமாரரைப்பற்றி உரைத்ததை ஒரு சிறிது கூறி) ஒரு நாள் நானும் அவரும் ஒரு தோட்டத்திலே உலாவியி ருந்த பொழுது, அவர் நமது கலியாணத்தை அந்தரங்க மாய் முடித்துவிட நல்லநாளும் முகூர்த்தமும் தயார்செய்ய யான் அதற்கு ஒப்புக்கொண்டேன்.- அச்சமயத்தில் என் தந்தையின் நண்பர் அவ்விடம் வந்து என் காதலரிடம் பட கேறி அச்சாயுங்கால வேளையை ஏரியில் நடத்தலாம் என் று சொல்ல, அவர் ஒப்புக்கொண்டார். எல்லாரும் தமது அங்கிகளைக் கழிற்றி ஒரு சேவகனிடம் கொடுத்து, அன் றைபொழுதை சந்தோஷமாய்க் கழித்தார்கள். கமலகு மாரன் ஏரியின் தோற்றத்தை என்னிடமுரைத்தார். அப் பொழுது யான் வசந்த சமுத்திரத்தி லாழ்ந்திருந்தேன் எல்லாரும் மாளிகையை அடைந்தார்கள். அப்பொழுது

பேயோ? பிசாசோ?

என்னுடைய காதலர் மறுநாட்காலையில் என்னைக் காணுவதாகக் கூறிவிட்டு உத்தரவு பெற்றுச் சென்றார். விருந்தாளிகளாய் வந்திருந்த ஒவ்வொருவரும் என்னிடமும் என்னுடைய தந்தையிடமும் உத்தரவு பெற்றேகினார்கள். அப்பொழுது சேவகன் ஒருவன் ஒரு தந்தியை என் தந்தையிடமளித்துப்போக, என் தந்தை அதை வாசித்துவிட்டு, அதைக் கிழித்து எறிந்துவிட்டு, என்னை நோக்கியவண்ணம், "திலகம்! நாம் இப்பொழுது உடனே மைசூருக்குப் பிரயாணப் படவேண்டும்" என்று காரணமொன்றைக் கூறினார். கமலகுமாரரைப் பிரிந்திருக்க வேண்டுமே எனும் எண்ணம் என் மனத்திலுதிக்கவும், அளவற்ற வருத்தம் என்னை வாதிக்கத் தொடங்கியது. நான் தந்தையின் மொழியைத்தட்டி நடப்பவள் அல்லவாதலின், நான் என் தந்தையோடு அன்றிரவே பிரயாணப் பட்டுவிட்டேன். மைசூரை அடைந்து நான் ஐந்து தினங்களுக்குப் பிறகு*"இந்துநேசன்" வாரப்பத்திரிகையிலே...(என்று மேலும் சொல்ல முடியாமல், அழுகையை அடக்கிய வண்ணம் சிறிது நேரம் ஒன்று முறைக்காமல் சும்மா விருந்தாள். அதன் பிறகு கமல குமாரர் தற்கொலை செய்துகொள்வதற்கு மூல காரணத்தையும், கொலை செய்தியை வாசித்த அவள்பட்ட மனோவேதனையையும், தன் மெய்க்காதலையும் கமலகுமாரர் குணத்தையும் வெளியிட்டாள்)

சிம்களநாதர் அவ்வனிதையின் வார்த்தைகளைக் கேட்டதும் தம் மனத்தினுள் "ஹா! இவள் ஒன்றுமறியாத பூங்கோதை! மாசற்ற மடந்தை!" என்று எண்ணிக்கொண்டார்.

---

* சிறந்த வாரப்பத்திரிகை வருடசந்தா 6-0-0 இந்து நேசன் சென்னை

அப்பொழுது இவர்களுக்குப் பின்னல் இருந்த செடி கொடிகளினிடையில் ஒருவகையான சலசலப்பு சப்தம் கேட்கவே, இருவரும் பயந்து, திரும்பி நோக்கினர்கள்.

சிம்களநாதர் பயத்தினல் "ஹா! இதென்ன? பேயோ? பிசாசோ?" எனக்கூவினர்.

செடிகளினிடையில் தோன்றியது யார்?

அதிகாரம் 6,

"பேயல்ல, பிசாசல்ல, பெண்மணியே!"

திடீரென்று சிம்களநாதர் பயந்துகூறிய வார்த்தைகளைக்கேட்ட திலக சமுத்திரம் துப்பறிபவரை நோக்கி, "பேயல்ல, பிசாசல்ல, பெண்மணியே! அவளை அழைத்து வருவோம்" என்ருள்.

திலக சமுத்திரம். அதை கூறுவதற்குள் செடிகொடிகளினிடையில் தோன்றிட்ட—ஒரு பெண் மணி—அவ்வுருவம் சிம்களநாதரை நோக்கி ஓடிவந்து, அவரை அணைத்துக் கொண்டது. பின்பு, அது திலக சமுத்திரத்தை அணைத்துக் கொண்டது.

"ஹா! வசந்தமாலே!" என்ருர் சிம்களநாதர். "சிம்களநாதரே!" என்ருள் திடீரெனத் தோற்றிய வசந்தமாலே.

சிம்களர்:—(ஆச்சரியத்தோடு) கல்லறையிலிருந்துவந்த வசந்தமாலை.—

வசந்தம்:—(திடுக்கிட்டு) என்ன கல்லறையா?

சிம்களர்:—நீ ஒரு ஹோட்டலில் விஷஜ்வரம் கண்டு இறந்து போய்விட்டாய் என்றல்லவோ யான் கேள்விப்பட்டது?

வசந்தம்:—ஹா! விஷஜ்வரம் கண்டு மிகவும் கஷ்டப்பட்டது உண்மையே. நான் பிழைக்க மாட்டேன் என்று டாக்டர்களும் கைவிட்டு விட்டார்களாயினும், துரதிருஷ்ட வசமாய் பிழைத்துக் கொண்டேன்.—நீங்கள் தேச சஞ்சாரம் செய்வதிலேயே காலத்தைக் கழித்து விடுகிறீர்கள் போலிருக்கிறது?—என்று கூறிக்கொண்டே திலக சமுத்திரத்தையும் துப்பறிபவரையும் நோக்கினாள்.

சிம்களர்:—(வசந்தமாலையின் கருத்தையறிந்து) வசந்தம்! இத்தனை தினங்களாய் உன்னைப் பற்றிய நினைவையே கொண்டிருந்த நான் உன்னை இப்பொழுதும் காதலிக்கிறேன் என்பதை அறிந்துகொள். நீ இறந்து விட்டாய் என்று என் நண்பரொருவர் வரைந்து விடுத்த நிருபத்தினால் யான் தேசசஞ்சாரம் செய்து கொண்டிருந்தேன்.

திலகம்:—வசந்தமாலை! நீ இவ்விடம் வருவதற்கு என்ன காரணம்?

வசந்தம்:—இன்று மத்தியானம் நாம் காரைக்காலிலிருந்து இந்நாகைக் கருகில் உள்ள கிராமத்திற்கு வந்தோம்.

உன்னைப்பார்க்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு ராஜமாளிகைக்கும் போனேன். குண்டன் என்னும் வேலைக்காரக் கிழவன், என்னை இன்னார் என்று அறிந்துகொள்ளவில்லை யாதலால், அவன் நான் வந்த காரணத்தை வினவினான். நான் உன்னைப்பற்றிக் கேட்க, அவன் நீ இவ்விடத்தில் உலாவப் போனதைத் தெரிவித்தான். நேராய் இங்கேயே வந்தேன். உங்களிருவரைக் கண்டதும் வெட்கமடைந்து, இச்செடி கொடிகளினிடையில் ஒளிந்து கொண்டேன்......

திலகம்:—ஹா! தெரிந்து கொண்டேன். சிம்களநாதரை நான் காதலிப்பதாய் எண்ணிக் கொண்டனையா?—ஹா! ஐயோ!..................நீ அப்படி எண்ணவேண்டிய அவசியமே யில்லை. இவர் என்னை அறிவார். இவ்விடத்திலே ஸ்நேகபாவமாய் உன்னைப்பற்றியும் வேறுசில விஷயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம் நாம்.

வசந்தம்:—சந்தோஷம், திலகா!

சிம்களர்:—வசந்தம்! இளங்கோவர் இந்நாகைக்கருகில் உள்ள கிராமத்திலா இருக்கிறார்?

வசந்தம்:—ஆம். இன்றிரவு அங்கிருப்போம். ஆனால் இன்றிரவே நாங்கள் மோடாரில் பிரயாணம் செய்யப் போகிறோம். கோயம்புத்தூர் முதலிய இடங்களுக்குப் போவோம்.

திலகம்:—நீங்கள் பேசவேண்டியது அதிகமிருக்குமாதலால், நான் முன்னாள் போய்க்கொண்டிருக்கிறேன். நீங்

கள் இருவரும் பேசிக்கொண்டே வாருங்கள்.—என்று கூறியவண்ணம் அவள் நடந்து சொல்லலானுள். சிம்மளநாதரும் வசந்தமாலையும் ஒருவருடைய தோள்மேல் ஒருவர் கைபோட்டுக் கொண்டு நடப்பதே போல் கரத்தைப்போட்டுக் கொண்டு, சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு போகலாயினர்.

வசந்தம்:—உம்மைப் பற்றிய நினைவு என்னை அடிக்கடி வருந்திக் கொண்டிருந்தது. நீங்கள் என்னை மறந்து விட்டீரென்றே யான் நினைக்க வேண்டுவதா யிருந்தது. ஆனுல் தாங்கள் கொண்டிருந்த தப்பெண்ணத்தை...........

சிம்களர்:—ஆம். விஷயத்தை மெய்யென்றே நினைத்தேன். ஆதலால் தான் நான் உனக்கு பதில் எழுதக்கூட முடியாமற் போய்விட்டது.

வசந்தம்:—அதனுல் என்ன முழுகிப்போய்விட்டது—கடைசியில் நான் தனதாசரை மணந்து கொள்ளவேயில்லை.

சிம்களர்:—என்ன? தனதாசரை நீ மணம் செய்து கொள்ளவில்லையா? ஏன்?

வசந்தம்:—ஏன் என்று கேட்பீரோ, தனதாசர் திடும் பிரவேசமாய் வியாதிவாய்ப் பட்டுவிட்டார். அவருடைய டாக்டர் அவர் இரண்டொரு மாதங்களில் இறந்து விடுவார் என்றே கூறிவிட்டார்கள். ஆதலால் அவர் என்னை விவாக பந்தத்திலிருந்து நீக்கி விட்டார். பின்பு அவர் இறந்து

போனார்.—அவர் சாவதற்கு இரண்டொரு தினங்கள் இருக்கும் பொழுது, என்னை அழைத்து, "வசந்தா! பணத்தின் பொருட்டு உன்னை நான் விவாகம் செய்து கொள்ள எண்ணினேன். நீ காதலித்த மனிதருக்கும் உனக்கும் யான் பெருத்த அபராதி ஆகிவிட்டேனாதலால், நீ என்னை மன்னிக்கவேண்டும். இவ்வடமான பத்திரத்தை உன் தந்தையிடமளித்து விடு. நான் உனக்கு அதிக வருத்தத்தை உண்டாக்கியபடியால், நான் உனக்கு இரண்டுலட்சம் ரூபாய்களைக் கொடுக்கிறேன்" என்றார். பிறகு என்னதிசயத்தையும் என் பெயரில் கொடுக்கப்பட்ட இரண்டு லட்ச ரூபாய் பத்திரத்தையும் என் தந்தையாரிடம் கொடுத்து விட்டேன்.

சிம்களர்:—ஹா! உன் சுயநலத்தைக் கருதாது, நீ செய்த காரியம் புகழத்தக்கது—என்று கூறிவிட்டு, அவளை துரிதமாய் நடக்கும்படி கூறினார்.

இருவரும் திலக சமூத்திரத்தை அடைந்தார்கள்.

புதிய நாவல்கள்! புதிய நாவல்கள்!

மதனசிங்கர் அல்லது உரிமையிழந்த சீமான்	1 4 0
மர்மமுகி அல்லது ரஸாயனகள்வன்	0 12 0
ராஜலக்ஷிமி	0 10 0
ராஜகோபால சந்திரவதனுள் அல்லது மாந்திரீக உச்சாடனம்	2 8 0
ஜீஜாபாய் அல்லது பொன்சுரங்கத்தின் மர்மம்	1 4 0
சுந்தர்சிங் அல்லது பாஸ்கரவிலாச படுகொலை	1 8 0
ஜெயசுந்தரி	1 4 0
சுவர்ணக்கோணம் அல்லது துப்பின் திறம்	0 3 0
அங்கயற்கண்ணி	1 12 0

ஸ்ரீ வாணிவிலாச புஸ்தகசாலை,

79, சுப்புராயசெட்டி வீதி,

திருப்பாதிரிப்புலியூர்.

அதிகாரம் 7.

வீரசிங்கர் யார்?

——:o:——

இராஜமாளிகையை அடைந்த மூவரும், மதிவாணருடைய அறைக்குப்போய் அவ்விடத்திலே அரைமணி நேரத்திற்குமேல் பேசியிருந்தார்கள். ஸிம்ஹளநாதரிடம் கூறிய விஷயங்களையே மதிவாணரிடமும் வசந்தமாலை உரைத்தாள். திலகசமுத்திரம் "அப்பா! ஸிம்ஹளநாதரும் வசந்தமாலையும் காதலர்கள்!" என்றாள் மதிவாணர் சந்தோஷமடைந்தார். வசந்தமாலை அன்றிரவு அங்கேயே தங்கியிருக்கவேண்டுமென்று வற்புறுத்தியபடியால், மதிவாணருடைய வேண்டுகோளைத் தட்டமுடியாத வசந்தமாலை அதற்கு சம்மதித்துவிட்டாள்.

ஸிம்ஹளநாதரும் வசந்தமாலையும் நறுமணங்கமழும் புஷ்பங்களும் பயன்பயக்கும் கனிவிருட்சங்களும் செறிந்து, மிகவும் ரமணீகரமாய் விளங்கிய சோலையில் மறுபடியும் அன்றிரவே சந்தித்தார்கள். இருவரும் கைகோர்த்துக்கொண்டு மெல்ல ஒரு மண்டபத்தை அடைந்தார்கள். அடைதலும் இருவரும் அம்மண்டபத்திலே காணப்பட்ட இரண்டு நாற்காலிகளின்மீது அமர்ந்தனர். காற்று ஆரோக்கியமாய் வீசிக்கொண்டிருந்தது.

ஸிம்ஹளநாதர்:—வசந்தம்! நீ இப்போது எனக்கே சொந்தம்!

வசந்தமாலை:—(நெடுமூச்செறிந்து, ஐந்து விநாடிகள் கழித்து) ஸிம்ஹளநாதரே! இனிமேல் நாம் இருவரும் சந்திக்கலாகாது. இதுவே கடைசி சந்திப்பு.

ஸிம்ஹளர்:—(ஆச்சரியமடைந்து) என்ன! கடைசி சந்திப்பா? நீ என்னுடைய மெய்க்காதலை மறந்து விட்டனையா? நீ கூறியதை நீயே யோசித்துப் பார்த்தால் உன் வார்த்தைகள் சொல்லம்புகள் என்பதைக் காட்டவில்லையா? கண்மணீ! துக்கப்படாதே.

வசந்தம்:—(கண்களைத் துடைத்துக் கொண்டு) என் காதலரே! நான் சாகுமளவும் உம்மையே காதலனாக எண்ணியிருப்பேன் என்பதை மறவாதேயும். ஆனால் சில ரகசிய விஷயங்களின் பொருட்டு, யான் மற்றொருவருக்கு உரியவளானபடியினாலே, நான் உம்மை மணப்பது முடியாத காரியம். இன்னமொரு மாசத்திலே யான் ஒருவருக்கு மனைவியாக வேண்டும்.

ஸிம்ஹளர்:—கண்மணீ! நீ எனக்கே சொந்தம் என்பதை மறந்துபோனாயோ? இரகசிய விஷயங்கள் என்னவோ? நீ இன்னமொருமாசத்திலே விவாகம் செய்துகொள்ளப் போகின்ற மனிதன் பெயர்...............................

வசந்தம்:—அவைகளை எல்லாம் இப்போது யான் கூற முடியாது.

ஸிம்ஹளர்:—வசந்தம்! நீ அவனை மணம் புரிந்து கொள்ளலாகாது. உன்னுடைய பணத்திற்காசைப்பட்டு

அவன் உன்னை கலியாணம் செய்துகொள்ள யோசித்திருக்கிறான் என்பதை நீ அறியாய் அக்கொடியன் உன்னை வற்புறுத்தினானா?

வசந்தம்:—ஸிம்ஹளநாதரே! அவன்..........ஹா! ....கண்டுவிட்டபடியால், நான் அவனுக்கு மனைவியாகியே தீரவேண்டுமாம். ஐயோ! அச்சண்டாளன்...............ஸிம்ஹளநாதரே! நான் என்ன உளறிக்கொண்டிருக்கிறேன். நான் எவ்விதத்திலும் அவனுக்கு மனைவி ஆகியே தீரவேண்டுமாதலால், நான் போய் வருகிறேன். என்று கூறியதே அவ்விடத்தை விட்டகன்று போனாள்.

* * *

மறுநாட் காலையில் திலகசமுத்திரம் ஒரு சோபாவிற் சாய்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில், வேலைக்காரன் ஒருவன் உள்ளே நுழைந்து, "அம்மணீ! ஸிம்ஹளநாதர் தங்களைக் காணவேண்டுமாம்" என்ன, "அழைத்துவா" என்றாள். ஸிம்ஹளநாதர் உட்பிரவேசித்ததும் அவளுக்கு காலை வந்தனம் செய்து, அவள் காட்டிய ஆசனமொன்றிலமர்ந்து, "வசந்தமாலை எங்கே?" எனக்கேட்டார்.

திலகம்:—அவள் நேற்றிரவு தன்னுடைய அறையிலிருந்து திடீரென்று வந்து குதிரைவண்டியை ஆயத்தப்படுத்திக் கொடுக்கும்படி கேட்க, என்னுடைய தந்தையும் அவள் இஷ்டப்படியே வண்டி தயார் செய்து, இளங்கோவர் தங்கியுள்ள கிராமத்திற்கு அனுப்பிவிட்டார். அவளுந

டையவதனம் வெளுத்து, துக்கம் காட்டியது. தான் போவ தைப்பற்றி தம்மிடம் ஒன்று முறைக்க வில்லையா ?

ஸிம்ஹறளர்:—(துக்கங்கொண்டு) இல்லை. போகும் பொழுது, அவள் உன்னிடம் ஏதாவது கூறினளோ?

திலகம்:—ஒன்றுமில்லை. அப்பொழுது ஏதோ குழப்ப மான விஷயங்கள் நேரிட்டதால், அவள் முகம் வெளுத்து விட்டதென்று சொன்னுள். அவள் உடுத்திருந்த சேலை கிழிக்கப்பட்டிருந்தது. அவள் பேசும் பொழுது தொண் டையை தன்னுடைய கரத்தால் பிடித்துக்கொண்டு அஞ்சிய குரலுடன் பேசினுள். உடனே நான் எண்ணியது என்ன வென்ருல் தாங்கள் அவளுடன் சச்சரவு செய்திருக்கும் என்பதே.

ஸிம்ஹறளர்:—அவள் திடீரென்று போய்விட்டாளாகை யால், நான் என்னுடைய ஹோட்டலுக்குப் போய்விட் டேன். நாம் இருவரும் சாந்தமாகவே பேசியிருக்க, சச் சரவு எப்படி உண்டாகும்? நீ கூறும் விஷயங்களை நோக்கி ஞல், அவள் வேறு எவராலோ தாக்கப்பட்டிருக்கிருள் என் பது வெளியாகின்றது. என்னை விட்டுப் பிரிந்துபோனதும், அவள் வேருெருவனை சந்தித்திருக்கிருள். அவளுக்கும் அவனுக்கும் சச்சரவு உண்டாகி இருக்கவேண்டும்.

திலகம்:—அவளை யாரோ ஒருவன் தொடர்ந்து வந்தி ருக்கிருன். தாங்களும் அவளும் சந்தித்துப் பேசியதை மறைந்த வண்ணம் கேட்டிருக்கவேண்டும்.

வீரசிங்கர் யார்.

சிம்ஹளநாதர் எப்படியாவது மற்ரொருதடவை வசந்த மாலையைக் கண்டு பேசவேண்டு மென்று முடிவு செய்து கொண்டு, வசந்தமாலை இன்னம் அக்கிராமத்திலேயே யிருப் பாள் என்று முடிவு செய்துகொண்டார். அச்சமயத்திலே அவ்வறையின் கதவு திறக்கப்பட்டதும், நாற்பதாண்டுகளைக் கடத்திய ராணுவத்தில் அமர்ந்திருந்தவரைப்போல் காணப் பட்ட ஒரு பெரிய மனிதர் சிரித்தவண்ண முட்பிரவேசித் தார்.

உடனே திலக சமுத்திரம் அவரை வரும்படி கூறி விட்டு, சிம்ஹளநாதரிடம் "இவர் எனது தந்தையின் நண்ப ராகிய வீரசிங்கர்" என்ருள்.

சிம்ஹளநாதர் வீரசிங்கர் யார் என்பதை யோசிக்கலா ஞர்.

வீரசிங்கர்:—திலகம்! இவர் பெயர் என்ன?

திலகம்:—சிம்ஹளநாதர்.

அதிகாரம் 8.

கள்வன் யார்?

—:o:—

கண்டி என்பது இலங்கையில் சிறந்து விளங்கும் நகரங் களுள் ஒன்று. பூர்வம் சில அரசர் அதை தலை நகராமாய்க் கொண்டு செங்கோலோச்சி வந்திருந்தார்கள்.

கள்வன் யார்.

அப்படிப்பட்ட சிறந்த பட்டணத்திலே—நமது கதை நிகழுவதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னே—ஒருநாள் ஸிம்ஹளநாதர் அழகிய சிங்கார சோலையினுள் தம்முடைய இரண்டு நண்பர்களுடன் உலாவியிருந்தார். அவருடைய நண்பர்களுள் ஒருவர் காப்டென் கங்காஸிங் எனும் பெயரைக் கொண்ட சுந்தர புருஷர். மற்றொருவர் தனபால செட்டியார்: ஒரு பெரிய கோடீஸ்வரர். தேவகோட்டையிலிருந்து அதிக பணத்தை எடுத்துக்கொண்டு இலங்கைக்குப் போகையில் ஸிம்ஹளநாதரையும் கங்காஸிங்கரையும் நட்பாளர்களாய்க் கொண்டவர். அறுபது ஆண்டுகளுக்கு மேலானவர்.

அந்த சிங்கார சோலையிலே அன்றிரவு சுமார் எட்டு மணி சமயத்திலே காப்டென் கங்காஸிங் சில திண்பண்டாதிகளை வரவழைத்து, ஸிம்ஹளநாதருடைய நண்பருக்குக் கொடுக்க, "ஒரு காசுக்கு எட்டு சட்டிகள் வாங்கி, சட்டி ஒன்று எட்டுகாசுகள் வீதம் விற்கும் செட்டி" யாரும் அதை ஆவலோடு தின்றுவிட்டார்.

அன்றிரவு சுமார் பனிரெண்டுமணி சமயத்திலே வேலைக்காரி ஸிம்ஹளநாதருடைய அறைக்குள் வந்து, "ஐயா! செட்டியாரவர்களுக்கு உடம்பு அசௌக்கியமாய் இருக்கிறபடியால், தங்களை அழைத்துவரச் சொன்னார்கள்" என்றாள்.

ஸிம்ஹளநாதரும் செட்டியாருடைய அறைக்குப் போனார்.

செட்டியார், ஸிம்ஹளநாதரை நோக்கி, "நண்பரே! எனக்கு உடம்பு அசௌக்கியமாய் இருக்கிறபடியால், தாங்கள் ஒரு டாக்டரை அழைத்துவாரும்" என்றதே, ஸிம்ஹளநாதர் தமக்குத் தெரிந்த ஒரு டாக்டரை அழைத்து வந்தார்.

டாக்டர் அவ்வறையில் ஏதோ மயக்க மருந்தின் வாசனையை முகர்ந்து, நோயாளியின் கரத்தைப் பிடித்துப் பார்த்து, "ஹா! விஷ மருந்து இவருடைய ஆகாரத்திலே யாவது வேறெதிலேயாவது சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

ஸிம்ஹளநாதர் அதிக ஆச்சரியமடைந்தார். "ஓ! இன்று சிங்கார சோலையிலே காப்டென் கங்காஸிங் இவருக்கு மாத்திரம் தின்பண்ட வகைகளை வரவழைத்துக் கொடுத்தார். அதிலே ஏதாவது விஷ மருந்து.............." என்பதற்குள்,

செட்டியார்:—ஆம். அதை உட்கொண்டதும் வயிற்றிலே ஒருவகையான குமட்டல் உண்டாயிற்று.—சரி. ஒரு சங்கதி சொல்லுகிறேன்—ஒரு நாழிகைக்கு முன்பு யான் ஒருவகையான மயக்கநிலையில் இருந்தேன். அப்பொழுது காப்டென் கங்காஸிங் இவ்விடம் வந்ததுபோல் இருந்தது.............சரி—ஸிம்ஹளநாதரே! என்னுடைய ஸ்டீல் டிராங்கில் ஐந்துலட்சஷம் விலைபெறும் இரண்டு வைரங்கள் வைத்திருந்தேன். அவைகள் இருக்கின்றனவா பாரும்.

ஸிம்ஹள நாதர் சென்று பார்க்க, அவைகளைக் காணோம் என்று சொல்ல, "ஹா! கங்காஸிங் அவைகளை எடுத்துப் போயிருக்கவேண்டும்" என்று கூறி அழுவதாயி னார்.

போலீஸ் அதிகாரிகளுக்கு விஷயம் சொல்லி அனுப் பப்பட்டது. காப்டென் கங்காஸிங் காணப்படவில்லை. ஹோட்டல் அதிகாரி போலீஸ் அதிகாரியிடம் "ஐயா! அப்பாவி என்னிடம் இரண்டு தினங்களுக்கு முன்பு கடனாக வாங்கிக்கொண்ட ஆயிரம் ரூபாயைக் கொண்டுபோய் விட்டாரே!" என்று கூறிப் பிரலாபித்தார்.

வீரசிங்கரைக் கண்டபொழுது மேற்கூறியவைகளை யெல்லாம் மனதினுள் எண்ணிய ஸிம்ஹளநாதர்—வீர சிங்கரை—முன்பே கண்டியில் செட்டியாருடைய வைரக் கற்களைத் திருடிப்போய்விட்ட திருடன்—காப்டென் கங்கா ஸிங் என்பதை அறிந்துகொண்டதே, மதிவாணர்மீது கொண்டிருந்த சந்தேகம் அவருக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அதிகாரம் 9.

வேடன் வலையில் மட வன்னம்

—:o:—

"ஹா! இப்பொழுது வீர சிங்கர் என்று பெயர் பூண்ட காப்டென் கங்காஸிங் என்னை இன்னுனென்று அறிந்து கொள்ளவில்லை. இச் சண்டாளனைக் கைது செய்

வதற்கு என்னிடமதிகாரம் இருந்தாலும், யான் இவனை கைது செய்யமாட்டேன். இவனுடைய செய்கைகளை இன்னம் அறியவேண்டும்—மதிவாணர் ஒரு பெரிய கள்வர் என்பது எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது:—வசந்த மாலை ஒரு பேராபத்திற் சிக்கியிருக்கிறாளாதலால், நான் அவளை எவ்வகையிலும் தப்பவைத்து, மணம் புரிந்து கொள்ள வேண்டும்.—கடவுளே! நீர் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.—மோட்டாரில் எல்லாரும் சென்று கடைசியில் கொயம்பத்தூர் போய்த் தங்குவதாகவன்றோ, முதல் முதலில் வசந்த மாலை கூறியிருந்தாள். நானும் ஒரு மோடாரில் ஏறிக்கொண்டு கோவைக்குச் செல்லுகிறேன், அங்கு நான் என்னுடைய பிராணதாரத்தைக் காண இயலும்.—"துஷ்டர்களை நிக்ரகித்து, சிஷ்டர்களை பரிபாலனஞ் செய்யவேண்டியதல்லவோ என் கடமை," என்று ஹோட்டலையடைந்த ஸிம்ஹளநாதர் கூறிக்கொண்டார்.

ஆனல் அப்பொழுது மோட்டார் முதலியன ஒன்றும் கிடைக்காமையால் ஸிம்ஹளநாதர் சும்மாவிருக்கநேரிட்டது. அன்று மத்தியானம் அவர் தங்கியிருந்த ஹோட்டலின் சொந்தக்காரருடையமோட்டார் "ஓவர்லண்ட்" (Overland) அவ்விடம்வரவே, ஸிம்ஹளநாதர் அதன் சொந்தக்காரரிடம் தம்முடைய காரியத்திற்கு அதனைத் தரும்படியாய்க் கேட்க, அவரும் ஒப்புக்கொண்டார். மோட்டாரோட்டி குப்புசாமி கவுண்டன் மோட்டாரை ஆயத்தமாய் பிரயாணத்திற்கு நிறுத்த, ஸிம்ஹளநாதர் அதில் ஏறிக்கொண்டார். மறுநாட் காலை சுமார் ஒன்பதரை மணிக்கு மோட்டார் ஈரோடை

அடைந்தது. ஸிம்ஹளநாதர் அவ்விடத்திலே ரயில்வே ஸ்டேஷனை அடுத்திருக்கும் ஹோட்டலில் அன்று ஆகாரத்தை உட்கொண்டார். மறுபடியும் அவர்கள் பயணத்தைத் துவக்கினார்கள். அன்று மாலைக்குள் மோட்டார் கோயம்புத்தூரை அடைந்தது. டிரைவரும் துப்பறிபவரும் பத்ம விலாசம் எனும் ஹோட்டலில் ஆகாரத்தை உட்கொண்டார்கள்.

அப்பொழுது அவ்விடத்திற்கு வந்த இரண்டு சேவகர்கள் காபி கொண்டுவரும்படி சொல்லிவிட்டு, பெஞ்சில் அமர்ந்தார்கள். அப்போது ஒருவன் மற்றொருவனிடம் "இன்று ஆறுமணிக்குமேல் வீரசிங்கரும் இளங்கோவரும் மற்றும் சிலரும்" மோகன விலாசத்திற்கு வரப்போகின்றார்களாம். நாம் சீக்கிரம் சென்று அவர்களுடைய வரவை எதிர் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு வருகையில், காபி கொண்டுவரப்படவே அவர்கள் அதை ஆற்றிக் குடித்து விட்டுப் போய்விட்டார்கள்.

அவ்விருவரும் பேசியதை கவனித்த ஸிம்ஹளநாதர் தாம் கஷ்டப்பட்டு அறிய வேண்டியிருந்ததை சுலப சாத்தியத்தில் அறிந்து கொண்டதனால் அதிக சந்தோஷமடைந்து, ஹோட்டல் காரரிடமடைந்து, "ஐயா! மோகன விலாசம் எவ்விடத்திலே யிருக்கிறது?" என்று கேட்க, ஹோட்டல்காரர் "வீரசிங்கருடைய மாளிகையா?—அது ஸ்ரீனிவாச புரத்திலே யிருக்கிறது.—மாளிகையைச் சுற்றிலும் பெருத்த தோட்டமொன்றிருப்பதால், அம்மாளிகை ஒருவர் கண்ணுக்கும் புலனாகாது.—பிராமணாள் புதுவீதியை

அடுத்திருக்கிறது," என்றார். ஸிம்ஹளநாதர் பின்பு ஹோட்டல் காரனிடம் விடை பெற்றுக்கொண்டு, மோட்டாரில் ஏறிக் கொள்ள, குப்புசாமி கவுண்டன் அதை ஓட்டிச் சென்றான். ஸ்ரீனிவாசபுரத்தை யடைந்த அம்மோட்டார் ஒரு சிறிய ஹோட்டலின் எதிரில் போய் நின்றது: ஸிம்ஹளநாதர் தாம் அந்த ஹோட்டலிலே தங்கியிருப்பதாய்க் கூறினார். குப்புசாமி மோட்டாரை அச்சிறு ஹோட்டலின் பின்புறத்தே யிருந்த ஒரு கொட்டகையில் நிறுத்திவிட்டு, ஸிம்ஹளநாதருடைய அறையிலே போயுட்கார்ந்து கொண்டான்.

ஸிம்ஹளநாதர் தாம் தேடிவந்த வசந்தமாலை எப்படியும் மோகன விலாசத்திற்கு வருவாள் என்பதை உறுதியாய் நம்பினாராதலால், உடனே மோகன விலாசத்தை மறைத்திருந்த மரங்களினிடையில் தம்மை மறைத்துக் கொண்டவராய் மோட்டாரை எதிர் நோக்கி இருந்தார். அப்பொழுது ஒரு மோட்டார் வண்டி வரும் சப்தம் அவருடைய செவிக்குக் கட்புலனாயிற்று.

வசந்தமாலை உட்கார்ந்திருந்த மோட்டார் காற்றினும் வேகத்துடன் அதிக சப்தம் செய்துகொண்டு, மோகன விலாசத்தின் எதிரில் வந்து நின்றது. மோகன விலாசத்தின் தலைவாயில் திறக்கப்படவும் ஒரு பெரிய கனவான் வெளிவந்து இளங்கோவருக்கும் வசந்தமாலைக்கும் வசந்தமாலையை அடுத்துட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீக்கும் மாலை வந்தனஞ் செய்து, புன்னகை முகத்தினராய் வசந்தமாலை அருகிலே போய் நின்று கொண்டார்.

நின்று கொண்டதைக் கண்ட சிம்ஹளநாதர். திடுக்கிட்டு, அம்மணிதனை உற்று நோக்கினர். அவருடைய சந்தேகம் முழுவதும் நிவர்த்தியாயிற்று. வசந்த மாலையை மணம் செய்துக் கொள்ளப் போகிறவன்—யார் தெரியுமா?—காப்டென் கங்காசிங்—வீரசிங்கர்—என்பவனே!

"வேடன் வலையில் மடவன்னம்" சிக்கியிருப்பதை அறிந்த சிம்ஹளநாதர் அதிக வருத்த மடைந்தார்.

வசந்தமாலை வெளுத்த வதனத்தைக் கொண்டு, விசனமடைந்திருந்தாளாகையினல், வீரசிங்கரிடம் ஒன்றும் பேச வில்லை.

வீரசிங்கர் :—கண்மணீ! வசந்தமாலே! மோட்டார் பிரயாணம் எப்படி இருக்கிறது?

வசந்தம் :—(அருவருப்புடன்) காதலரே! வெகு நன்ருயிருந்தது.

அப்பொழுது அம்மாளிகையின் வேலையாட்கள் பிரயாணிகளுடைய மூட்டை முடிச்சுகளை எல்லாம் தூக்கித் தோளின்மீது வைத்துக்கொண்டு மாளிகையை நோக்கி நடந்தார்கள். இளங்கோவருக்குமட்டும் வீரசிங்கர் ஒரு பெரிய வஞ்சகக் கள்வன் என்பது தெரிந்திருந்தால், அவர் அம்மாளிகையில் ஒரு விநாடிகூட தன் புதல்வியுடன் தங்கமாட்டாரென்பதாக ஸிம்ஹளநாதர் எண்ணினர். வீரசிங்கரை உடனே அரஸ்டு செய்வதற்குப் போதுமான ருஜுக்

கள் தம்மிடம் இருந்தாலும், அக்கொடியோனுடைய நடிப்பைப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்.

வந்த பிரயாணிகள் சாப்பிடுவதற்கு உட்காரதத்தம் அறைகளில் இருந்து வருமுன், வசந்தமாலையும் வீரசிங்கரும் ஒருவர் கரத்தை ஒருவர் பிடித்துக்கொண்டு, அவ்விடம் முன்னதாகவே வந்து பேசினர். ஸிம்ஹளநாதர் அவ்விடத்தை அடுத்திருந்த பெரிய தூண் ஒன்றின் மறைவிலே அந்தகாரம் சூழ்ந்த இருட்டிலே ஒருவருமறியாவண்ணம் மறைந்திருந்தார். அவர்கள் பேசியதெல்லாம் துப்பறிபவருடைய செவிக்கு எட்டியது. வீரசிங்கர் வசந்தமாலையிடம், "காதலியே! ஸிம்ஹளநாதர் உன்னுடைய காதலனு? நேற்று, காலைவேளையிலேயே உன்னை நாடி அவன் ராஜமாளிகைக்கு வந்திருந்தான். திலகசமுத்திரம் என்னிடம் அவரைக் கொணர்ந்து அறிமுகம் செய்தாள். உன்னுடைய முதற்காதலனும் அவன்" என்ருர்.

பயமே உருவாய்த் தோன்றிய அவள் அது மெய்யல்லவென்றும் அவள் சிம்ஹளநாதரை பல வருஷங்களாய் அறிவாளென்று முறைத்தாள்.

வீரசிங்கர்:—நான் மதிவாணருடைய நண்பன் என்பதை நீ உன்னுடைய தந்தையிடம் சொல்லவில்லை அல்லவா.

வசந்தம்:—இன்னம் இல்லை.

வீரசிங்கர்:—சந்தோஷம். அவர் இதை அறியவேண்டிய அவசியமே இல்லையாதலால், நீ வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்.

வசந்தம்:—என்?

வீரசிங்கர்:—நீ இன்னம் மர்மத்தை அறியாய். உனது தந்தைக்கும் மதிவாணருக்கும் சில வருஷங்களாய் பகையிருந்துவருகிறது. நான்பகையாளியின் நண்பன்என்று அவர் அறிந்தால், என்னைக் கொலையாளி என்றே அவர் எண்ணலாகும்.—சரி—நீ இனிமேல் ஸிம்ஹளநாதனை எம்முகாந்திரம் முன்னிட்டாவது சந்திக்கவாவது பேசவாவது தகாது.—சரி முந்திய இரவுக்கு முன்னிரவு நீ உன் அறைக்குப் போன பிறகு நான் மதிவாணருடைய அறைக்குப் போய் பேசியிருக்கையில், நீ அவ்வறையின் கதவின் பக்கத்தில் வந்து நின்று உற்றுக் கேட்டனையாம். இதை சேவகன் ஒருவன் கூறினன். பெரிய இரகசியமொன்றை நீ அறிந்துவிட்டாய். வேடன் வலைப்பட்ட மானைப்போல் இப்போது யான் இருக்கிறேன். நீ அவ்விரகசியத்தை ஒருவருக்கும் சொல்லக் கூடாது. என்னுடைய ரகசியத்தை திருட்டுத் தனமாய் அறிந்துகொண்ட உன்னிடம் என்னுடைய உயிர் சிக்கியிருக்கிறது" என்றார்.

அப்பொழுது விருந்தினர் அவ்விடம் வரவே, சம்பாஷணை முடிந்துவிட்டது. ஸிம்ஹளநாதர் தமது ஹோட்டலையடைந்து ஆகாராதிகளை எடுத்துக்கொண்டு, ஒரு நாற்காலியில் அமர்ந்து, மறுநாள் எப்படியாவது வேடன் வலையிலகப்பட்ட மடவன்னத்தை சந்திக்க வேண்டுமென்று எண்ணி சில தந்திரங்களை யோசித்தார். கடைசியில் இரு அழகிய கையுறைகளை எடுத்து, ஒரு காகிதம் எடுத்து,

அதில் மறுநாட்காலை ஆறு மணிக்கு தாம் அவளை (வசந்த மாலையை) எப்படியும் சந்தித்தே தீரவேண்டு மென்பதை வரைந்து, குப்புசாமியை அழைத்து அவைகளை அவனிட மளித்து, "குப்பு! இவைகளை நீ மோகன விலாசத்திற்கு கொண்டுபோய் "இளமைப் பருவம் மிகுந்த யௌவன ஸ்திரீயை நான் பார்த்தல் வேண்டும். நான் ரஸ்தாவில் இவைகளைக்கண்டெடுத்தேன். ஆதலால் இவைகளை சேர்பிக்கக் கொணர்ந்தேன்" என்று சொல். ஆனால் அவள் இவைகள் தன்னுடையனவல்ல என்பாள்; அப்பொழுது இக் காயிதத்தை அவளிடம் தந்திரமாய் கொடு," என்றதும், அவன் போய்விட்டான்.

ஒரு மணிநேரங் கழித்து குப்புசாமி திரும்பிவந்து, கையுறைகளை ஸிம்ஹள நாதரிடம் கொடுத்துவிட்டு, அவரை நோக்கி "ஐயா! தாங்கள் சொன்னபடி நான் சேவகனிடம் ஒரு யௌவன மாதைப் பார்க்கவேண்டு மென்றேன். அவன் உடனே அவ்விடத்தை விட்டகன்றான். இரண்டு விநாடிகளுக்கு பிறகு ஒருவர் வந்து என்னை உற்று நோக்கினார். ஆனால் நான் ஒரு மோட்டார்ரோட்டி யென்பதை அவர் அறிந்து கொண்டபடியால், அவர் என் மீது கோபங் கொள்ளாமல் என்னை அந்த ஸ்திரீ இருக்கும் அறைக்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். பின்பு நான் கடிதத்தைக் கொடுக்க, அம்மாது அதனை வாசித்து விட்டு, "சரி. சந்தோஷம். விவசாய கல்லூரியை அடுத்த பனங் காட்டிலே அவர் என்னை சந்திக்கட்டும்" என்றாள்.

வேடன் வலையில் மடவன்னம்.

மறுநாட்காலை விவசாய கல்லூரி கடிகாரம் ஆறுமணி அடித்தபோது, பனங்காட்டிலே இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் ஸிம்ஹளநாதரும் வசந்தமாலையுமே.

வசந்தம் ;—காதலரே! தாங்கள் என்னை ஏனோ தொடர்ந்து வருதல் வேண்டும்?

ஸிம்ஹளர் :—ஏனோ! உன்னை ஆபத்திலிருந்து தப்புவிக்கச் செய்வதற்கே யான் இவ்விடம் வந்தது.

வீரசிங்கனை நீ மணத்தலாகாது.

வசந்தம் :—ஐயோ! அது முடியாது.

ஸிம்ஹளர் :—என் காதலித் தோகையே! நீ அப்படி கூறக் கூடாது.—நீ நாகைக்கு வந்த காரணத்தை நான் அறிவேன். திலக சமுத்திரத்தைப் பார்க்க நீ வரவில்லை. ஒரு ஆடவனைக் காணும் பொருட்டே நீ வந்தது—அவ்வாடவனை யான் அறிவேன் நீ ஆச்சரியப்பட வேண்டிய காரணமேயில்லை. நான் துப்பறியும் தொழிலில் அமர்ந்திருப்பதனால், எதையும் யோசித்தால், உண்மையை அறிந்து கொள்ளமுடியும். வீரசிங்கனை நீ சந்தித்தபிறகு நீ நாகையை யடுத்த கிராமத்திற்குச் சென்றுவிட்டாய். வீரசிங்கன் எனும் பெயரை இப்போது வகித்திருக்கும் காப்டென் கங்காசிங்கனை நீ ரயிலேறி வரும்படியாய்க் கூறிவிட்டாய். அவனுடைய நடத்தையை நான் அறிவேன். அவனை நான் அரஸ்டு செய்யலாம்.

வேடன் வலையில் மடவன்னம்.

வசந்தம்:—ஐயோ! அதைமட்டும் செய்யக்கூடாது. தாங்கள் அப்படி ஏதாவது செய்வீராகில், அச்சண்டாளன் உண்மையை நான் வெளியிட்டுவிட்டேனென் றெண்ணி என்னை கொலைசெய்து விடலாகும். வீரசிங்கனுடைய ரக சியத்தை நான் அறிவேன்.

ஸிம்ஹறளர்:—வசந்தம்! ரகசியத்தை அறிந்தும் நீ அவனை மணாளனாக வரிக்க எண்ணங்கொண்டாய்! உன் தந்தை இதைத் தெரிந்தும்——

வசந்தம்:—ஐயோ! என் தந்தை இச் சண்டாளனு டைய மர்மத்தை அறியார்- நான் உம்மை மணத்தல் முடி யாத காரியம். அச்சதிகாரன் என்மீது பொல்லாத பழி ஒன்றை வைத்துக் கொண்டு..............................

ஸிம்ஹறளர்:—என்ன பழி?

வசந்தம்:—ஐயோ! அதைக் கூறினால் தாங்கள் அவ னைக் கைது செய்வீர்கள். நான் இறக்க நேரிடும்!

ஸிம்ஹறளர்:—வசந்தம்! ஹா! இவ்வுதய சூரிய னுடைய கதிர்கள் உன் மீது தாக்குவதும், காற்றுமேலே வீசுவதும் எனக்கு பொறாமையைக் கொடுக்கின்றன! உன் னைப் பிரிந்து நான் உயிர் வாழ முடியாது.

வசந்தம்:—ஐயோ! விசனப்படாதீர்கள்.

ஸிம்ஹறளர்.—விசனப்படாமல் எப்படி இருக்கமுடியும்.

வசந்தம் :—எனக்கு தம்மீது இன்னம் காதல் இருந்தாலும் அது உபயோகமில்லையே!—நான் மாளிகைக்குப் போகவேண்டும். நான் காற்றுவாங்க வெளிச் சென்றதாக அவர்கள் எண்ணி இருப்பார்கள். காலதாமதம் செய்தால், அவர்கள் என்மீது சந்தேகம் கொள்வார்கள்.—என்னை மறந்து விடுங்கள்! நான் உங்களுடைய மனைவியாக ஆவதற்குப் பிராப்தமில்லை! என்ன செய்வது?

ஸிம்ஹளர் :—வேடன் வலை மடவன்னமே!

அதிகாரம் 10.

இலங்கை செல்லுதல்.

——:o:——

அன்று காலை வேளையிலே கோவையைவிட்டு மோட்டாரில் நீங்கிய சிம்ஹளநாதர் மறுநாட் சாயுங்காலம் நாகையை அடைந்தார்.

மறுநாட் காலை அவர் ராஜ மாளிகைக்குச் சென்று தாம் மதிவாணரைப் பார்க்க வேண்டுமென்று அம்மாளிகையிலிருந்த ஒரு முதியவளிடம் கூறினர்.

அம்முதியவள் :—ஐயா! எஜமானர் தம்முடைய புத்திரியுடன் நேற்றிரவு இலங்கை நோக்கிப் பிரயாணப்பட்டுவிட்டார்.

இலங்கை செல்லுதல்.

ஸிம்ஹறளர் :—(ஆச்சரியமடைந்து) அப்படியா! மதிவாணருடைய சகோதரியாருடன் நான் பேசவேண்டும்.

அம்முதியவள் :—ஓ! அவர்கள் இப்போது சற்றே குணமடைந்திருப்பார்கள். என் பின்னால் வாருங்கள்—என்றதே, அவள் ஸிம்ஹறளநாதரை திலகசமுத்திர தேவியாருடைய அறைக்கு அழைத்துச் செல்ல, தேவியாரும் ஸிம்ஹறளநாதரை வரும்படி கூறினாள். "நேற்று மாலை இலங்கையிலிருந்து ஒரு தந்தி வந்தது. அதன்பொருட்டு அவன் சமுத்திரத்தையு மறைத்துக்கொண்டு இலங்கைக்குச் சென்றுவிட்டனன். மதாராவுக்கே போயிருக்க வேண்டுமென்று யான் நினைக்கிறேன்," என்றாள் தேவி.

ஸிம்ஹறளர் :—அம்மா! அவர் வருவதற்கு நெடுநாட்கள் பிடிக்குமா?

தி. ச. தேவி :—ஆம். வசந்த காலம் முடியும்வரை வரமாட்டான்.

ஸிம்ஹறளர் :—அப்படியா!—வந்தனம். நான் போய் வருகிறேன்—என்றுரைத்து விட்டு தம்முடைய ஹோட்டலுக்குச் சென்று, குளித்த பின்னர் ஆகாராதிகளை உட்கொண்டு, ஒரு சோபாவில் 'அப்பாடா' என்று சொல்லிய வண்ணம் சாய்ந்து கொண்டு, மதிவாணருக்கு வந்த தந்தியில் ஏதோ விசேஷ மிருப்பதாய் எண்ணி அன்றிரவே மதுரைக்குப் போய் தம் நண்பரிடம் தாம் இலங்கை செல்லப் போவதைக் கூற எண்ணினார்.

இலங்கை செல்லுதல்.

இரண்டு தினங்கள் ஸிம்ஹளநாதர் இன்பத்துடன் கமலவிலாஸ் ஹோட்டலில் தம் நண்பருடன் தங்கியிருந்தார். மூன்றாவது நாள் சாயுங்காலம் அவர், வக்கீலிடம், தாம் இலங்கைக்குப் போக வேண்டியதைத் தெரிவித்து விட்டு, ரயிலேறி, தூத்துக்குடி வரை சென்று, பின்பு கொழும்பு நகரை நோக்கிச் செல்லும் "மகாராஜா" எனும் கப்பலில் பிரயாணப்பட்டார். ஐந்து தினங்களுள் துப்பறிபவர் மதாராவை அடைந்து, அவ்விடத்திற் பிரபலமான ஒரு பெரிய ஹோட்டலிலே தங்கினார். மறுநாட் சாயுங்காலம் அவர் அப்பட்டணத்தின் சிங்கார சோலைக்கு உலாவச் சென்றார். அரைமணி நேரத்தை அச்சோலையினுள் இன்பகரமாய் கழித்து விட்டு, இந்து மகா சமுத்திரக் கரைக்குச் சென்றார்.

ஆஹா! அக்கடற்கரைக் காட்சியின் ரமணீகரத்தை என்னே வரைவோம்! வெய்யோனாகிய சூரியன் உஷ்ணத்தை ஆற்றாது, கடற்கரைக்கு வந்த மனிதர் பலர்!— ஒருபுறம் புகைக் கலங்கள் நின்றிருந்தன! ஒருபுறம் காணப்பட்ட மணல் மேடுகள் குன்றுகளைப்போல விருந்தன! அலைகள் கரையை நாடி ஓடி மோதின! பெருமாட்டிகளும் சீமாட்டிகளும் பிரபுக்களும் வாலிபர்களும் சந்தோஷமாய்ப் பேசியிருந்தார்கள்!

ஸிம்ஹளநாதர் சமுத்திர அலைகளை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருக்கையில், நாற்பது ஆண்டுகளைக் கடந்த மோகனாங்கிச் சீமாட்டி எனும் ஒரு பிரபுவினுடைய மனைவி தன்னுடைய புதல்வி—ஜெகன் மோகினி—யுடன்

துப்பறிபவர் இருக்கும் இடத்தை அடைந்து, "சிம்ஹள நாதரே! ஏது, தாங்கள் இன்று இவ்விடத்திற் காணப்படு வது?" என்று வினவினாள்.

ஸிம்ஹளர்:—(இருவருக்கும் மாலை வந்தனம் செய்து) துப்பறியும் விஷயமாய் இத் தீவுக்கு வர நேரிட்டது. உங்க ளிருவரையும் கண்டு சந்தோஷமடைந்தேன். நீங்கள் பல தேசத்தவர்களையும் பார்த்திருக்கிறீர்கள்: தங்களுக்கு ஸ்ரீமான் மதிவாணரைப் பற்றித் தெரியுமா?

ஜெகன் மோகினி:—ஓ! தெரியும். அவருடைய புதல்வி யின் பெயர் திலக சமுத்திரம் என்பதன்றோ? ஓ! அவர்கள் பீமவிலாஸ் ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள். ஓ! தாங்கள் திலகத்தின்மீது காதல் கொண்டிருக்கிறாப் போல விருக்கிறது!

ஸிம்ஹளர்:—காதலும் கொள்ளவில்லை! கீதலும் கொள்ளவில்லை! இந்தியாவில் அவர்களை நான் பார்த்திருக் கிறேன்: மிகவும் மரியாதை மிக்கவர்கள்.

மோகனாங்கி:—ஆமாம் ஆனால் அவர்கள் பணக் காரர் அல்ல. அவருடைய தொழில் என்னவென்பதே ஒருவருக்கும் தெரியாதாகையினால், அவர்கள் அவரை ரக சிய மனிதர் என்று வேடிக்கையாகக் கூறுவார்கள். ஆனால் தாங்கள் யான் கூறுவதைக்கேட்டு அதன்படி ஒழுகுங்கள். மதிவாணரும் அவருடைய புதல்வியும் நமக்குகந்த நண்பர் கள் ஆகார். அதற்கு காரணம் இருக்கிறது. தாங்கள் அவ்விருவர்களைப் பற்றியும் ஜாக்கிரதை மிகவும் எடுத்துக் கொள்ளவேண்டும். என்று கூறிவிட்டு, மூவருமாக ஒரு அரைமணிநேரம் பேசியிருந்தார்கள்.

அதிகாரம் 11.

சம்பாஷணை.

—:o:—

மறுநாட் சாயங்காலம் சூரியன் மேற்குமலை வாயலில் செல்வதற்கு சிறிது நேரம் இருக்கும்பொழுது, மோகனுங் கிச் சீமாட்டியின் எச்சரிக்கையைக் கவனியாத ஸிம்ஹள நாதர் பிரேம விலாசத்தையடைந்து, திலக சமுத்திரத்தைக் கண்டார். அப்பெண்மணி துப்பறிபவருடைய வருகையை எதிர்பாராதவளாதலின், ஸிம்ஹளநாதரைக் கண்டதும், திகிலும் பயமும் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தவளாய், அங்கேயே பதுமைபோல் கல்லாகச் சமைந்து நின்றவளாய் இரண்டொரு விநாடிகள் வரை என்ன செய்வது என்ன செய்கிறது எனும் கேள்விகளைத் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டவளாய்க் காணப்பட்டாள். பின்பு தன்னுடைய கலக்கத்தையும் குழப்பத்தையும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக்கொண்டு, சிம்ஹளநாதரை ஒரு ஆசனத்திலமரும்படி கூறி, தானும் ஒரு ஆசனத்தை எடுத்துக்கொண்டாள்.

பின்பு ஸிம்ஹளநாதர் "மதிவாணர் இன்னம் இவ்விடத்திற்கு வரவில்லையா?" என்று சந்தேகப் பார்வையைக் காட்டிய வதனத்துடன் கேட்டார்.

திலகம் :—அவர் காலையிலிருந்து அநுராஜபுரம் போயிருக்கிறாராதலால், என்னை இந்த ஹோட்டலிலே இருக்கும்படி செய்திருக்கிறார்.

ஸிம்ஹளர் :—எப்பொழுது வருவார் ?

திலகம் —எப்பொழுது வருவார் என்று சொல்வதற்கு இல்லை. பல மாசங்களாகலாம். மாரியாத்தாளும் நானும் காத்துக் காத்து பொறுமையை இழந்து விட்டோம்.

ஸிம்ஹளர்.—அநுராஜபுரத்தில் அவர் தம்முடைய ஸ்நேகிதருடைய வீட்டிலா தங்குவார் ?

திலகம் :—ஆம். நமக்கு மிகவும் பழக்கமான டாக்டர் கௌஜிக் என்பவருடைய மாளிகையிலே தங்குவது வழக்கம்.

ஸிம்ஹளர் :—சரி. நீங்கள் நாகையை விட்டு உடனே புறப்பட்டுவிட்டீர்கள்.

திலகம் :—ஆம். ஒரு தந்தியின் பொருட்டே. ஆனால் நாம் இவ்விடத்திற்கு வந்ததை தாங்கள் அறிந்தது எப்படி ?

ஸிம்ஹளர் :—உன்னுடைய அத்தையிடமிருந்து விஷயத்தை அறிந்து கொண்டபடியால், நான் உன்னைக் காணநிமித்தம் இவ்விடம் வந்தேன்.

திலகம் :—என்னைக் காணநிமித்தம வந்த தாங்கள் பெரிய பிரயாணத்தை யன்றோ செய்தீர்கள்—என்று கூறி விட்டுத் தனது கருவிழிகளால் துப்பறிபவனை உற்றுப் பார்த்தாள்.

ஸிம்ஹளர் :—ஆம். ஆனால் நான் உன்னைக் காணவந்த விஷயம் வசந்த மாலையைப் பற்றியது.

திலகம்:—அவள் நம்மை விட்டகன்றது அதிக ஆச்சரியகரமான விஷயமாய் இருக்கிறது! அவளை எவனோ ஒருவன் கொல்ல நினைத்து எதிர்த்திருக்கிறான். யார் என்பது எனக்குத் தெரியவில்லையாகையால், மிகவும் ஆச்சரியகரமாய் இருக்கிறது. வசந்தமாலை என்னிடம் ஒரு விஷயத்தையும் சொல்லவில்லை. ஏதோ இரகசியம் மறைத்திருக்க வேண்டும்.

ஸிம்ஹளர்:—ஆம். அவள் வேறொருவனை விவாகத்தில் புருஷனாகச் செய்து...............................

திலகம்:—என்ன? தம்மை விவாகம் செய்து கொள்ளுவாள் என்றல்லவோ யான் எண்ணி சந்தோஷமடைந்திருந்தது! வசந்தமாலை உம்மைக் காதலித்த வண்ணமன்றோயிருக்கிறாள்.

ஸிம்ஹளர்:—இன்னம் ஒரு மாசத்தில் வசந்தமாலை அவனை மணம்புரியவேண்டும். அதற்கு இரகசியமான காரணம் இருக்கிறது. அதைப்பற்றிப் பேசுவதன் பொருட்டே உன்னை அடைந்தது. நீ எனது காதலியின் அத்தியந்தஸ்நேகிதை.

திலகம்:—ஐயா! என்னால் கூடுமானால் யான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

ஸிம்ஹளர்:—சந்தோஷம். நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ பதில் தயவு செய்து சொல்லவேண்டும் அம்மா! நீ வீரசிங்கரை எத்தனை மாதகாலமாய் அறிவாய்?

திலகம்:—அவரை யான் என் குழவிப் பருவந் தொட்டே அறிவேன். அவர் மிகவும் நல்லவர்.

ஸிம்ஹளர்:—அவரைப்பற்றி நீ அறிந்திருப்பதை எல்லாம் கூறு.

திலகம் :—அவர் ஒரு சேனையில் காப்டெனுகவிருந்து இப்போது உபகாரச் சம்பளம் வாங்கிக்கொண்டுவருகிருர். பல பெரிய கனதனவான்கள் அவருக்கு நண்பராவார்கள். அவர் மதுரையில் தல்லாக்குளத்திலுள்ள பங்களாவிலே வசித்து வருகிருர். சில வருஷகாலமாக அவருடைய தேகஸ்திதி சரியாய் இராமையினுல், அவர், அவருடைய டாக்டர் சொன்னபடி தேச சஞ்சாரம் செய்து வருகிருர். அவர் எனது தந்தையாரின் ஆப்த நண்பர்.

ஸிம்ஹளர் :—சரி நான் ராஜ மாளிகையை விட்டு நீங்கியதே அவர் எப்பொழுது புறப்பட்டார்?

திலகம் :—நீங்கள் உத்தரவு பெற்றுச் சென்ற ஒரு மணிநேரத்திற்குள் அவர் மாளிகையை விட்டு நீங்கினுர். என் தந்தையுடன் ஏதோ வியாபார விஷய சம்பந்தமாய்ப் பேச வந்தாராம்.

ஸிம்ஹளர் :---ஓ ! சரி—சரி—வசந்தமாலை வீரசிங்கரை அறிவாளா?

திலகம் :—அறியாள். வசந்த மாலையுடன் நாமிருவரும் இராஜ மாளிகையை அடைந்த பொழுது, வீரசிங்கர் தலைவலி யென்று அவஸ்தையுடன் மெத்தைமீது பிரத்தியேக

மாய் விடப்பட்ட அவருடைய அறையிலே சயனித்திருந்தார் இதை நீங்கள் அறியீர். மறுநாட் காலைக்குள் வசந்தமாலை சென்று விட்டனள்.

ஸிம்ஹளர் :—சரி. நான் வசந்த மாலையை சந்தித்த பின்னர், அவள் வீரசிங்கரை சந்தித்திருக்கிறளா—என்று தந்திரமாய்க் கேட்டார்.

திலகம் :—ஐயா! அவரை இன்னுமென்று அறியாத வசந்தமாலை வீரசிங்கரை சந்தித்தாள் என்பது சரியல்ல. ஒருவருக்கொருவர் இன்னம் அறிமுகமே இல்லை. அப்படியிருக்க தாங்கள் கூறுவது விநோதமாக விருக்கிறதே! வீரசிங்கரா வசந்தமாலையுடன் சச்சரவு செய்தார்?

ஸிம்ஹளர் :—இருவருக்கும் அறிமுகமே இல்லையா?— ஒருவரை ஒருவர் அறியார்! அம்மா! இதை நீ எப்படி அறிவாய்?

திலகம் :—என் சிற்றறிவுக் கெட்டியவாறு அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அறியார் என்றே கூறினேன். அவர்கள் எவ்விடத்திலாவது சந்தித்திருக்கலாகும்.

ஸிம்ஹளர் :—சந்தோஷம்! வீரசிங்கரைக் காணுவதற் கஞ்சியன்றே அவள் ஓடிவிட்டாள்?

திலகம் :—இவ்வபிப்பிராயம் நன்றாயிருக்கிறதே!— சரி—அது கிடக்கட்டும்.—வசந்தமாலை இன்னமொரு மாசத்திலே எவரையோ மணந்துகொள்வதாகச் சொன்னீரே, அவர் யாவர்?

ஸிம்ஹளர் :—அவரா? வீரசிங்கர்—என்று மல்லிய குரலிற் கூறினார். துக்கம் அவருடைய மென்னியைப் பிடித்தது.

திலகம் :—(அடக்கிய ஆச்சரியத்துடன்) என்ன? வீர சிங்கரையா! அவரை வசந்தமாலை புருஷனாக வரிக்கிறாளா? முடியாத காரியம்!

ஸிம்ஹளர் :—ஏன் வசந்தம் அவனை வரிக்கா விட்டாலும், அம்மனிதன் அவளைத் தனது மனைவியாகும்படி செய்கிறான். அவளுடைய ரகசியம் அவன் கரத்திற் சிக்கி யிருக்கிறதாம். அவனைக் கண்டால் அவள் இல்லாத பய மும் நடுக்கலும் கொள்கிறாள்.

திலகம் :—சிம்ஹளநாதரே! தாங்கள் இவ்விவா கத்தை தடுக்கவேண்டும். வசந்தமாலை அவரைப் புருஷ னாக்கிக் கொள்ளலாகாது. அதற்கு காரணங்கள் இருக் கின்றன. அவளுக்கு எச்சரிக்கை கொடுக்க வேண்டியது அவசியம், அவருடைய மர்மத்தை அவள் அறிந்தால், அவள் உடனே அவருடைய விரோதியாவாள். நாம் இருவ ரும் அவ்விருவரையும் சதிபதிகளாக்கக் கூடாது: ஆக்கப் பார்ப்பது. தகாது அவளை இக்கஷ்டத்திலிருந்து நாம் நீக்க வேண்டும்.

ஸிம்ஹளர் :—அவன் உந்தை (உனது தந்தை) யின் உகந்த ஸ்நேகிதனாயிருந்தும், வீரசிங்கரிடம் நீ வெறுப் பைக் கொண்டிருப்பது எனக்கு இல்லாத ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

திலகம்:—அதைப் பற்றி இப்போது பேசவேண்டிய தேயில்லை. வசந்தமாலை தங்களையே கலியாணம் செய்து கொள்ளவேண்டும். இல்லாவிடின், கலியாணமே செய்து கொள்ளக் கூடாது.

ஸிம்ஹளர்:—ஆம், அம்மா! நீ கூறியதே யுண்மை. இது முடியாக்காரியம் என்றே யான் எண்ணவேண்டியிருக்கிறது. சில ரகசிய விஷயங்களைக்கொண்டு இவன் வசந்தத்தின் பிற்கால வாழ்க்கையைச் கெடுக்கப் பார்க்கின்றான். அவன் ராஜமாளிகையில் இருப்பதை அவள் அறிந்து கொண்டபடியால், அவனுடன் பேசுவதற்கே இளங்கோவரிடம் உன்னைக்காணும் காரணத்தைக் கூறி வந்திருக்கிறாள்.

திலகம்:—ஆனால் அவர்களிருவரும் ஒருவரையொருவர் அறியார்கள் என்றன்றோ நாம் எண்ணியுள்ளோம்.

ஸிம்ஹளர்:—மதிவாணரும் வீரசிங்கரும் அன்றிரவு அந்தரங்கமாய்ப் பேசியிருக்கையில் இவள் அவர்களுடைய அந்தரங்க சம்பாஷணத்தை உற்றுக் கேட்டனளாம்.

திலகம்:—அப்படியா! அவர்கள் பேசியதை அவள் கேட்டுவிட்டாள்! இது மெய்தானே!

ஸிம்ஹளர்:—ஆம்.

திலகம்:—இவ்விஷயத்தை யார் உமக்குக் கூறினார்கள்? என்று கேட்டவேளை அவளுடைய முகம் பொல்லாத விகாரத்தைக் காட்டியாது.

ஸிம்ஹளர்:—வீரசிங்கரே அவளைக்கேட்க. அவள் ஒப்பக்கொண்டாள். தான் கலியாணம் செய்துகொள்ள

வேண்டியவனுடைய நடத்தையை அறியவேண்டியது அவளுக்கு இன்றியமையாத சுதந்தரமன்றோ?

திலகம்:—என் தந்தை அவருடன் பேசிய விதத்தை இவள் அறிந்து கொண்டாள்.—இது உண்மையாக விருப்பின், வசந்தமாலை வீரசிங்கரையே மணம் செய்துகொள்ள வேண்டியது அவசியமே! தங்களை மணப்பதற்கு அருகரல்லள்!

ஸிம்ஹளர்:—மணப்பதா! ஏன்?

திலகம்:—ஏன்? என் தந்தையாருடைய ரகசியத்தை அவள் அறிந்திருக்கிறாள்.

ஸிம்ஹளர்:—அம்மா! நீ கூறுவதன் கருத்தென்ன?

திலகம்:—சரி—நான் உம்முடன் தாராளமாகப் பேசிவிட்டேன் என்றே நினைக்கிறேன்.

ஸிம்ஹளர்:—சில விநாடிகளுக்கு முன்பு நீ எனக்கு உபகாரம் செய்வதாய்க் கூறியிருக்க, திடும்பிரவேசமாய் உன் எண்ணம் மாறுவதென்ன?

திலகம்:—அவள் என்தந்தையின் ரகசியத்தை அறிந்திருக்கிறாள். வீரசிங்கர் ராஜமாளிகையில் இருக்கும்பொழுது அவள் அவர்பால்கொண்டுள்ள காதல்மேலிட்டதால் அவரை சந்தித்தாள். இருவர் அந்தரங்கமாய்ப் பேசியிருக்கையில், உற்றுக்கேட்டாள். இவைகளே என்னுடைய காரணத்தை மாற்றிவிட்டன.

ஸிம்ஹளர் :—சரி.—வீரசிங்கர்மீது அவள் அணுவள வேனும் காதல் கொள்ளவில்லை. இரகசியத்தின் பொருட்டே அவள் அவன் பிடியிற் சிக்கியிருக்கிறாள்.

திலகம் :—ஐயா ! முன்னொரு தடவை அவள் தங்களை ஏமாற்றியிருக்க, தாங்கள் இன்னம் அவளை நினைந்துருகு வது சரியல்ல.

ஸிம்ஹளர் :—ஹா ! அப்போது அவள் தன் தந்தை யைக் காப்பாற்றும் நிமித்தம் செய்தாள்.

திலகம் :—அதுவே என்னுடைய காரணமும்.

ஸிம்ஹளர் :—ஹா ! உன் தந்தையைக் காப்பாற்று வதற்கோ நீ செய்வது ?

திலகம் :—(கலக்கமும் குழப்பமு மடைந்து) நான் எப்படி சொல்லக் கூடும். எதுவும் எனக்கு குழம்பிப் போய் விட்ட..................

ஸிம்ஹளர் :—ஓ ! அவ்விரகசியம் குற்றங்கொண்ட தோ ?

திலகம் :—அவள் வீரசிங்கரையே மணம் செய்து கொள்ளட்டும்.

ஸிம்ஹளர் :—ஹா ! திலகசமுத்திரம் ? அவளுடைய உயிருக்குயிரான உன் வாயிலிருந்தா இச்சொற்கள் வெளிப் படுகின்றன !

திலகம் :—ஹா ! அவள் எனக்கு விரோதி அல்ல. வீரசிங்கருடைய மனைவி என்று அவள் ஆவதைக் காட்டி

லும் ஆகா திருத்தலே உத்தமம். ஆனால் இப்போது அப்படியில்லை. வீரசிங்கரையே அவள் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். அதுவும் என் மனத் திருப்தியின் பொருட்டே. அவள் நம்மிருவரையும் ஏமாற்றுகிறாள்.

ஸிம்ஹளர்:—இருவரையுமா! எவ்வகையில்?

திலகம்:—ஹா! எவ்வகையில் என்பதைத் தான் நாமிருவரும் இன்னம் அறியவில்லை. வீரசிங்கரைக் காணவந்ததும், வீரசிங்கரை அறியாதவள்போல் நடித்ததும், வீரசிங்கருடன் பேசியிருந்த எந்தையின் ரகசியத்தை அறிந்ததும்...
....

ஸிம்ஹளர்:—அறிந்து கொண்டதற்கு காரணம் அவ்வயோக்கிய வீரசிங்கனிடமிருந்து தப்புவதன் பொருட்டே. உன்னையாவது மதிவாணரையாவது கெடுத்துக் குட்டிச் சுவராக்கவேண்டும் என்பது அவளுடைய எண்ணமல்ல என்பதை அம்மா! நீ அறிந்துகொள்ள வேண்டும். நீ தான் அவளைக் காப்பாற்றவேண்டும்.

திலகம்:—நானா? எப்படி முடியும்?

ஸிம்ஹளர்:—வீரசிங்கர் உண்மையில் யாவன் என்பதை நீ அறிவாய். உனக்கு இஷ்டமிருந்தால், அவளை கஷ்டத்திலிருந்து காப்பாற்றலாம்.

திலகம்:—அது மாத்திரம் என்னால் முடியாது.

ஸிம்ஹளர்:—(அதிககோபமடைந்து) உன்னால் முடியாவிட்டால் என்னால் முடியும்! நான் யார் தெரியுமா? துப்பறி

யும் ஸிம்ஹளநாதன்! வீரசிங்கர் என்று பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கும் காப்டென் கங்காசிங் பலவகை குற்றங்களின் பொருட்டு போலீஸாரால் தேடப்படுகிறான். அவனை அரஸ்டு செய்வதற்கு என்னிடம் அதிகாரம் இருக்கிறது.

திலகம்:—(திடுக்கிட்டு) அப்படியா! தாங்கள் அங்ஙனம் செய்வீரா?—எனக் கேட்டுக்கொண்டே ஸிம்ஹளநாதனை உற்றுப் பார்த்தபோது அவளுடைய கண்கள் மிகுந்த கலக்கத்தையும் சஞ்சலத்தையும் அச்சத்தையும் துயரத்தையும் காட்டின.

ஸிம்ஹளர்:—அம்மா! வீரசிங்கன் ஒரு பெரிய கள்வன். அக்கள்வன் என்னுடைய நண்பரொருவரை மோசஞ்செய்து, பணம் பறித்துக் கொண்டதை யான் அறிவேனாதலால், நான் அவனை சிறைச்சாலைக்கு அனுப்புவதற்கு அதிகாரமிருக்கின்றது. அப்படி யான் செய்வேனாகில், நான் வசந்தமாலையை ஆபத்திலிருந்தும் அந்த சண்டாளனுடைய பிடியிலிருந்தும் விடுவித்து, நன்மை செய்யலாகும்.— நீ அப்பாவியை எனக்கு அறிமுகம் செய்வித்தபோது யான் கலக்கமும் குழப்பமும் அடைந்தேன். ஆனால் நல்ல காலமாய் அவன் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை.— உனது தந்தை அக்கள்வனைத் தனது நண்பனாகக் கொண்டிருப்பது பற்றி, எனக்குப் பெருத்ததிகிலும் விசனமும் உண்டாகியிருப்பதை யாரே கூறவல்லார்!—அச்சண்டாளன் கோயம்புத்தூரிலே மோகன விலாசம் எனும் பங்களாவிலே வசிக்கிறான். அது தான் அவனுடைய மறைவிடம்.— அவன் ஒரு கொடிய மனி

தன்! இம்மாதிரியான திருடர்களுக்கு இரக்கம் என்பதை நாம் காண்பிக்கலாகாது.

திலகம்:—ஐயா! தாங்கள் அவனைப் போலீஸார்வசம் ஒப்புவித்தால், அவன் வசந்தமாலைமீது பொல்லாத பழியை வாங்குவானே.

ஸிம்ஹளர்:—ஆமாம். ஆனால் நான் அவளை எவ்விதத்திலாவது காப்பாற்றியே தீருவேன்.

திலகம்:— அது சற்று ஆபத்தான காரியம் என்பது தங்களுக்குத் தெரியவில்லையா?--அந்த மனிதனை வசந்தமாலை மணம்புரிந்துகொள்ள முற்பட்டதற்குகந்த காரணங்கள் இருக்கின்றன. அவைகளை நீர் அறிவீரா?—சரி. நீங்கள் அறியமாட்டீர்.—அம்மனிதனை அவள் கலியாணம் செய்து கொள்வாள் என்பதை யான் கனவிலும் கருதவில்லை.

ஸிம்ஹளர்:—அம்மனிதன்மேல் வெறுப்புக் காட்டிப் பேசுவது, எனக்கு இல்லாத சம்சயத்தைத் தருகிறது. காரணம் என்ன அம்மா?

திலகம்:— காரணம் கூற— ஏன்— அதைப்பற்றி இப்போது திண்டாட வேண்டும்? வசந்தமாலையைப் பற்றியல்லவோ நாம் பேச முற்பட்டது! அவனைப்பற்றிப் பேச வேண்டிய பிரமேயமேயில்லை.

ஸிம்ஹளர்:—ஆம், அம்மா! நீ கூறுவது சரியானதே.—அக்கொடியவனிடத்திலிருந்து நாம் அப்பெட்டன்னத்தைக்

ROJA MUTHIAH
KOTTAIYUR-630 106
TAMILNADU - INDIA

காப்பாற்றவேண்டும்! நீ என் காதலியின் சிநேகிதை ஆனபடியால், மர்ம விஷயங்களை நீ எனக்கு விளக்கியே தீரவேண்டும். இந்தியாவிலிருந்து இதற்கே நான் உன்னைக் கண்டது.

திலகம்:—உண்மையை அறியாத நான் எப்படி உங்களிடம் உண்மையை உரைக்க முடியும் ?

சிம்ஹளர்:—திலகசமுத்திரம்! வசந்தமாலை உனது தந்தையின் நண்பராகிய வீரசிங்கனை மணந்துகொள்ளப் போகிறாள் என்பதை நான் உனக்கு அறிவித்தவுடனே, நீ கொண்ட குழப்பத்தையும் கலக்கத்தையும் யாரோ அளவிடவல்லார்! மதிவாணரும் வீரசிங்கனும் சேர்ந்து ரகசியமாய் சம்பாஷணை செய்துகொண்டிருந்ததை வசந்தமாலை உற்றுக்கேட்டிருந்தாள் என்றவுடனே நீ உன்னுடைய எண்ணத்தை மாற்றிவிட்டாய். மதிவாணருடைய நன்மையை நீ கோருகிறாய். வீரசிங்கனையே அவள் மணந்து கொள்ளவேண்டுமென்கிறாய்.

திலகம்:—இது கிடக்கட்டும். மதுரையிலே கமல விலாஸ் ஹோட்டலிலே இறந்து போனவனைப்பற்றித் தாங்கள் மறந்துபோகவில்லை என்று நான் எண்ணுகிறேன்.

சிம்ஹளர்:—பிரதம நியாய மந்திரி அமலாதித்தியர் என்றறிவேன். உன்மீது சுமத்தப்பட்ட அபாண்டம் பொய்யானது என்பதை அவர் அறிந்திருந்தும், அவர் உன்னை காப்பாற்ற எள்ளளவும் எண்ணவே இல்லை.

திலகம் :—என்னை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று பிரார்த்தித்துக் கேட்டதை ஒருபொருட்டாயெண்

ளுமல் என் முகத்தை நோக்கிச் சிரித்தான். உண்மையை உரைப்பதற்கு அஞ்சி, என்னைப் பெருத்த நரக வேதனையாகிய அவமானக் கடலினுள் இருக்கும்படி செய்துவிட்டுப் போய்விட்டான். ஆ! நான் இப்பவோ பின்னையோ இரவிலோ நாளையோ அப்பெருத்த அவமானத்திற்காளாகி, பொல்லாத பழிக்காரி என்று ஊரார் சிரிக்க இருக்க வேண்டுமே! பிரதிதினமும் யான் என் நித்திரை நீங்கி எழுந்தவுடன் "ஹா! ஈசா! இனி எனக்கு என்ன நேரிடுகிறதோ?" என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு,சிறிது காலம் மயங்கித் தியங்கி சோர்வடைந்து கல்லாய்ச் சமைந்து சிலையைப்போல் நின்றிருப்பேன்! என்னைப்போன்ற துரதிருஷ்டசாலிகள் இப்புவியில் ஒருவருமிரார்!

சிம்ஹளர்:—அம்மா! திலகம்! நீ இப்படி வருந்துதல் சரியல்ல.

திலகம்:—ஐயா! எனது விரோதிகள்................

சிம்ஹளர்:—உனது விரோதிகள் எவர்?

திலகம்:—உங்களிடம் உரைத்துவிடுவதால் ஆபத்து ஒன்றும் நேரிடாது. எனது ஜன்மப் பகையாளிகளுள் முக்கியமானவன் வீரசிங்கன்!

சிம்ஹளர்:—அவனா?

திலகம்:—ஆம். நான் ஒன்றையும் அறியேன் என்றே அவன் இப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனது எண்ணத்தை நான் அறிந்தே யிருக்கிறேன்.—

ஹா! அமலாதித்தியர் மட்டும் ரகசியத்தை வெளியிட்டிருந்தால்...............................

சிம்ஹளர்:—திலகசமுத்திரம்! துக்கப்படாதே. மதிவாணருடைய நண்பன் வீரசிங்கன் உன்னுடைய ஜன்ம விரோதி!

திலகம்:—ஆம், விரோதியே! அவனைப் போன்ற கொடிய சண்டாளர் இவ்வுலகிலே இல்லை.

சிம்ஹளர்:—அப்படியிருக்க, நான் அவனை ஏன் போலீஸாரிடம் ஒப்புவிக்கலாகாது? அவனை ஏன் வசந்தமாலை மணம் புரியவேண்டும்?

திலகம்:—அப்படி செய்வதாயின் அது எனக்கும் வசந்தமாலைக்கும் இல்லாத பொல்லாத ஆபத்தை விளைக்கும். ராஜ மாளிகையிலே ஒரு நாள் நான் அவனை உமக்கு அறிமுகமாக்கி வைத்திருக்கிறபடியால், தாங்கள் அவனை போலீஸாரிடம் ஒப்புவித்தால், அவன் நம்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளக்கூடும்.

சிம்ஹளர்:—எப்படி?

திலகம்:—ஹா! யான் வைக்கப்பட்டிருக்கும் பயங்கர நிலைமையைப்பற்றி இப்போது கொஞ்சம் நினைத்தாலும் உள்ளம்பதறி, ஆவி சோர்வடைந்து, அவமானக் கடலில் ஆழ்ந்துவிடுகிறது! இளமைப் பருவத்திலே இத்தகைய துன்பத்தில் நான் சிக்கி யிருப்பதைப்]பற்றித் தாங்கள் ஆச்

சரியமடையலாகும்.—ஹா! இரத்தினபுறத்தில் வசித்திருந்த நாட்களில் யான் சந்தோஷத்தைப் பற்றியே அறிவேன். துன்பம் என்பது இன்பம்போல் இருக்கும் என்பதாக நினைத்து வந்தேன்! திடீரென்று நான் கமலகுமாரைப் பற்றி விஷயம் கேட்டதுமுதல் நான் நடைப்பிணமாகி விட்டேன். ஆனால் அமலாதித்தியன் செய்த கொடுமையையும், வீரசிங்கன் அதனால் என்னைத் துன்பத்திற்காளாக்குவதையும் நினைத்தால், நான் இப்பூமியின்மேல் பாரமாக விருப்பது வியர்த்தம் என்றே கொள்கிறேன்.—என்று கூறிய பொழுது முத்துக்கள் போல் கண்ணீர் காணப்பட்டது.

சிம்ஹளர்:—திலகம்! வீரசிங்கன் எப்படி உனக்குப் பகையாளியாக இருக்கிறானோ அப்படியே என் நண்பர் விஷயத்தைப் பற்றியும் என் காதலியின் விஷயத்தைப் பற்றியும் அவன் எனக்குவிரோதி தான். நீ அவனுடைய மர்மத்தை வெளியிட்டால், நான் உன்னையும் வசந்தமாலையையும் ஆபத்திலிருந்து விடுவிக்கலாகும்.

திலகம்:—ஸிம்ஹளநாதரே! எனது ரகசியவிஷயங்கள் தங்களுக்கு இனிமையைக் கொடுக்காதாகையால், நாம் அதைப் பற்றிப் பேசவேண்டிய பிரமேயமே இல்லை.—நான் சொல்வது எவ்வகையிலாவது வசந்தமாலையைக் காப்பாற்றுவதாக விருந்தால் சொல்லியிருக்கலாகும். அதனால் உபயோகமே இல்லை.—வீரசிங்கனுடைய நடத்தையைத் தாங்கள் அறிவீர்கள். நான் கூறுவது, எனக்கே பொல்லாத ஆபத்தை யுண்டாக்கும். ஆதலால் நான் கூறமுடியாது.

அமலாதித்தியன்மட்டும் என்விஷயத்தை மெய்மைப்படுத்தியிருந்தால், நான் இதர விஷயங்களை சொல்ல ஏதுவிருக்கும்.--தாங்கள் எதையும் சாவதானமாக யோசித்துச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அது வசந்தமாலையை ஆபத்திற் சிக்க வைத்து, என்னை தற்கொலை செய்துகொள்ளச் செய்யும். சிம்ஹளநாதருடைய உள்ளத்திலே தாம் எவ்வகையிலாவது வசந்தமாலையைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்தும் அதை எப்படிச் செய்கிறது என்ற புத்தி கூர்மை மட்டும் இல்லாமற் போய்விட்டபடியால் அவர் சொற்ப நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அந்த சமயத்திலே மாரியாத்தாள் அவ்விடம் வந்து, “ஐயா! இருட்டுகிறது” என்றாள். உடனே சிம்ஹளநாதர் ஆம் என்று தலையை அசைத்தவராய் மேலும் திலகசமுத்திரத்திடம் “நான் போய்வருகிறேன். எதற்கும் தைரியமாக இருக்கவேண்டும்” என்றார்.

அதிகாரம் 12.

வைரக்கோட்டை ரகசியம்.

——:o:——

மறுநாள் மத்தியானவேளையில், சிம்ஹளநாதர் டாக்டர் கௌஜிக் என்பவருடைய மாளிகையை அடைந்தார். அடைந்ததும் அவர் ஐந்து ரூபாய் நோட்டொன்றை அம்மாளிகையின் வேலைக்காரனுக் களித்துவிட்டு, “டாக்டர்

கௌஜிக் என்பவருடைய மாளிகை இதுதானே? அவருடன் ஹிந்து ஒருவர் தங்கியிருக்கிறாரா? சொல்" என்றார்.

அதற்கு அவ்வேலைக்காரன் "ஆம். இதுதான் சில தினங்களுக்கு முன்பு ஓடிப்போன பிரதம நியாய மந்திரியாரிடம் சில வருஷம் 'செக்ரடரி'யாக வேலை பார்த்துவந்த டாக்டருடைய மாளிகை. இந்த ஒரு வருஷகாலமாய் டாக்டர் இம்மாளிகையிலே வசித்து வருகிறார்" என்றான்.

சிம்ஹளர்:—அமலாதித்தியரைப் பற்றி ஏதாவது உனக்கு தெரியுமா?

அவன்:—ஓ! ஏழைமனிதர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் பொல்லாத தூஷணைகளை ஏற்றுக்கொண்டே அவர்களுடைய குடும்பங்களை எல்லாம் குட்டிச் சுவராக்கிவிட்டார். அவர் எப்பொழுதாவது இம்மாளிகைக்கு விஜயம் செய்யும்போது எனக்கு தாராளமாகவே பணம் அளிப்பார். அவர் இந்த அநுராஜபுரியை விட்டோடியதற்கு காரணம் என்னவென்றால் எவளோ ஒரு ஸ்திரீ ஒரு விஷயத்திற் சம்பந்தப்பட்டிருக்கிறாளாம்.

ஸிம்ஹளர்:—ஒரு ஸ்திரீயா! யாரவள்?

அவன்:—அவள் யார் என்பது இன்னம் ஒருவருக்கும் தெரியவராது. போலீஸார் வைரக்கோட்டையினுள் அமலாதித்தியருடைய அறையினுள் ஒரு யௌவனப் பெண்ணின் சவத்தைக் கண்டார்களாம். விஷயம் தினசரிகளில் பிரசுரிக்கப்படவில்லை. என்னுடைய மகளின் கணவன்

போலீஸ்காரனுகையால், இவ்விஷயம் அவனுல் எனக்கு சொல்லப்பட்டது. அவளுக்கு இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலிராது. அவள் இறந்துபோன விவரம் இன்னதென்று டாக்டர்களுக்குத் தெரியவில்லே. அப்பிணத்தின் புகைப் படம் தினசரிகளிலே அச்சிடப்படவில்லே.—அந்த ஸ்திரீ ஒரு இந்திய மாதாம்.—வைரக்கோட்டை இப்போது இரண்டு துப்பறிபவர்களாலோ அல்லது ஒருவராலே பிரதி இரவும் காவல் காக்கப்பட்டு வருகின்றதாம்.—அவள் திலக சமுத்திரம் எனும் நங்கையின் ஸ்நேகிதையாம்.—இறந்தவளுடைய பெயர் இன்னதென்று இன்னம் தெரியவில்லே.

ஸிம்ஹளநாதர் ஆச்சரியமடைந்தார்.

ஸிம்ஹளர்:—டாக்டரவர்களுக்கு விவாகம் ஆகிவிட்டதா?

அவன்:—இல்லே, ஐயா!

ஸிம்ஹளநாதர் உடனே அவனிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு, ஒரு ஹோட்டலே யடைந்தார்.

அன்றிரவு அவர் டாக்டர் வசிக்கும் வீதியிலே அவருடைய மாளிகைக்கு எதிரில் இருந்த ஒரு பெரிய மரத்தடியிலே மறைந்தவண்ணம் டாக்டராவது மதிவாணராவது வெளிவருகின்ருரா என்பதாக எதிர்பார்த்திருந்தார். ஒன்பது மணி சுமாருக்கு நாற்பதுவயதான டாக்டர் கௌஜிக்குடன் மதிவாணர் மாளிகையிலிருந்து வெளிவந்தார். இருவரும் நாற்புறமும் நோக்கிய வண்ணம் தம்மை ஒருவ

ரும் பார்க்கவில்லை யென்பதை அறிந்துகொண்டு, சொற்ப தூரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு மோட்டாரிலே ஏறிக்கொண்டவர்களாய் அநுராஜபுரத்தை அடுத்து நான்கு மயில் தூரத்திலே யிருந்த வைரக்கோட்டைக்கு ஓடும்படி சொல்ல, வண்டி காற்றைவிட அதிகவேகத்துடன் சென்றது. ஸிம்ஹளநாதர் உடனே தாம் அன்று மத்தியானம் பேசிய மனிதனை அடைந்து, அவனுக்கு மற்றொரு இரண்டு ரூபாயைக் கொடுத்து, டாக்டரும் மதிவாணரும் எவ்விடத்துக்குப் போகின்றனர் என்பதைக் கேட்க, அவன், "ஐயா! அவர்கள் போகுமிடம் வைரக்கோட்டை இருக்கும் கிராமத்திலேயுள்ள ஒரு நோயாளியைப் பார்த்து வரப்போகிறாராம்" என்றான்.

உடனே ஸிம்ஹளநாதருக்கு உண்மை புலப்பட்டது. இருவரும் வைரக்கோட்டைக்கே போகின்றனர் என்பதை அறிந்துகொண்டு, சேவகனிடம் செலவு பெற்றுக்கொண்டு, அவ்வழியாக வந்த வாடகை மோட்டாரில் ஏறிக்கொண்டு, வைரக்கோட்டை இருக்கும் கிராமத்திலே இறங்கி, வைரக்கோட்டை என்று பெயர் கொண்டிருந்த பிரதம நியாய மந்திரியாரின் மாளிகையை அடைந்தார்.

மாளிகையைச் சுற்றிலும் ஒரு பெருத்த தோட்டம் காணப்பட்டது. பலவகைப்பட்ட விருக்ஷங்கள் அவ்விடம் காற்றால் ஆட்டப்பட்டனவாய் க்ரீச் க்ரீச் எனும் ஒரு சப்தத்தை உண்டாக்கிய வண்ணமிருந்தன.

மாளிகையின் நேரான வழியில் ஒருவரும் இல்லை யானாலும் ஸிம்ஹளநாதர் ஒரு கள்ள வழியிலே தான் மாளிகையின் ஒரு பாகத்தை யடைந்தார். மதிவாணரும் டாக்டரும் தாம் வருவதற்கு முன்னரே மாளிகையினுள் போயிருக்க வேண்டுமென்னும் எண்ணம் ஸிம்ஹளநாதருடைய மனத்தில் உதித்தது. தாம் சென்ற பாகத்தின் ஒருபுறத்தில் கதவொன்றைக் கண்ட ஸிம்ஹள நாதர் அதைத் திறக்கமுடியுமா என்று யோசிக்கையில், கதவு தானுகவே நகர்ந்தது. டாக்டரும் அவருடைய நண்பரும் அவ்வழியாகவே மாளிகையினுட் சென்றனர் என்பது தெரியவந்தது.

ஒடுக்கமான அவ்வறையின் மற்றொரு வாசலை யடைந்ததும், ஸிம்ஹளநாதர் கால் தடுக்கிக் கீழே விழுந்தார். விழுந்ததும் அவரது கரங்கள் தாம் தடுக்கி விழுந்த வஸ்துவை ஆராயத் தொடங்கின. "ஐயோ! ஒருவனை அல்லவோ கொன்றிருக்கின்றனர்! டாக்டருடைய வேலைக்காரன் சொன்னபடி இங்கு கொலையுண்டு கிடப்பவன் துப்பறிபவனுகவே இருக்கவேண்டும். அவர்களிருவரும் இவ்வறையின் கதவைத் திறக்க முயற்சித்தபொழுது, இத்துப்பறிபவர் வந்திருக்கிறுர். அந்த இரண்டு பாவிகளுள் எவனே ஒரு சண்டாளன் இவரைக் கத்தியால் குத்தியிருக்கிறுன். இவருடைய கரத்திலிருக்கும் "பிஸ்டல்" நமக்கு சமயத்தில் உபயோகமாகும்" என்று கூறிய ஸிம்ஹளநாதர் பிஸ்டல் எனும் அந்த சிறு கைத்துப்பாக்கியை இறந்த மனித

னுடைய கரத்திலிருந்து எடுத்து, சேபியிலே போட்டுக் கொண்டார். பின்பு அவர் பல அறைகளைக் கடந்து, ஒரு பெரிய அறையை அடைந்தார். அதன் அடுத்த அறையில் யாரோ இருவர் பேசும் சப்தம் கேட்டது. அதுவுமல்லாமல் ஒரு சிறிய அமெரிகன் லான்டர்ன் வெளிச்சம் மங்கலாகக் காணப்பட்டது. ஸிம்ஹளநாதர் அந்த இரண்டு மனிதர்களும் இருந்த அறைக்குப் போகலாமா என்று யோஜித்தபோது, தமக்கு ஏதாவது அபாயம் நேரிடலாகும் எனத் தெளிந்து, தாம் இருந்த அறையை, சாளரத்தின் மூலமாய் வந்த மங்கலொளியினுல் சுற்றிப்பார்த்தார். தாம் இருந்த அறை மிகவும் அழகிய விலை மலிவான திரைச் சீலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தனவென்பதை அறிந்து கொண்ட ஸிம்ஹளநாதர் அவ்விரண்டு மனிதர்கள் தரையின் மீது தங்களது பார்வையைச் செலுத்தியிருந்த அறையானது ஒரு வாசகவறை யென்பதை அறிந்தார். ஒரு பெரிய கண்ணுடி பீரோவிலே பல பெரிய புஸ்தகங்கள் காணப்பட்டன. ஒருபுறம் மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன.

அப்பொழுது டாக்டர் கௌஜிக் தரையிலிருந்து எடுத்த ஒரு சாமானை மதிவாணரிடம் கொடுத்து, "இதை நோக்கினுல் கொஞ்சம் கலவரமும் சந்தேகமும் உண்டாகின்றதன்றோ?" என்றுர். மதிவாணர் டாக்டர் கொடுத்த பொன்வளையலை விளக்கு வெளிச்சத் தருகிலே பார்த்து, அதன்மீது வரையப்பட்ட சில எழுத்துகளை

வாசித்ததே, கவலையும் கலக்கமும் குழப்பமும் ஆச்சரியமு மடைந்து, சும்மா நின்றதைக் கண்ட டாக்டர் கௌஜிக் தமது நண்பரை விளித்து, சமாசாரம் என்ன என்று கேட்டார். மதிவாணர் மறு வார்த்தை ஒன்றும் பேசாமல் அந்த பொன் வளையலை டாக்டரிடம் கொடுத்து விட்டார். அதைக் கண்டு மறுபடியும் திடுக்கிட்ட டாக்டர் அப்பொன் வளையலை மதிவாணரிடமளித்துவிட்டார்.

இதை எல்லாம் மிக்க ஆச்சரியத்தோடு கவனித்திருந்த நமது துப்பறிபவர் உடனே பொன் வளையலைப் பற்றிய விஷயத்தை அறிந்துகொண்டார். "ஓ! வேலைக்காரன் சொன்னபடி இது இவ்விடத்திலே பிணமாய் காணப்பட்டதாய்ச் சொன்ன அப்பெண்பாலினுடைய கைவளையலாகத்தானிருக்கவேண்டும். மதிவாணர் அவளை அறிவார் என்பதிற் சந்தேகமே இல்லை" என்றெண்ணிக்கொண்டார்.

இதற்குள் டாக்டர், மதிவாணரைப் பார்த்து," நண்பர் மதிவாணரே! நாம் நாடிவந்த காரியம் ஜயமடைதல் அவசியமாதலால், இந்த பொன் வளையலைப் பற்றி நாம் சிந்திக்கவே தகாது: ஆகாது," என்றுரைத்ததே, மதிவாணருடன் அவ்வறையின் மூலைக்குப் போனார். போனதும், கீழே தமது பார்வையை செலுத்திய வண்ணம் மதிவாணரைப் பார்த்து, "நண்பரே! அது இவ்விடத்திலே தான் இருக்கவேண்டும்", என்றார். "அப்படியானால் தாங்கள் அதைப் பார்த்ததே இல்லை யாக்கும்" எனக் கேட்டார் மதிவாணர்.

அந்த சமயத்திலே ஸிம்ஹளநாதர் அவர்கள் இருந்த அறைக்கு மெதுவாய் வந்து, சக்கரங்களைக் கொண்ட ஒரு நாற்காலியின் அடியிலே ஒளிந்து கொண்டு, அவர்கள் இருவருடைய விநோதமான செய்கைகளை எல்லாம் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டும், அவர்கள் அந்தரங்கமாகப் பேசியதைக் கேட்டுக் கொண்டும், தமக்கு எதிர்பாராத ஆபத்து நேரிடும் என்றெண்ணாது உட்கார்ந்திருந்தார்.

மதிவாணருடைய நண்பர், "ஐயா! மதிவாணரே! அமலாதித்தியர் என்னுடைய உயிர்ஸ்நேகராக விருந்தாலும் முக்கியமான ரகசிய விஷயங்களை எனக்கு கூறமாட்டார். அவர் இவ்வறையில் உள்ள பல இரகசிய வழிகளை எல்லாம் காண்பித் திருக்கிறார். ஆனால் இப்போது நாம் தேடிவந்துள்ள கள்ள வழியைப்பற்றி ஒன்றும் எனக்குரைக்கவே இல்லை, ஆனாலும் அது இவ்விடத்திலே தான் இருக்க வேண்டும்," என்று சொல்லிவிட்டு, அந்த இடத்திலேயுள்ள இரண்டு மூன்று நாற்காலிகளை எடுத்து, ஒரு புறம் கொண்டு போய் வைத்தார். இருந்தாற் போலிருந்து ஸிம்ஹளநாதர் தம்மை மறைத்துக் கொண்ட நாற்காலி க்ரீச் எனும் சப்தத்தை உண்டாக்கவே, மதிவாணர் அது என்ன சப்தம் என்று தமது நண்பரைக் கேட்டார், "அது ஒரு எலி ஆக இருக்கவேண்டும்" என்றார் டாக்டர்.

ஒருமணி நேரம் வரையிலே அவ்விருவரும் அதிகப் பிரயாசையுடன் தாம் நாடிவந்த கள்ள அறைக்குச் செல்லுமரையை எல்லா இடத்திலும் தேடிப் பார்த்துக்

களைத்து அலுத்துப் போயினர். அவ்வறையிலே ஒரு கெடியாரத்தினுடைய சப்தமே எவ்விடத்தும் கேட்டுக் கொண்டிருந்தது. டாக்டர் கௌஜிக் ஒரு மேஜையருகிலே சென்று—அது சுவரோரமிருந்தபடியால்—கீழே சோதித்துப் பார்க்கையில் ஒரு சிறு ஆணி காணப்பட்டது. அதை அழுத்தியதும் திடீரென்று அவ்விருவருடைய மன மகிழ்வுக்கேற்றபடி ஒரு பெரிய கதவு தானாகவே திறந்துகொண்டது. "ஹா! இது தான் மந்திரியினுடைய ரகசிய அறை. இவ்வறையைப் பற்றி எனக்கொன்றுமே தெரியவாராது. இவ்விடந்தான் அவருடைய அநியாயப் பொக்கிஷம் இருக்கவேண்டும். இப்படிக் கட்டுகளின் வழியாய் வாரும்" என்று டாக்டர் கூறியவண்ணம் முதலில் உள்ளே செல்லி மதிவாணர் விளக்கை எடுத்துக்கொண்டு இறங்கினர். இறங்கியதே, ஸிம்ஹளநாதர் அவ்விடத்தையடைந்து, அவர்களுடைய சோதிப்பை பார்க்கலானர். டாக்டர் அவ்வறையிலே ஒரு மூலையில் ரூபாய்களும், நகைகளும், காகிதங்களும் ஒரு பெரிய இருப்புப் பலகையின்மீது குவித்திருப்பதைக் கண்டு, அதிக சந்தோஷமடைந்து பணத்தையும் நகைகளையும் வாரி வாரி தாங்கள் கொண்டுவந்திருந்த சாக்குகளிலே நிரம்ப எடுத்துப்போட்டுக் கொண்டனர். அப்போது இருந்தாற்போலிருந்து கெடியாரம் நின்றுவிட்டது. அச் சுரங்கத்தின் கதவு தானாகவே மூடிக் கொண்டது. மறுபடியும் கெடியாரம் டிக் டிக் எனும் சப்தத்தை செய்யலாயிற்று. "ஓ! இதற்கும் அவ்வரைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. மின்சார

சக்தி உபயோகமாகும்படி போட்டிருக்கும் கம்பியே இந்த வரையினுள்ளிருந்து கெடியாரத்தின் ஒரு சாமானில் பொருத்தப் பட்டிருக்கவேண்டும். ஹா! அவ்விருவரும் கூவுகிறார்கள்!" என்று தமக்குள்ளாகவே ஸிம்ஹளநாதர் கூறிக் கொண்டார்.

'ஐயோ! நாங்கள் காட்டிக் கொடுக்கப் பட்டோம்' என்றார் மதிவாணர்.

இருவரும் படிக்கட்டுகளின் மீது ஏறிவந்து, அவ்விரும்புக் கதவை எப்படித் திறப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் "ஹா! இவர்கள் இருவரும் தப்பித்து வந்தால், அது எனக்கு அநுகூலமாய் முடியாது இவர்களை போலீஸாரிடம் ஒப்புவித்து விடலாம். ஆனால் மதிவாணர் பிடிப்பட்டால் அதுதிலகசமுத்திரத்திற்கும் வசந்தமாலைக்கும் ஏதாவது ஆபத்தை உண்டாக்குமாதலால் நான் சும்மா போய்விடுவதே நலம்" என்று கூறிக் கொண்டே ஸிம்ஹள நாதர் அவ்விடத்தை விட்டகன்றார்.

அதிகாரம் 13.

கொலையாளியோ?—பகையாளியோ?

—:o:—

முன் அதிகாரத்தில் நடந்த சம்பவங்களுக்கு பின்னால், இரண்டு தினங்கழித்து, துப்பறியும் ஸிம்ஹளநாதர் மதா

ராவை அடைந்து, அன்று மாலையில் தம்முடைய ஹோட்டலிலிருந்த வண்டி ஒன்றை வாடகைக்குப் பேசிக் கொண்டு, திலக சமுத்திரம் தங்கியிருந்த இடத்தை அடைந்து அதிக சந்தோஷ மடைந்து, திலகசமுத்திரத்தைக் கண்டார்.

ஸிம்ஹளநாதரைக் கண்ட திலக சமுத்திரம் வரை யில்லாத மகிழ்ச்சியைக் காட்டி, அவரை ஒரு ஆசனத்தில் உட்காரும்படி செய்து, தானும் ஒரு ஆசனத்திலமர்ந்தாள். பிறகு, ஸிம்ஹளநாதரை நோக்கி, "எங்கே தங்களை இரண்டு மூன்று தினங்களாக இவ்வூரில் காணோம்? வசந்த மாலையிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் நேற்று வந்தது. அதில், இளங்கோவரும் அவளும் கல்கதாவுக்கு இரண்டு மூன்று தினங்களுள் போக வேண்டும் மென்றும், ஆனால் அவளுடைய பிதாவின் இஷ்டப் பிரகாரம் அவள் ஒரு வாரம் பெங்களூரிலிருந்து போக வேண்டுமென்றும் எழுதியிருக்கிறாள்" என்றாள்.

ஸிம்ஹளர்:—சந்தோஷம். நான் இன்றிரவு கப்பலேறி இந்தியாவுக்குப் போக வேண்டும்.

திலகம்:—சந்தோஷம்! நாமும் இன்றிரவு நாகைக்குப் பிரயாணமாகவேண்டும். என் தந்தைக்கு இப்போது தேக அசௌக்கியம் ஏற்பட்டிருக்கிறபடியால், அவர் இந்த இலங்கைக்கு இனிமேல் வருவதற்கே இஷ்டமில்லை.

அப்போது மதிவாணர் வருவதாய் சேவகன் திலக சமுத்திரத்திடம் அறிவித்துப்போக, அடுத்த நொடியில்

சந்தோஷத்தைக் காண்பித்துக்கொண்டிருந்த வதனத்தைக் கொண்டிருந்த மதிவாணர் உள்ளே வந்து, ஸிம்ஹளநாதரைக் கண்டதே கலக்கமும் குழப்பமும் கவலையுமடைந்து, குழம்பிய மனதுடன் துப்பறிபவரை நோக்கி, "ஏது, ஸிம்ஹளநாதரே! தங்களை இவ்விடத்திற் காணுவேன் என்று யார் நினைப்பார்கள்?" எனக் கேட்டார்.

ஸிம்ஹள நாதர் அவருக்குகந்த சமாதானம் கூற, மதிவாணர் திருப்தியடைந்தவராய்க்காணப்பட்டார். பின்னர் ஒரு அரை மணி நேரம் அவர்கள் எல்லோரும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் பேசியிருந்தார்கள்.

அன்றிரவு இரண்டு மணி சுமாருக்கு நாம் இந்தியாவை நோக்கிச் செல்லும் கப்பலைக் கவனிப்போமேயானல், ஸிம்ஹள நாதர், திலக சமுத்திரம், மதிவாணர் ஆகிய மூவரும் அதனுள் இருக்கக் காண்போம்.

திலக சமுத்திரமும் ஸிம்ஹளநாதரும் இரண்டு நாற்காலிகளின் மீது அமர்ந்த வண்ணம் சந்தோஷமாயும் விசனகரமாயும் பேசியிருந்ததை கவனிப்போம்.

ஸிம்ஹளர்:—திலகம்! அச்சண்டாளன் இன்னனென்றே யான் வெளியிடப் போகிறேன்.

திலகம்:—ஆ! ஆத்திரத்தோடு ஆபத்தை ஆலிங்கனம் செய்யவேண்டாம்! தாங்கள் ஏதாவது செய்வீர்களானல், அவளுக்கு ஆபத்தை விளைக்கும்.

ஸிம்ஹளர்:—அம்மா! அவளுடைய காதலன் நான் ஆனபடியால், அவளை அப்பாவியின் பிடியிலிருந்து விடுவிக்க வழிதேட வேண்டியது என் கடமை! ஆபத்தில் அவளை நாம் கை கழுவி விடுவதா. சொல்?

திலகம்:—ஐயோ! தர்ம சங்கடம்!

ஸிம்ஹளர்:—வைரக் கோட்டையின் அதிபதி அமலாதித்தியரைப் பற்றி..........................

திலகம்:—அதைப் பற்றி....அவரைப் பற்றி என்ன? இந்த சந்தர்ப்பத்தில் அவரை நாம் ஏன் நினைவு கூறுதல் வேண்டும்?

ஸிம்ஹளர்:—ஏன்— ஏனோ?—வைரக் கோட்டையிலே ஒரு—ஏன்?—பல விஷயங்களை அறிந்துகொண்டேன்.

திலகம்:—வைரக் கோட்டையிலா?

ஸிம்ஹளர்:—ஆம்—மந்திரியார் ஓடியபின்னர் போலீஸார் சோதனை போட்ட பொழுது, ஒரு பெரிய அதிசய சம்பவத்தை அறிந்தார்களாம்: ஆனால் அது வெளிவராது செய்திருக்கிறார்கள்.

திலகம்:—அப்படியா?

ஸிம்ஹளர்:—உன்னுடைய ஸ்நேகிதி ஒருவளுடைய களேபரத்தைக் கண்டார்கள்!

திலக சமுத்திரத்துடைய முகம் விகாரப்பட்டது.

திலகம் :—ஐயோ நான் ஆபத்திற் சிக்கியிருக்கிறேன்.—ஆனால், ஸிம்ஹள நாதரே! விஷயத்தை முழுவதும் சொல்லுங்கள்!

ஸிம்ஹளர் :—மந்திரியாரின் அறை யொன்றிலே அவளுடைய சவம் இருந்தது.

திலகம் :—அவள் யார் என்பது தெரிந்ததா!

ஸிம்ஹளர் :—இல்லை. அவள் உனது ஸ்நேகிதை என்பது மட்டும் சொல்லுகின்றார்கள்.

திலகம் :—ஓ! அப்படியானால் போலீஸார் என்னைத் தேடி அலைவார்கள்?

ஸிம்ஹளர் :—ஆமாம்.

திலகம் :—நான் இந்தியாவை யடைந்து விட்டால், அவர்கள் என்னைக் கண்டு பிடிக்க முடியாது. அவர்கள் திண்டாடி, அலுத்துப் போய் சும்மா விருக்க நேரிடும்!

சிம்ஹளர் :—அந்த சவத்தைப் பற்றிய விஷயங்களை வெளிவராது செய்வதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்.

திலகம் :—ஆம்.—ஆனால் இதை உங்களுக்கு யார் சொன்னது?

ஸிம்ஹளர்:—எனக்கு நம்பகமான ஒரு மனிதன் கூறினன்.

திலகம்:—அவன் என் பெயரையும் கூறினை?

சிம்ஹளர்:—ஆம்.—ஆனல் மந்திரியார் மரித்து விட்டதை அவர்கள் அறியார்.—சரி. நீ மந்திரியாரின் மாளிகைக்கு அடிக்கடி போய் வந்திருக்கிருய்.

அப்போது மதிவாணர் அவ்விடம் வந்தார்.

மதிவாணர்:—ஸிம்ஹளநாதரே! நாம் நாளைக் காலை அரண்மனை ஹோட்டலில் தங்குவோம். நீர் கமல விலாஸத்திலா தங்கியிருக்கப் போகிறீர்?

சிம்ஹளர்:—ஆம்.

*　　*　　*

சித்திரர்:—நண்பரே! எது வெகு சீக்கிரத்திலே வந்துவிட்டது!

சிம்ஹளர்:—ஸித்திர ரஞ்சரே!

சித்திரர்:—இரண்டு தினங்களுக்கு முன்பு இவ்விடத்திற்கு ஒருவன் வந்து, இறந்துபோன பரதேசி ஜயஸிங்கரைப் பற்றி விஜாரிக்கலாயினன்.

சிம்ஹளர்:—ஓ! அவர் யார்? துப்பறிபவரா?

சித்திரர்:—இல்லை இல்லை. அவனுடைய பெயர் வீர சிங்கனும்.

சிம்ஹளர்:—(பயந்து) வீரசிங்கனு! அவனுக்கு நீங்கள் என்ன மறுமொழி கொடுத்தீர்கள்?

சித்திரர்:—ஒரு பொய்க் கதையைக் கூறி அனுப்பி விட்டேன். ஒரு பரதேசி இவ்விடம் வந்தது உண்மை யென்றும்; அந்தப் பரதேசி இறந்துபோனதே, அவ னுடைய மகன் வந்து அவனுடைய விஷயங்களை கவனிக்கலானு னென்றும் கூறிவிட்டேன்.

சிம்ஹளர்:—சந்தோஷம் நண்பரே!

சித்திரர்:—தாங்கள் வீரசிங்கனை அறிவீரா, அவன் உமக்கு ஸ்நேகனு?

சிம்ஹளர்:—ஸ்நேகன்!—சரி. என்னைப் பற்றி நீங் கள் ஒன்றுமுரைக்க வில்லையே?

சித்திரர்:—இல்லை, இல்லை.

சிம்ஹளர்:—ஐயா! அவன் ஒரு பெரிய பக்கா திரு டன்!—மதிவாணருடைய ஸ்நேகிதன்.

சித்திரர்:—ஐயோ!

கொலையாளியோ? பகையாளியோ?

சிம்ஹளநாதர் உடனே அந்த வீரசிங்கன் தனபால செட்டியாரைக் கொள்ளையடித்து, பணம் பறித்துக் கொண்டு போனதை விஸ்தாரமாக வுரைத்தார்.

நான்கு தினங்களுக்குப் பிறகு அரண்மனை ஹோட்டலி லிருந்து ஒரு கடிதம் வந்தது. அது மதிவாணரால் எழுதப் பட்டிருந்தது. சிம்ஹளநாதரே! அரண்மனை ஹோட்ட லில் நாம் தங்கியிருப்பதை நீர் அறிவீர், ஆதலால் இன்று மாலை தாங்கள் அவசியம் வரவேண்டும். மதிவாணன்'' என்றெழுதியிருந்தது.

அரண்மனை ஹோட்டல் என்பது திருமலைநாயகர் மஹாலையடுத்த ஒருபெரிய தோட்டத்தின் நடுமையத்திலே யிருப்பது. அது மதிவாணருடைய ஸ்நேகிதர் ஒருவரால் நடைபெறுவது.

ஸிம்ஹளநாதர் அரண்மனை ஹோட்டலை யடைந்ததும், மதிவாணர், திலக சமுத்திரம், மதிவாணருடைய நண்பர் டுலீப்ஸிங் முதலியவர்களால் வரவேற்கப்பட்டார். இரவு ஒன்பது மணிவரை யாவரும் சந்தோஷமாய் பேசியிருந்தார் கள். சிம்ஹளநாதர் திலக சமுத்திரத்தோடு பேசுகையில், இளங்கோவரும் வசந்தமாலையும் பெங்களூரிலிருந்து அன்று காலை வந்தார்களென்பதையும் அறிந்துகொண்டதும், அதிக மகிழ்ச்சி யடைந்தார்.

பின்பு சிம்ஹளநாதர் போய்வருவதாகக் கூற அவர்

களில் முதன்மைப் பெற்று அப்போது விளங்கிய டுலீப் சிங் என்பவர் சிம்ஹளநாதர் தம்முடன் தோட்டத்திலே டீயாவது காபியாவது அருந்திப் போகவேண்டுமென்று இறைஞ்சிக் கேட்க, சிம்ஹளநாதர் ஒப்புக்கொண்டார்.

உடனே மதிவாணர், டுலீப் சிங், சிம்ஹளநாதர் முதலிய மூவரும் அரைக்கால் மைல் தூரத்திலிருந்த ஒரு பெரிய தோட்டத்தை யடைந்தார்கள்.

மூவரும் பழவகைகளை உண்டார்கள். பின்னர் டுலீப் சிங் சிம்ஹளநாதருக்கும மதிவாணருக்கும் காபி கொடுக்க இருவரும் அதை ஆவலோடு பருகினர்.

உடனே மதிவாணர் அவ்விருவரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு, அரண்மனை ஹோட்டலை யடைந்தார்.

ஐந்து விநாடிகளுக்குப் பிறகு டுலீப்சிங் சிம்ஹளநாதரைப் பார்த்து, "உம்மிருவருக்கும் விஷம் வைத்திருக்கிறபடியால்..........." என்று கூறுகையில், சிம்ஹளநாதர் "சண்டாளா!" என்று கூவினார்.

"நீர் மதிவாணருடைய கூட்டாளிகளுள் ஒருவரான படியால், நீர் இவ்வேதனையால் மாள நேரிடுகிறது. மதிவாணருடைய ஸ்நேகிதர்கள் எல்லாரும் இப்படியே இறப்பார்கள்" என்றார் டுலீப்சிங். "நீ ஆள் மாறாட்டத்தால்.... ...." என்று சிம்ஹளநாதர் கூற ஆரம்பித்ததே, அவர் கீழே தொப்பென்று விழுந்து, மூர்ச்சை நீங்கினார்.

அதிகாரம் 14.

இரண்டு ரகசியங்கள்.

——:o:——

பெரிய ஆஸ்பத்திரியிலே பெரிய சாளரங்களைக் கொண்ட பெரிய அறையொன்றிலே சொகுசான பஞ்சு மெத்தை மீது படுத்திருந்த ஒரு நோயாளியினுடைய பாரிசத்திலே ஒரு அழகிய மடமகள் ஒரு சிறிய சாயுமான நாற்காலியைத் தன்னுடைய இரண்டு கரங்களால் பற்றிய வண்ணம், அப்போது தான் கண்ணைத் திறந்து, சுற்றிப் பார்த்த வண்ணமிருந்த அவ்வழகிய ஆடவனுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அந்நோயாளி அச்சுந்தராங்கியையும் அவ்வறையிலிருந்த பல படங்களையும் பார்த்தாராயினும், அவருக்கு இன்னம் உணர்வு சரியான நிலைமைக்கு வரவில்லை யென்பதை அவருடைய கண்களே காண்பித்தன. கலக்கமும் குழப்பமும் பதைப் பதைப்பையும் முகத்திற் காட்டி நின்ற அம் மெல்லிய மடவால் தன் தாமரைப்போன்ற சேவடிகளைப் பார்த்த வண்ணம் "ஐயா! ஐயா!" என்று நோயாளியைக் கூப்பிட்டாள்.

ஐந்து விநாடிகளுக்கு பிறகு சிம்ஹளநாதர் அப்பணிப் பெண்ணை நோக்கினார். கவனம் வந்தவராய்க் காணப்பட்டதுப்பறிபவர் அவளை நோக்கி, "அம்மா! என்னை ஏன் கூப்பிட்டாய்?—நான் ஏன் இவ்வறையில் இருக்கிறேன்?"

என்று கேட்க, அம்மடமகள் "ஐயா ! தங்களைப் பார்த்தால் ஒரு பெரிய கனவான் போலக் காணப்படுகிறது. திருமலை நாயகர் மஹாலை யடுத்திருக்கும் தோட்டத்திலே ஒரு பெஞ்சிலே தாங்கள் நேற்றிரவு மயக்கமாய் மூர்ச்சை போய்க் கிடந்தீர்கள். தங்கள் அருகில் பாஷாணம் நிறைந்த ஒரு சீசா காணப்பட்டதாம். தாங்கள் யாவராலோ—தெரிய வில்லை—கொல்லப்படும் தன்மையில் இருந்தீராம். தெய்வ சங்கல்பமாய் போலீஸார் தம்மை இரவில் அடையாளம் அறியமாட்டாமல் இவ்விடம் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.—தாங்கள் அருந்திய பானத்தில் விஷம் கலக்கப்பட்டிருந்ததுபோலும்" என்றாள்.

ஸிம்ஹளர்:—ஆம் அம்மா !—என்னிடம் சீசா இருந்ததாகச் சொல்வது, எனக்கு அளவற்ற ஆச்சரியம் உண்டாகிறது ; அச்சத்தைக் கொடுக்கிறது. அதுவுமல்லாமல் ஆள் மாருட்டமாய் எனக்கு விஷம் கொடுக்கப்பட்டது.

அப்பணிப் பெண் :—ஐயா ! உமது விரோதி எவரோ வேண்டுமென்று உமக்கு விஷமிட்டுக் கொன்றுவிட எண்ணி அப்படி செய்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. தங்களிடம் சீசாவை வைத்துவிட்டுச் சென்றால், தாங்கள் விஷமுட்கொண்டு, தற்கொலை செய்துகொள்ள அவ்வகால வேளையில் அவ்விடத்தில் இருந்தீர் என்று போலீஸார் நினைத்துக்கொண்டு, தங்களை சிறை வாசத்தில் இடட்டும் என்றே செய்திருக்கின்றான்.

அந்த சமயத்தில் வேறொரு பணிப்பெண் அன்று காலையில் வெளியான சமாசாரப் பத்திரிகை யொன்றை பிரித்துப் படித்த வண்ணம் அவ்விடமடைந்து "ஏண்டி! கமலாக்ஷி பார்த்தியா இந்த விஷயத்தை?" என்று ஸிம்ஹள நாதருடன் பேசியிருந்த பணிப்பெண்ணை நோக்கிக் கேட்டாள்.

கமலாக்ஷி :—எனக்குத் தெரியாது, விசலா!

விசலா :—அம்மா!—(சிம்ஹளநாதரை நோக்கி) தாங்களும் விஷயத்தை யறிய விரும்புவதால், சந்தோஷமாய் படிக்கிறேன்—என்றுகூறியதும், பின்வருமாறு படிக்கலாயினாள் :—"திடும்பிரவேசமாய்விளைந்த மரணம்!—ஆனால் அசாதாரணமான மரணம்! நேற்றிரவு சுமார் இரண்டுமணி சமயம், அரண்மனை ஹோட்டலில் தமது புதல்வி திலக சமுத்திரம் எனும் பெண்மணியுடன் தங்கியிருந்த மதிவாணர் எனும் கனவான் எவராலோ ஆகாரத்துடன் கலந்து கொடுக்கப்பட்ட விஷத்தை உண்டுவிட்டதன் பயனாய் உயிரை யிழந்து விட்டார்—சர்ஜன் ஜனரல் மேஜர் காடன் துரையவர்கள் பிணத்தைப் பரிசோதனை செய்ததும், கொடுத்த அபிப்பிராயம் என்னவெனில், "இவர் குடித்த பானத்திலாவது சாப்பாட்டிலாவது விஷம் சேர்த்துக் கொடுக்கப்பட்டபடியால், மரணம் சம்பவித்துவிட்டது" என்பதே. போலீஸார் கொலையாளியைக் கண்டுபிடிப்பதில் குதிரைக் கொம்பு மூளைத்தலைப்போல் இருக்கிறார்கள்.—

ஹோட்டல்காரர் சொல்வது என்னவெனில் தமக்கு வரும்படி போய்விட்டது என்பதே."

இதனை யெல்லாம் கவனத்துடன் கேட்டிருந்த சிம்ஹள நாதர் தமக்குள் " ஹா ? டுலீப் சிங் விஷம் வைத்துவிட்டான். அவன் எங்கோ ஓடி ஒளிந்து விட்டான். திலகம் சமுத்திரத்தின் கதி என்ன ? டுலீப்சிங் யார் ? மதிவாணனை ஏன் கொல்லவேண்டும் ? இந்த இரண்டு ரகசியங்கள் யாவரால் சொல்லக் கூடுமோ ? வசந்தமாலையை நான் வீர சிங்கனிடமிருந்து எப்படியாவது காப்பாற்ற வேண்டும்? அவள் இன்னம் பெங்களுருக்குப் போகவில்லை என்றே நினைக்கிறேன். எனக்கு இப்போது உடம்பு சவுக்கியமாய் இருக்கிறபடியால், இன்று மாலையில் நான் இவ்விடத்தை விட்டுப் போகவேண்டும்" என்று கூறிக்கொண்டார்.

அதிகாரம் 15

இரகசியங்கள் வெளியாயின.

—:o:—

பெங்களுரிலே இருக்கும் இளங்கோவருடைய வாசஸ் தலத்திற்கு "வைர மாளிகை" என்பது பெயர். வைரமாளிகை மைசூர் அரசர்களுள் முதன்மை வாய்ந்த ஒருவரால் இளங் கோவருடைய முன்னோர் ஒருவருக்கு இனாமாக அளிக்கப் பட்டபடியால், அது மிகவும் விசேஷ மகிமையை உடையது.

இரகசியங்கள் வெளியாயின.

முன்னதிகாரத்திற் கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு மூன்று வாரங்களுக்கு அப்புறம், ஓர் நாள் காலை பெங்களூர் செல்லும் ரயில் வண்டியினுள் ஒரு முதல் வகுப்புள், இளங்கோவர், வசந்தமாலை, சிம்ஹளநாதர், பாரிஸ்டர், சித்திர ரஞ்சர், திலக சமுத்திரம் முதலியவர்கள் அதிக சந்தோஷத்தோடு பின் வறுமாறு பேசியிருந்தனர்:—

இளங்கோவர்:— சிம்ஹளநாதரே! வீரசிங்கன் ஒரு பெரிய திருடன் என்பதை நான் இது நாள்வரை யெண்ணவே இல்லை. வசந்தமாலையை அத் துரோகிக்குக் கொடுக்கவேண்டு மென்று எண்ணியிருந்தேன். நேற்று நடந்த விசாரணையைப் பற்றி என்ன சொல்வது?—வீர சிங்கன் இரண்டு வாரங் களுக்கு முன்பு மதுரை அரசாங்க பொக்கிஷத்திலே வெகு தந்திரமாய் பணத்தை எடுக்கும்போது, போர்வீரர்களால் கையும் பிடியுமாய் பிடிக்கப்பட்டு தாங்கள் சொன்னது— தனபால செட்டியாரைக் கொள்ளை யடித்ததைப் பற்றியது உண்மையென்று தனபால செட்டியாருடைய மனைவியா லும், இலங்கை துப்பறியவர்களாலும் மெய்ப்பிக்கப் பட்டு கடைசியில் இருபது வருஷகாலம் கடினமான தீபாந்திர சிட்சை விதிக்கப் பட்டான்!

திலக சமுத்திரம்:—இளங்கோவரே! டுலீப்சிங்கை—ஹா! என்னவென்று சொல்வது?—அழகிய நங்கை நாச்சி யார் டுலீப் சிங்கைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு, மதிவாணரையும் ஸிம்ஹளநாதரையும் கொன்றுவிட முயற்

சித்ததில், அவளுடைய முயற்சி எந்தையின் விஷயத்தில் உண்மையாகிவிட்டது.—அவள் எந்தைக்கும் சிம்ஹளநாதருக்கும் விஷமிட்ட அன்றிரவே ராமனுத புரத்திற்குச் சென்றுள்.—ஆனால் எந்தை இறந்த நான்கைந்து தினங் கழித்து, அவளும் கண்டு பிடிக்கப்பட்டு, விசாரணையில் தூக்கு தண்டனை விதிக்கப் பட்டாள்.—அவள் என் தந்தையைக் கொல்லக் காரணம் என்னவோ ?

ஸிம்ஹளநாதர்:—அதன் காரணத்தை நான் அறிவேன் ஆதலால், நான் அதை வைர மாளிகையை அடைந்ததே சொல்லுவேன். நமது பிரயாணிகள் பெங்களூரை யடைந்த அடுத்த நாள் சாயுங்காலம், வைர மாளிகை புஸ்தக அறையிலே ஸித்திர ரஞ்சர், திலக சமுத்திரம், வசந்த மாலே, ஸிம்ஹளநாதர் ஆகிய நால்வரும் நாற்காலிகளின் மீது அமர்ந்து இருந்தனர். இளங்கோவர் வெளியே போயிருந்தார்.

ஸிம்ஹளநாதர் திலகசமுத்திரத்தைநோக்கி, "அம்மா ! மதிவாணர் ஒரு கள்வர் என்பதை நீ அறிவாயா ?" எனக் கேட்டார்.

திலகம்:—ஐயோ ! தாங்கள் சொன்னவைகளில் இருந்து தான் அறிந்தேன். ஐயோ ! யான் ஒரு ராஜீய திருடனுடைய புத்திரி !

இரகசியங்கள் வெளியாயின.

ஸிம்ஹளர்:—அம்மா! வருந்தாதே! வீரசிங்கனுடைய சிட்சை உன்னையும் வசந்தாவையும் இருப்பு விலங்குகளிலிருந்து விடுவித்து விட்டபடியால், இனியாகிலும் தாமதம் செய்யாமல் மர்மங்களைச் சொல்லுங்கள்.

திலகம்:—நானும் மதிவாணரும் ரத்தின புரத்திலே சில வருஷங்களுக்கு முன்பு வசித்திருக்கையில், கமல் குமாரர் வந்தார். அவர் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார். அவருடைய பணம் களவு போனபடியால், அவர் தமது உயிரைப் போக்கிக் கொண்டார்—ஹா! ஐயோ! என்ன கொடூரம்!—அவர் தற்கொலை செய்து கொண்ட செய்தி, எமக்கு நான்கைந்து தினங்களுக்கு பின்னரே தெரிந்தது. அப்போது நாம் வேறு இடத்தில் இருந்தோம்.—எனது கவலையை அகற்ற எண்ணிய மதிவாணர் டாக்டர் ஒருவருடைய உத்தரவுபடி, என்னை வைரக் கோட்டைக் கருகிலே இருக்கும் வேறொரு கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். எந்தை அப்போது பிரதம நியாய மந்திரி அமலாதித்தியருடனும், அவருடைய காரியதரிசி டாக்டர் கௌஜிக் குடனும் ஸ்நேகஞ் செய்து கொண்டார். நானும் அவ்விருவருடைய நட்பையும் ஏற்றுக் கொண்டேன்.—நாம் அநுராஜபுரத்தி லிருக்கும்போது நியாய மந்திரியார் நமது மாளிகைக்கு அடிக்கடி விஜயஞ் செய்வார். வைரக் கோட்டையில் நடக்கும் விருந்து முதலியன எல்லாவற்றுக்கும் மந்திரியார் நம்மை அழைப்பாராதலால், நாமும்

போய் வந்து கொண்டிருந்தோம்.—இரண்டுவருஷங்களுக்கு பிறகு, டாக்டர் கௌஜிக்குடைய தங்கையின் புதல்வி குமாரதேவி என்பவள் வந்தாள். டாக்டர் கௌஜிக் பிரமசாரி ஆனபடியால், குமாரதேவி நமது வீட்டிலே தங்கியிருந்தாள். அவள் எனக்கு சொந்த தங்கையைக் காட்டிலும் மேலான அன்பைக் காண்பித்தவளாக இருந்தாள்.—பிரதம நியாய மந்திரியார் குமார தேவியின் மேல் அதிக காதல் கொண்டிருப்பதை நான் அறிந்தேன்.—அமலாதித்தியரைப் போன்ற கொடியோர் இவ்வுலகிலேயே காணப்படார். ஏழைகளையும் பிரபுக்களையும் அவர் மிகவும் தந்திரமாய் வஞ்சித்தார்! ஐயோ ஏழைகளுக்கும் பிரபுக்களுக்கும் சமயத்திலே சஞ்சீவி போல உதவுவதாக நடித்து, பணம் அளித்து, இறுதியில் அவர்களுடைய சொத்துகளையும் நிலங்களையும் தம் பெயருக்கு மாற்றிக் கொடுக்கும்படி நிர்ப்பந்தித்து, அவர்களை எல்லாம் சொல்லவும் வரையவும் முடியாத நரக வேதனைக்கு உட்படுத்தி மனச் சாந்தி கொள்வார்!—ஐயோ! ஒரு பிரபு அவருடைய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக வேண்டியிருந்த பொழுது, அப் பிரபு மந்திரியாருக்கு விரோதமாகப் பேசினார். பேச, அமலாதித்தியர் அளவற்ற கோபத்தோடு அவருடைய கன்னத்திலே ஒரு அறை அறைய, அப்பிரபுவினுடைய பற்களெல்லாம் கீழே வீழ்ந்து விட்டன!—ஐயோ! நிரம்பவும் சண்டாள குணமுடையவன் அவன்!—சென்ற

இரகசியங்கள் வெளியாயின.

ஏப்ரல் மாதம் நான் வைரக் கோட்டையிலிருந்து, அநுராஜ புரத்திற்கு உல்லாசமாக நடந்து போய்க் கொண்டிருக்கை யில், இரண்டு போலீஸார் என்னைக் கைது செய்து, அம லாதித்தியர் முன்கொண்டு போய்விட்டார்கள். நான், ஒரு பெருத்த தனிகருடைய பணப்பெட்டியை இரண்டாயிரச் சவரன்களோடு அன்று காலை ஒரு ஹோட்டலில் களவாடிய தாக, குற்றஞ் சுமத்தப் பட்டேன்! அன்று காலையில் நான் மந்திரியாருடைய விருந்தாளியாக வைரக் கோட்டையில் இருக்க, யான் எப்படி இந்த அநியாயமான குற்றத்தைச் செய்திருக்கலாகும்—சாட்சிகள் எல்லாரும் எனக்கு விரோத மாகவே, திருடியவள் நானே என்று அபாண்டத்தை சுமத் தினார்கள்.—ஆனால் என் மேல் அந்த அகாதமான அபாண் டம் சுமத்தியது யார்?—அமலாதித்தியர் என்னை அக்குற்றச் சாட்டிலிருந்து விடுதலை செய்யமுடியாது என்பதாக சொல்லி விட்டார். ஆனால் விசாரணை நடக்கும் வரையில் எனக்கு சுதந்தரம் கொடுக்கவேண்டு மென்று அவ்வூர் நியாயாதி பதிக்கு கடிதம் வரைந்து விடுத்தார்.—நான் அமலாதித்தி யரை ஒருநாள் கண்டு "நண்பரே! தாங்கள் கருணையே உருக் கொண்டவர்கள்! என்மேல் சுமத்திய குற்றம் அபாண்டமானது. திருட்டு நடந்த வேளையில் நான் தங்க ளுடைய அரண்மனையில் விருந்தாளி யாகவன்றோ இருந் திருக்கிறேன். நான் எப்படி அந்த ஹோட்டலை யடைந்து களவு செய்ய இயலும்? தாங்கள் உண்மையை அறிவீர்க

ளாதலால், என்னை இந்த அபாண்டத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். திருடி என்ற பெயரோடு வாழ்வதைவிட இறப்பதே மேல்" என்று கூறினேன். என்னை தன்னுடைய பிடியில் வைத்துக் கொண்டு, அவனிடும்—அநியாயமான— கட்டளைகளை யெல்லாம் செய்யட்டும் என்றெண்ணிய அச் சண்டாளன் எனது வேண்டுகோளை மறுத்துவிட்டான். அபாண்டத்தைச் சுமத்தியது அவனே.—நான் கடைசியில் அவனுக்கு ஒரு நிருபம் வரைந்து விடுத்தேன்.—ஆனால் உபயோகமில்லை.—காப்டென் வீரசிங்கன் எந்தையின் ஸ்நேகன். என் மானத்தையே நாசஞ் செய்த அவ்வபாண்டத்தை எனது தந்தை அறியக் கூடாதென்று நினைத்து, வீரசிங்கனையண்மி, "வீரசிங்கரே! என்மேல் சுமத்தப்பட்ட அபாண்டத்தை தாங்கள் மதிவாணரிடமாவது வேறு யாரிடமாவது உரைக்கக் கூடாது. உரைத்திட்டால், யான் உயிர் விடுவேன்" என்றேன். அவனும் ஒப்புக் கொண்டான். என்னுடைய விசாரணை நவம்பர் மாதம் நடக்கும். தாங்கள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும். பின்பு, அமலாதித்தியர் மதுரைக்கு வந்ததும்...............

சிம்ஹளர்:—ஆம். அவைகளை நான் அறிவேன். என்னுடைய ரகசியத்தையும் நீ அறிந்திருப்பதாய்க் கூறினை

சித்திரர்:—என்ன ரகசியம்?

இரகசியங்கள் வெளியாயின.

வசந்தமாலை:—சிம்ஹளநாதரே! உமது ரகசியத்தை நான் அறியலாகாதோ?

சிம்ஹளர்:—ஓ! அறிவாய். சொல்கிறேன். கேளுங்கள்—மூன்று வருஷங்களுக்கு முன்பு நான் காலியிலேயுள்ள அரண்மனை ஹோட்டலில் தங்கியிருந்த பொழுது, ஒருநாள் இரவு சுமார் எட்டு மணி சமயத்தில் நங்கை நாச்சியாருடைய அன்னையின் சகோதரனோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவன் தன்னிடமிருந்த கத்தி ஒன்றை எடுத்து "நண்பரே! இந்த கத்தி எனது நங்கைநாச்சியாரால் கொடுக்கப்பட்டது" என்றான். பின்பு, அவன் அதை என்னிடமே வைத்துப் போய்விட்டனன். ஆனால் உண்மையில் அந்த வாள் வேறொரு பிராயாணியுடையது. மறுநாட் காலை போலீஸார் எனது அறையில் சோதனை செய்த பொழுது, கத்தியைக் கண்டு எடுத்தார்கள். என்னை திருடன் என்று யாவரும் இகழ்ந்ததை திலகசமுத்திரமும் கேட்டிருந்தாள். அதனால் என்மீது சந்தேகம் எப்பொழுதும் கொண்டிருக்கிறாய் போலும்.

திலகம்:—இல்லை, இல்லை. நங்கைநாச்சியாரே ஆண் வேஷம் பூண்டு, உம்மிடமிருந்த பணத்தையபகரிக்கவந்தது. ஆனால் அவள் ஏமாந்து விட்டாள். நீங்கள் பணத்தை பாங்கியில் போட்டிருந்தீர்.—நான் அவளை உடனே போலீசாருக்கு ஏன் காட்டிக் கொடுக்கவில்லை எனக் கேட்பீரோ?—அவள்

இரகசியங்கள் வெளியாயின.

எனக்கு நல்ல தோழியாக இருந்து, திருக்குறள் முதலிய நீதிகளை எடுத்து உரைப்பாள். அவளை எல்லோரும் யோக்கியமானவள் என்று உரைப்பார்கள். ஆதலால் அவளை ஒரு திருடி என்று உரைத்தால், யாவரும் நம்ப மாட்டார்கள். அப்படி நம்பினும் என்னை எல்லாரும் வெறுப்பார்கள்.—மதுரையில் உம்முடன் யான் முதன் முதல் பேசிய போது, நங்கை நாச்சியாரைப்பற்றி மிகவும் ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னேன்.

ஸிம்ஹளர்:—ஆம். உன்னைப் போன்ற விவேக மணிகளை யான் இது வரையில் கண்டிரா விட்டாலும், ஒருத்தியைக் கண்டிருக்கிறேன்.

வசந்தமாலை:—அவள் யார் ?

ஸிம்ஹளர்:—நீயே யோசித்துப் பார்.

திலகம்:—வசந்தா ! நீ தான் அந்த ஒருத்தி

ஸிம்ஹளர்:—இன்னம் தெரிய வில்லையா ?

வசந்தம்:—ஸிம்ஹளநாதரே !

ஸித்திரர்:—திலகசமுத்திரம் ! கமல குமாரன்—என்னுடைய அத்தியந்த நண்பனைப் பற்றி நீ ஒன்றும் சொல்ல வில்லையே.

இரகசியங்கள் வெளியாயின.

வசந்தமாலை:—நண்பரே! கமல குமாரர் உமது நண்பரா?—அப்படி யானால், நான் கூறுவதையாவது உற்றுக் கேட்டு, எனது பரிதாப நிலைமையை யுன்னிப் பாருங்கள். நடந்தது நடந்தபடியே நவிலுகிறேன்!

திலகம்:—கமல குமாரரைப் பற்றி உரைத்திடுதி.

வசந்தம்:—கேளுங்கள். மூன்று வருஷங்களுக்கு முன்பு சிம்ஹளநாதரிடம் நான் "காதல! உம்மை நான் மணக்க முடியாது" என்று சொல்லிய பிற்பாடு, இளங்கோவருடன் ரத்தின புரத்திற்குச் சென்றேன். ரத்தினபுரியில் நான் திலகசமுத்திரத்தையும் மதிவாணரையும் கண்டு, பேசி, சந்தோஷமாக இருந்தோம். பள்ளியில் பயிலுங்கால் திலகசமுத்திரம் என்னோடு வகுப்பில் சேர்ந்து வாசித்தது பற்றி எனக்கு இவள் மீது அளவற்ற பிரியம் ஏற்பட்டிருந்தது. அப்போது தான் நான் தனதாசரிடம் "உம்மை மணந்து கொள்ளுகிறேன்" என்று சொன்னது,—நானும் எனது தந்தையாரும் தங்கியிருந்த அதே ஹோட்டலில் திலகசமுத்திரத்தைக் காதலித்திருந்த கமல குமாரரும் தங்கியிருந்தார். நங்கைநாச்சியார் ஆண் வேஷங்கொண்டு மதிவாணருடைய மாளிகையிலே தங்கியிருந்தாள். அவள் ஒரு கைதேர்ந்த திருடி என்பது பின்னால் எனக்குத் தெரிய வந்தது. அபுரூபமாய் அவள் பெண்

னுடைய தரிப்பாள்.—ஒரு நாள் இரவு திலகசமுத்திரம் என்னிடம் ஓர் கவரைக் கொடுத்து, "இந்த நிருபத்தை உன் ஹோட்டலில் தங்கியிருக்கும் கமல குமாரரிடம் கொடு" என்ன, நான் அதற்கு ஒப்புக் கொண்டேன்.—உடனே மதிவாணரும் திலகசமுத்திரமும் ரத்தினபுரத்தை விட்டகன்றார்கள்—நான் என்னுடைய இடத்தை அடைந்ததும் "ஹா! கமல குமாரரிடம் லிகிதத்தைக் கொடுத்துவிடலாம்" என்றெண்ணியவளாய், நாற்காலியைவிட்டெழுந்திருந்து, கமல குமாரர்சயனித்திருந்த அறைக்குச் சென்று, கதவைத் தட்டினேன். ஆனால் தட்டியதற்கு பதிலே வரவில்லை.—மறுபடியும் தட்டினேன். ஆனால் நான் திறந்திருந்த ஜன்னல் வழியாய் கமல குமாரர் அறியாதவாறு உட் சென்றேன்—ஹா! அங்கு எனது கண்கள் கண்ட காட்சி தான் என்னே! ஐயோ! பயங்கரம்! கோரம்! கையில் ஒரு ரிவால்வருடன் மனக் கொதிப்புடன் பேய் மாதிரியாக அவர் நிற்றலைக் கண்ட எனக்கு குலை நடுக்கமும் பயமும் வந்தன வானாலும், அவைகளை சமாளித்துக் கொண்டு, அவர் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்ற எண்ணங் கொண்டு, கெட்டித்திருந்த அந்த துப்பாக்கியை பிடுங்கப் பார்த்தும், முடியாமல் போய் விட்டது. உடனே அவர் அந்த ரிவால்வரால் தமது உயிரை மாய்த்துக் கொண்டார்!—ஆ! அந்த நிலைமை.........ஐயோ!

மிகவும் பரிதாபம்!—உடனே அவருடைய கையிலிருந்த ரிவால்வரை எடுத்து விடலாம் என்று—அச்சமும் கவலையும் திடுப்பும் பதைப்பும் கொண்ட—மனதை திடப்படுத்திக் கொண்டு, கீழே குனியும் சமயத்தில் எனக்கு பின்புறமிருந்து யாரோ வரும் காலடிச் சப்தம் கட்புலனாயிற்று.—ஆம்! எனக்கு பின்புறத்தில் ஒரு பெரிய கனவான் நின்று கொண்டிருக்கக் கண்டேன்!—அப்பொழுது, தற்கொலை செய்து கொண்ட கமல குமாருடைய அறையில் நானும் அந்த கனவானும் தனித்திருக்கக் கண்டேன். அந்த கனவான் என்னை விளித்து, "நான் உன்னை—என் நண்பனை வேண்டுமென்று செய்த—கொலைக் குற்றத்தின் பொருட்டு, அரெஸ்டு செய்யப் போகிறேன்" என்று கோபத்தோடு கூறினர். மேலும் என்னை நோக்கி, அவர், "நீ இவரைச் சுடுவதை யான் பார்த்தேன். நீ பொறாமை கொண்டு இக் காதகத்தைச் செய்து விட்டாய்! திலகசமுத்திரத்தைக் காதலிக்கும் இவர் உன் மீது காதல் கொள்ளவில்லை........" என்று கூறும்போது, எனக்கு சொல்ல முடியாத பயம் எற்பட்டு விட்டது. நான் உண்மையை உரைத்தும் அவர் நம்பவில்லை—ஆனால் இரண்டு விநாடிகளுக்கு பின்னர் அவர் "சரி. ரிவால்வர் சப்தத்தினுல் ஒருவரும் இன்னம் வரவில்லையாதலால், நீ இப்போது இந்த ஹோட்டலை விட்டுப் போய் விடு" என்று கூற, யான் பிரமித்தவாறு

அதற்கு ஒப்புக்கொண்டேன். ஒப்புக் கொண்டபடியால் யான் இந்நாள்வரை ஒருவருடைய பிடியில் அகப்பட்டிருந்தேன்—என்றாள்.

ஸிம்ஹளர் :—வசந்தம் ! அவன் யார் ?

வசந்தம்:—நீங்கள் இன்னம் அறிந்து கொள்ள [illegible]லயா?—அவனே வீரசிங்கன்! அவனே காப்டென் கங்கா [illegible]!—நான்கு மாதங்களுக்கு முன்பு அவன் என்னிடம் [illegible]து "நீ என்னை மணந்து கொள்ளாவிட்டால், கமல குமா[illegible]ரைக் கொலை செய்தது நீ தான் என்று திலகசமுத்திரத் [illegible]டை சொல்வேன்" என்றான். என்றதைக் கேட்ட நான்—ஒரு பெண்பால்—என்ன செய்யக் கூடும்?

ஸிம்ஹளர் :—காதலி ! அவனைப் போன்ற துரோகியை யான் எங்கும் தலைப்பட்டிலேன்.

ஸித்திரர் :—சரி. வசந்தமாலை! அவன் கூறிய வார்த்தைக்கு அத்தாட்சி வேண்டாம்?

வசந்தம் :—ஐயோ ! மறுநாட் காலையில் வீரசிங்கனுடைய விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில் நான் கமல குமாரருடைய அறையில் இருந்ததை வெளியிட வேண்டாமென்று கேட்டேன். அதுவே என்னை நாக வேதனைக் குட்படுத்தியது.

ஸித்திரர்:—கமல குமாரனிடமிருந்த பணத்தை எல்லாம் திருடி, அதை நங்கைநாச்சியாரிட மளித்து விட்டான் அவ் வீரசிங்கன்! பின்பு அவனும் "கோழித் திருடி கூடக் குலாவுதல்" என்ன, மற்றவர்களுடன் சேர்ந்து பரிதா[illegible]ப் பட்டிருக்கிறுன். ஐயோ! சண்டாளன்!

வசந்தம்:—ஐயோ! அந்த சண்டாளனுலல்லவா [illegible]தனே கஷ்டங்களும் நமக்கு நேர்ந்தன! காதலராகிய [illegible]ஹளநாதரே! தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

ஸிம்ஹளர்:—மன்னிப்பென்ன? கண்மணீ!

தாதை.—திலகம்மா! அமலாதித்தியருடைய வாசக அறையிலோ அல்லது வேறு அறையிலோ ஒரு வனிதை மாண்டு கிடந்தாள். அவள் யார் தெரியுமா?

திலகம்:—அவள்தான் குமாரதேவி.—அமலாதித்தியர் தமது மந்திரிஸ்தானம் நிலைநிற்காது என்பதை அறிந்து, மதுரை செல்லுமுன் குமாரதேவியிடம் கமல விலாஸ் ஹோட்டலின் விலாசத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். கமல விலாஸ் எந்த வீதியில் இருக்கிறது என்பதைக் கேட்ட குமாரதேவி அமலாதித்தியர் தங்கப் போகும் ஹோட்டலின் விலாசத்தைக் காட்ட, நான் விலாசத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு, அவளுக்குகந்த விஷயங்

லைச் சொன்னேன்—மறுநாள் டாக்டர் கௌஜிக் வைரக் கோட்டையிலிருந்த குமார தேவியை அமலாதித்தியருடைய அறைக்கு அழைத்துச் சென்று மந்திரியாருடைய ...சிய பொக்கிஷ அறையைக் காண்பிக்கும்படி கேட்க, ...வள் மறுத்து விட்டாள். திடீரென்று அவள் மார்பிடிப்பு ...று விட்டபடியால், கீழே விழுந்து இறந்து போய் விட் ...ள். பின்பு அவனாகவே ரகசிய வழியை அறிந்து கொண் ...ன போலிருக்கிறது.

ஸிம்ஹளர்:—நான் அவ்வறையின் மர்மத்தைக் கண்டு ...க்கையில், டாக்டர் கௌஜிக் ஏதோ ஒரு பொன்.........

திலகம்:—அந்த பொன் வளையல்களில் குமாரதேவி யின் பெயர் செதுக்கப்பட்டிருக்கும்.

ஸிம்ஹளர்:—சரி.—திலகம்! நீ உன் வாழ் நாட்களை எப்படி...............

திலகம்:—ஐயோ! காதலன் போன பின்பு நான் ஒரு ...ரையும் மணம் புரியேன். ஆனால் நான் இப்போது ஒரு வ... மீது காதல் கொண்டிருக்கிறேன்.

* * * * *

இரண்டு வாரங்களுக்கு பின்னர் வைரமாளிகை எங்கும்

இரகசியங்கள் வெளியாயின.

குதூகலக் கடலில் அமிழ்ந்து விட்டது போல் பெருத்த மங்களகரமான விஷயங்களில் ஆழ்ந்து கிடந்தது.

ஸித்திராஞ்சரை திலக சமுத்திரம் காதலித்திருந்த படியால், ஸிம்ஹளநாதருக்கும் வசந்த மாலைக்கும் விவாகம் நடந்த அதே நாளில் அவ்விருவருக்கும் விவாகமாயிற்று.

விவாகத்திற்கு பின் திலகசமுத்திரமும் சித்திராஞ்சரும் நாகையையடைந்து, ராஜ மாளிகையிலே சந்தோஷ மாய் வாழ்ந்து வரலாயினர். திலகசமுத்திரத்தின் [illegible] சுமற்றப் பட்டிருந்த அபாண்டம் உண்மை யல்ல [illegible] விசாரணையில் வெளி வந்தது.

வசந்தமாலையும் ஸிம்ஹளநாதரும் பெங்களூரிலே உள்ள "வைரமாளிகையில்" இன்ப வீட்டை அடையவேண்டிய ரீதிகளை யெல்லாம் அனுசரித்து வரலாயினர்.

டாக்டர் கௌஜிக் தாம் திருடிய பணத்தால் சௌக்கியமாய் இருக்கிறார்.

பொங்கும் மங்களம் எங்கும் பொலிக!

வசந்த சமுத்திரம்

முற்றும்.

பாரம் 1—5 மனோரஞ்சினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

2411

நவீன தமிழ் நாவல்கள்

[illegible] சிங்கர்	1	4	சௌந்திராபாய்	1	0
சு[illegible]ர் சிங்	1	8	சரித்திர சந்திரிகை	0	12
[illegible]மாள்	1	8	தையல் சுந்தரம்	1	0
[illegible] ரேகை	1	8	ரகுநாதன்	0	12
[illegible]ந்த கேஸ்	1	8	தியாகராஜன்	0	10
[illegible] மனோகரன்	1	0	புஷ்பாவதி	0	10
[illegible]வரை களஞ்சி			நடராஜன்	0	8
யம்	1	0	அம்புஜ விலாசம்	0	8
வஸுமதி	1	8	தனபதி	0	8
மர்ம[illegible]கி	0	12	வாயாடி	0	3
கஜபதி	0	10	சிவகாமி	0	8
நாகரத்தினம்	0	12	ஜெயசுந்தரி	1	4
[illegible]ட்டி	0	12	அதிசய பொக்கிஷம்	1	8
[illegible]ரன்	0	12	தேவலோக கேஸ்	1	8
ஆனந்த ரங்கன்	0	10	அமிர்தசாகரன்	1	4
இராஜாம்பாள்	0	12	குலசேகரன்	1	0

ஸ்ரீ வாணிவிலாஸ புஸ்தகசாலை,
79, சுப்புராய செட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

காதலா? கருணையா?	0	14
ராஜலக்ஷ்மி	0	10
பத்மநாபன்	0	14
தலைவாங்கி	1	0
கமலவல்லி	3	8
விவேகானந்த போதம்	0	10
ரோஜாளி	0	12
ஆங்கில ஆசான்	2	0
இராஜேந்திரன்	1	0
*சுயராஜ்ஜியம்	0	12
ஞானும்பாள்	0	12
சாவித்திரி	0	10
கனகராஜ	0	10
சர்க்கா	0	8
திருவள்ளுவர்	0	8
புஜனராணி	0	8
பூபாலன்	0	8
சுப்பிரமணிய கீர்த்தனை	0	8

தங்கவேணி	0	[illegible]
வசந்த சமுத்திரம்	0	[illegible]
ராமநாதன்	[illegible]	[illegible]
ஸ்ரீ ஸ்வாமி விவேகா[illegible] புஸ்தகம் 1004 உப[illegible] கள்	[illegible]	[illegible]
அருள்மொழிகள்	[illegible]	[illegible]
ஞான ரத்நாவளி 1-2	[illegible]	[illegible]
எனது குருநாதர்	[illegible]	[illegible]
கிழக்கும் மேற்கும்	[illegible]	[illegible]
வேதாந்த இரஹஸ்யம்	2	0
அத்வைத உபதேசம்	0	[illegible]
சுந்திரவதனி	[illegible]	[illegible]
லக்ஷ்மிகாந்தன்	2	0
அங்கயற்கண்ணி	1	[illegible]
மாணிக்கவல்லி	[illegible]	[illegible]
சுவர்ணக்கோணம்	[illegible]	[illegible]
வஜ்ஜிரலேகை	1	4
பூஜாபாகவதம்	0	1[illegible]

ஸ்ரீ வாணிவிலாஸ புஸ்தகசாலை,
79, சுப்புராய செட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.

ப
சு
ந்
த
ெ

காதலா? கருணையா?	0	14
ராஜலக்ஷுமி	0	10
பத்மநாபன்	0	14
தலைவாங்கி	1	0
கமலவல்லி	3	8
விவேகானந்த போதம்	0	10
ரோஜாலி	0	12
ஆங்கில ஆசான்	2	0
இராஜேந்திரன்	1	0
*சுயராஜ்ஜியம்	0	12
ஞானம்பாள்	0	1[illegible]
சாவித்திரி	0	[illegible]
கனகராஜு	0	[illegible]
சர்க்கா	[illegible]	
திருவள்ளுவர்		
புஜனராணி		
பூபாலன்		
சுப்பிரமணிய கீர்த்தனை		

தங்கவேணி	0	[illegible]
வசந்த[illegible]	[illegible]	

ராம[illegible]சுரங்கள்.

ஸ்ரீ [illegible]	ரூ.	
... .	1	4
... .	0	1[illegible]
... .	0	[illegible]
... .	0	[illegible]
... .	0	[illegible]
... .	0	1[illegible]

பதிப்புகள்.

... ...	[illegible]	
... ...	1	0
... ...	1	8
... ...	1	4
... ...	0	[illegible]
... ...	1	[illegible]
... ...	0	2 0
[illegible]ணி	[illegible]	1
[illegible]ி	1	[illegible]
[illegible]ான்	2	8

[illegible]தர நாவல்களும் கிடைக்கும்.

வாணிவிலாச புஸ்தகசாலை,
79, சுப்புராய செட்டி வீதி,
திருப்பாதிரிப்புலியூர்.

ஸ்ரீ [illegible]
79, சுப்பு[illegible]

[illegible] at the Manora[illegible]ini Press, Madras.